THAYAGAM

# தாயகம்

19.11.93

75¢

உண்மை:5
தேடல்:20

# பூனகரி முகாம் மீண்டும் இராணுவத்தின் வசம்

## முகாமை நிர்மூலமாக்கிய புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களுடன் பின்வாங்கினர்

## புலிகளால் சலிப்படைந்த யாழ்.மக்கள்

அசோசியேட்டட் பிரஸ் தகவல்
"புலிகள் உண்மையான ஒரு சுதந்திரப் போராட்டத்தில் சண்டையிடுகிறார்கள் என்பதை உணர்கிறோம். ஆனால் அவர்கள் சொல்கின்ற, செய்கின்ற எல்லாவற்றையும் அங்கீகரிக்கிறோம் என்பதல்ல இதன் கருத்து"
யாழ்.ஆயர் அம்பலவாணர்

மக்களுக்கான உணவுப் பொருட்களில் பத்து வீதம் புலிகளால் எடுக்கப்படுகிறது
அரச அதிபர் மாணிக்கவாசகர்

✪பேச்சுவார்த்தைக்கு தயார் பிரதமர் கூறுகிறார்

✪பலாலி முகாம் மீது தாக்குதல்

✪ கிளிநொச்சி வைத்தியசாலை, யாழ்.கச்சேரி, தேவாலயம் மீது தாக்குதல்

3 கர்ப்பிணிகள் உட்பட பன்னிருவர் பலி

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**

**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி வீடியோகளும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன்,மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

***அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்***

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

# பூனகரி முகாம் மீண்டும் இராணுவம் வசம்

சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நடத்திய தாக்குதலின் பின்னர் மீண்டும் பூனகரி முகாம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. கடந்த சனிக்கிழமை நடந்த இத்தாக்குதலில் விசேட கமாண்டோப் பிரிவும் இராணுவத்தினரும் கடற்படையினரும் கலந்து கொண்டனர். கடல் மார்க்கமாக சிறுவள்ளங்களில் வந்த 1250 பேர் முகாமினை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இவர்கள் அப்பகுதியில் வந்திறங்கிய போது புலிகள் கடுமையான தாக்குதலினை மேற்கொண்டனர். ஆயினும் விமானப்படை, கடற்படையினரின் பாதுகாப்புடன் இவர்கள் அங்கு இறங்கினர். அப்பகுதியில் சிக்குண்டிருந்த 900 இராணுவத்தினருடன் இவர்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். தங்களை மீட்க மற்றப் படையினர் வருவதைக் கண்ட முற்றுகையிடப்பட்ட இராணுவத்தினரில் சில பேர் கடலில் நீந்திச் சென்று அவர்களுக்கு வழிகாட்டினர். முகாமின் தென்பகுதியில் சிக்கிக் கொண்ட நிலையில் இருந்த காயமடைந்த இந்த இராணுவத்தினர் பின்னர் சிகிச்சைக்காக அப்புறப்படுத்தப்பட்டனர். ஜனாதிபதியின் கட்டளைப்படியே இந்த 'துணிகரத் தாக்குதல்' நடத்தப்பட்டதாக பாதுகாப்புச் செயலாளர் வணசிங்க தெரிவித்தார்.

முதலில் இந்த முகாம் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்த போது விமானமூலம் தாக்க முயற்சி நடைபெற்ற போதும் விமானிகள் படையினரும் புலிகளும் கலந்திருப்பதால் தாக்குதல் நடத்த முடியாது என்று தெரிவித்திருந்தனர்.

இந்த முகாம் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்று முதலிலேயே எச்சரிக்கப்பட்டதாகவும் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் முகாமில் சிக்குண்டவர்களுக்கு ஆயுதங்களும் மருந்துப் பொருட்களும் உணவுப் பொருட்களும் விமானம் மூலம் போடப்பட்டதாக கூறினர்.

முகாம்களில் உள்ள ஆயுதங்கள், டாங்கிகள், அதிவேகப்ப படகுகளை அப்புறப்படுத்திக் கொண்ட புலிகள் முகாமைத் தகர்த்த பின்னர் வள்ளங்களில் பின்வாங்கிச் சென்றுள்ளனர். ஐந்து அதிவேகப்படகுகள், இரண்டு டாங்கிகள், பதினொரு ஆட்டிலறிகள், ஐம்பது மெண்இயந்திரத் துப்பாக்கிகள், 400 றைபிள்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

வடபகுதியில் உள்ள இராணுவத் தலைமைப்பீடத்திற்கு இப்பகுதியில் இறந்த இராணுவத்தினரின் உடல்களை அங்கேயே எரிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. புலிகள் இதுவரையும் புலிகள் 304 இராணுவத்தினரின் உடல்களை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர். இதில் 175 பேரின் அஸ்தியும் அடங்கும்.

அத்துடன் சுமார் 150க்கு மேற்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் அப்பிரதேசம் எங்கும் சிதறிக்கிடக்கக் காணப்பட்டது. கையளிக்கப்பட்ட உடல்கள் சிதைந்த நிலையில் இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் கூறியதை அடுத்தே இந்த உடல்களை எரிக்குமாறு இராணுவத்தலைமைப்பீடம் உத்தரவிட்டது. பலரின் உடல்கள் எரிக்கப்பட்டு அவர்களின் சாம்பல் கையளிக்கப்பட்டது.

*4ம் பக்கம் பார்க்க..*

## குடாநாடு, கிளிநொச்சியில் விமானத் தாக்குதல்

முகாம் வீழ்ச்சியின் பின்னர் விமானப்படை விமானங்கள் குடாநாடெங்கும் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. தேவாலயம் ஒன்று குண்டுவீச்சுக்குள்ளானது. யாழ்.கச்சேரி மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் காயமடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. ஆயினும் விமானப்படை இதை மறுத்துள்ளது. கிளிநொச்சிப் பகுதியில் வைத்தியசாலை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரசவ பிரிவு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று கர்ப்பிணிப் பெண்கள் கொல்லப்பட்டனர்.

புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு டாங்கிகள் மீதும் தாக்குதல் நடத்திய போதே தவறுதலாக இந்த குண்டுகள் வைத்தியசாலையில் விழுந்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தேவாலயம் ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த தேவாலயம் கச்சேரிக்கு அருகில் உள்ளது.

கடலேரியில் மூன்று புலிகளின் படகுகளை விமானத் தாக்குதல் மூலம் தகர்த்ததாக இராணுவம் கூறியது.

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் மனம் நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

சிவாஸ் ரேடிங் கோ
3852 Finch Ave East (Kennedy/Finch)
321 2739

## ஏடு இட்டோர் இயல்

# புரிய மறுக்கும் உண்மைகள்

கோட்டைத் தாக்குதலின் பின்னால் புலிகள் பாரிய இராணுவ வெற்றி ஒன்றை ஈட்டியிருக்கிறார்கள். ஒரே தாக்குதலில் இவ்வளவு தொகை இராணுவம் கொல்லப்பட்டதும் இவ்வளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் முதல் தடவை. இருந்தாலும் இந்த தாக்குதல் தனது நோக்கத்தை எய்தி விட்டதா என்ற கேள்விக்கு விடை இல்லை.

சமீபத்திய யாழ் தேவி தாக்குதலின் போது இராணுவம் தொடர்ந்தும் கிளாலியில் நிலை கொள்ள முடியாமல் பின்வாங்கி, இறுதியில் தமது நோக்கம் கிளாலிப் போக்குவரத்தை தடுப்பதே என்று கூறிக் கொண்டது மீசையில் மண் படாத கதை. இதைப் போலவே பூனகரி முகாமும் இறுதியில் அங்கு நிலை கொள்ள முடியாமல் வெளியேறிய பின்னர் நோக்கம் முகாமைத் தாக்குவது தான் என்பது போல பிரசாரம் நடக்கிறது.

இன்றைய நிலையில் பூனகரி முகாம் மீது தாக்குதல் நடத்துவதற்கான காரணங்கள் சில புலிகளுக்கு உண்டு. சமீபத்திய யாழ்.தேவி தாக்குதலின் போது புலிகள் விட்டு ஓடியதான குற்றச்சாட்டு யாழ்ப்பாண மக்களிடையே இருந்தது. இராணுவம் நிலை கொள்ள முடியவில்லை, இழப்புகள் அதிகம் என்றாலும் அதனால் மக்கள் அடைந்த பாதிப்பு அதிகமானது. மீண்டும் கிளாலிப் பயணம் ஆரம்பித்தாலும் மக்கள் மத்தியில் இந்த தாக்குதலில் புலிகளின் செயற்பாடு பற்றிய விமர்சனமே இருந்தது. இதனால் மீளவும் தங்களது ஆதரவை மீட்டுக் கொள்ள வேண்டிய வகையில் ஒரு தாக்குதல் புலிகளுக்கு அவசியமாக இருந்தது.

அத்தோடு நடைபெறப் போகின்ற மாவீரர் தின விழாக்கள் ஒரு ‘தோல்வி விழா’வாக கொண்டாடப்படுவது புலிகளின் இமேஜைக் குறைக்கக் கூடும். (உயிரிழப்புகளைக் கூட துக்க தினமாக கொண்டாடாமல் வெற்றிப் பெருவிழாவாகக் கொண்டாடுகின்ற நிலைமை எம்மிடம்தான் உண்டு) இதனால் இந்தச் சூழ்நிலையில் ஒரு வெற்றி தேவை. அத்தோடு தலைவருக்கும் ஒரு பிறந்த நாள் பரிசாக அது அமைந்து விட்டால் வெற்றி முழுமையும் பெற்று விடும்.

இதில் பூனகரியைப் பிடித்து விட்டால் கிளாலிப் பயணத்தின் ஆபத்துக்களைக் குறைப்பதன் மூலம் தமிழ் மக்களின் இதயங்களை வெல்ல முடியும், மறுபுறத்தில் வாகனங்களின் போக்கு வரத்துக்கு இடம் அளித்தால் பெருமளவு வருமானம் கிடைக்கும் என்ற பெருநோக்கில் நடத்தப்பட்ட தாக்குதல் இன்று எதைச் சாதித்திருக்கிறது? இராணுவம் பாரிய இழப்புகளை சந்தித்திருக்கிறது. உயிர், ஆயுதங்கள் என்ற வகையில் இராணுவத்தின் இந்த இழப்புகள் ஈடு செய்யப்படக் கூடியன. அதற்கான வளங்கள் அரசிடம் உண்டு. போதாதற்கு அப்பாவி மக்கள் மீது குண்டுகள் வீசி அழிக்கவும் முடியும்.

ஆனால் புலிகள் சார்பில் இழப்புகள் சாதாரணமானதல்ல. அபகரிக்கப்பட்ட டாங்கிகளும் துப்பாக்கிகளும் கருவிகளும் தலைவர் பார்வையிடவும் காட்சிக்கு வைக்கவும் பயன்படலாம். இராணுவத்திற்கு எதிரான தாக்குதலில் பயன்படுத்தப்படலாம். இந்த வெற்றிகளுக்கும் அப்பால் உயிரிழந்த 250க்கு மேற்பட்டோரும் மறக்கப்படுவது தான் துயரமானது. மாவீரர் வரிசையில் இவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும் இந்த இழப்புகள் பாரியவை. ஆனையிறவு யுத்தத்தின் பின்பான அதிகளவு புலிகளின் உயிரிழப்புக் கொண்டது இதுவென்று கூறலாம்.

இறுதியாக இராணுவம் மீண்டும் முகாம் பகுதியை மீளவும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன் மக்கள் அடையவிருந்த பயன் போய் விட்டது. முடிவில் புலிகளின் கையில் ஆயுதங்கள் கொஞ்சம் சேர்ந்திருக் கின்றது. அவ்வளவு தான். இன்னொரு பேச்சுவார்த்தை நடக்கும் போது புலிகளுக்கு அங்கு கோரிக்கைகளை முன்வைக்க இது சாதகமாக இருக்கலாம். புலிகளின் தரப்புக்கு பலம் சேர்க்கும் என்று கூறப்பட்டாலும் இன்னொரு பேச்சுவார்த்தைக்கு முன்னர் என்ன நடக்குமோ? அதற்கு முன் பேச்சுவார்த்தையே நடக்குமா என்பதே கேள்விக்குறியாக உள்ளது.

இந்த தாக்குதல் அரசியல் ரீதியாக என்ன பயன் தரும்? இதுவரையும் தற்போதைய இனப்பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை, அதை தீர்ப்போம் என்று சவால் விட்டு வருகின்ற ஜனாதிபதிக்கு சில ‘போதி மரத்து உண்மைகளை’ இந்த தாக்குதல் புலப்படுத்தக் கூடும். அதாவது புலிகளை ‘தாக்கி அழிப்பதற்கு’ முன்பாக இராணுவம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். சமீப காலங்களில் offensive தாக்குதலான யாழ்தேவியும் தோல்வியில் முடிந்தது. defensive நிலையிலிருந்து பூனகரி முகாமும் வீழ்ந்து விட்டது. மீண்டும் முகாமைக் கைப்பற்றியது அரசாங்கத்திற்கு ‘மீசையில் மண் படாத பிரசாரத்துக்கு பயன்படலாம். இரு தரப்பினரும் வெற்றி நமதே என்று கோஷமிட இந்த தாக்குதல் பயன்தரும். ஆனால் அரசின் கையாலாகாத்தனம் வெளியில் தெரிந்து விட்டது. இராணுவத்தில் சரியான ஒரு ‘வசீகரத் தலைமை’ கொப்பேகடுவவிற்கு பின்னால் இல்லை. புதிதாக தெரிவு செய்யப்பட்ட இராணுவத்தினருக்கும் பயிற்சி இல்லை. இந்த நிலையில் இராணுவத் தோல்விகள் ஆச்சரியம் தருவதில்லை. ஆனால் இந்த வெற்றிகளும் தோல்வியும் எதையும் மக்களுக்குப் பெற்றுத் தரப்போவதில்லை.

இராணுவமும் புலிகளும் மாறி மாறி வெற்றி தோல்விகளைச் சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். முகாம் தகர்ப்புகள், பிரதேசங்களை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருதல் என்பதில் இரு தரப்பினரும் பல தடவைகள் வெற்றியீட்டியிருக்கிறார்கள். ஆனால் தீர்வு காண்பதில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டிருக்கிறார்கள். அபகரிக்கப் பட்ட ஆயுதங்கள் பிரதியீடு செய்யப்பட்டி ருக்கின்றன. கொல்லப்பட்ட புலிகள் பிரதியீடு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இன்னொரு தாக்குதலுக்கு ஆயுதமும் புலிகளும் தயாராக நிற்கின்றன.

இந்த தாக்குதல் சில விடயங்களை காட்டி நிற்கின்றது. ஒன்று இவ்வாறான தாக்குதல்களால் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. மக்களுக்கான தீர்வுக்காகவே இரண்டு தரப்பினரும் மோதிக்கொள்கிறார்கள். ஆனால் பாதிப் படைபவர்கள் அவர்களே. தாக்குதல் முடிந்ததும் விமானக்குண்டுவீச்சுக்கள், ஷெல் தாக்குதல்களும் மக்கள் குடியிருப்புகளின் மீதே நடத்தப் படுகின்றன. இதனால் பாதிக்கப்படுவதும் அவர்களே. மீண்டும் கிளாலிக்குள்ளால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பயணிப்பவர்களும் அவர்களே.

ஆனால் அரசாங்கமும் புலிகளும் விளங்க மறுக்கின்ற சில உண்மைகள் இங்கும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இராணுவ நடவடிக்கையினால் இனப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. அது போலவே ஈழத்தையும் பெற முடியாது.

# புலிகளால் சலிப்படைந்த யாழ்.மக்கள்

## அசோசியேட் செய்தி நிருபர் தகவல்

**'புலிகள் உண்மையான ஒரு சுதந்திரப் போராட்டத்தில் சண்டையிடுகிறார்கள் என்று உணர்கிறோம், ஆனால் அவர்கள் செய்கின்ற, சொல்கின்ற எல்லாவற்றையும் நாம் அங்கீகரிக்கின்றோம் என்பதல்ல இதன் கருத்து' என்று அங்கிளிக்கன் ஆயர் அம்பலவாணர் தெரிவித்துள்ளர்.**

சமீபத்தில் அசோசியேட்டட் செய்தி நிறுவன நிருபர் டெக்ஸ்டர் குருஸ் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். இவர் யாழ்ப்பாண மக்களின் நிலை பற்றி தெரிவித்துள்ளார். இந்தச் செய்திக்குறிப்பிலேயே ஆயர் குறிப்பிட்ட தகவல் உள்ளது.

பத்து வருடங்களின் கொரில்லா யுத்தத்தினால் தங்கள் வாழ்வு மோசமானதை அடுத்து சலிப்படைந்த மக்கள் தற்போது புலிகள் விடயத்தில் பொறுமையிழந்துள்ளனர்.

'இது ஒரு சிறை போன்ற வாழ்க்கை. சுடப்படாமல் நீங்கள் வெளியே போக முடியாது' என்கிறார்.

சில வருடங்களுக்கு முன் புலிகள் விடயத்தில் உற்சாகமான ஆர்வம் காட்டிய தமிழர்கள் புலிகளுக்கு ஆதரவளித்தனர். தற்போது சிலர் அங்கு செல்கின்ற பத்திரிகையாளர்களை நிறுத்தி தங்கள் அதிருப்தியை தெரிவிக்கின்றனர்.

'புலிகள் எங்கள் உற்பத்திகளில் ஒரு பகுதியை வரி என்று சொல்லி எடுக்கிறார்கள். நாங்கள் உற்பத்தி செய்வதோ கொஞ்சம், அதை பிரிப்பது என்பது கஷ்டமானது' என்கிறார் விவசாயி ஒருவர்.

'நாங்கள் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அகப்பட்டுள்ளோம். புலிகள் தங்களுக்கு மட்டுமே விளங்குகின்ற ஒரு தர்க்க ரீதியான நியாயத்தை நம்புகிறார்கள்' என்கிறார் ஒரு கடைக்காரர். தங்கள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்ற அச்சத்தில் இவர்கள் தங்கள் பெயர்களை வெளியிட வேண்டாம் என்கிறார்கள்.

பத்திரிகைகள் சுயதணிக்கை மேற்கொள்கின்றன. புலிகளை அவை விமர்சிப்பதில்லை. புலிகள் கொடுக்கும் எல்லா அறிக்கைகளையும் பிரசுரக் கின்றன. புலிகளுக்கு சொந்தமாக பத்திரிகைகளும் உள்ளன.

'புலிகள் உண்மையான ஒரு சுதந்திரப் போராட்டத்தில் சண்டையிடுகிறார்கள் என்று உணர்கிறோம், ஆனால் அவர்கள் செய்கின்ற, சொல்கின்ற எல்லாவற்றையும் நாம் அங்கீகரிக்கின்றோம் என்பதல்ல இதன் கருத்து' என்கிறார் அங்கிளிக்கன் ஆயர் ஜோன் அம்பலவாணர்.

'எதிர்காலம் மந்தமாக உள்ளது, இராணுவம் எங்கள் வாயிலில் உள்ளது, நாங்கள் முழு நாட்டையுமே யுத்தத்திற்கு தயாராக்குகிறோம்' என்று பூனகரி யுத்தத்திற்கு சில நாட்கள் முன்னர் பாலசிங்கம் தெரிவித்தார்.

புலிகளினாலும் அரசாங்கத் தினாலும் கடும் அழுத்தத்தில் மக்கள் உள்ளார்கள் என்று செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையில் பணிபுரியும் பீட் ஸ்வைட்சர் கூறியுள்ளார்.

பல தமிழர்கள் இப்போதும் புலிகளை ஆதரிக்கிறார்கள். ஆயினும் குடாநாட்டில் வாழ்வு சிரமமாக உள்ளது. பல பத்திரிகையாளர்கள் கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக பருத்தித்துறை சென்று அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க ஜீப்பில் யாழ்ப்பாணம் செல்கிறார்கள்.

யுத்தத்தின் காயங்கள் எங்கும் உள்ளன. குண்டு வீசப்பட்ட கட்டடங்கள், அழிக்கப்பட்ட வாகனங்கள், ஷெல் தாக்குதலின் வடுக்கள் எல்லா இடமும் உள்ளன. இறந்த புலிகளின் படங்கள் சுவர்களில் நிறைந்துள்ளன. அங்கு வாழ்கின்ற எட்டு லட்சம்பேரில் இரண்டரை லட்சம் பேர் அகதி முகாமில் உள்ளனர்.

பல விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

1990ம் ஆண்டு மின்சாரம் இல்லை. மின்கலங்கள் இல்லாமல் மக்கள் சைக்கிள் டைனமோ உதவியுடன் ரேடியோ கேட்கிறார்கள்.

நிலைமை மோசமான நிலையில் புலிகளும் தங்கள் பங்கிற்கு இன்னமும் மோசமாக்குகிறார்கள். நாஸிகளின் முகாம்களைப் போன்ற முகாம்களை வைத்திருக்கிறார்கள். அரசுக்கு தகவல் கொடுத்த முப்பது, நாற்பது பேரை வைத்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். வடக்கே ஒவ்வொரு மாதமும் மக்களுக்குச் செல்கின்ற 11 ஆயிரம் தொன் உணவுப் பொருட்களில் பத்து வீதம் புலிகளால் பறிக்கப்படுகிறது என்கிறார், அரச அதிபர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்.

சிறிய வியாபார நிலையங்களில் இருந்து பத்து வீத வருமான வரி அறவிடப்படுகிறது. பெரிய நிறுவனங்கள் மாதம் மாதம் லாபமோ, நட்டமோ பெருந்தொகை வரியாகச் செலுத்த வேண்டும். ஹோட்டல் ஒன்று மாதம் பதினையாயிரமும் போட்டோ கழுவும் நிலையம் பத்தாயிரமும் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் டெக்ஸ்டர் குறூஸ் தெரிவித்திருக்கிறார்.

# பூனகரி முகாம்..

அத்துடன் இதுவரையும் முன்னூறுக்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள்.

தங்கள் தரப்பில் 93 பேர் இறந்ததாக புலிகள் முதலில் தெரிவித்திருந்தனர். பின்னர் வந்த செய்திகளின்படி 250 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருந்தனர். ஆயினும் இராணுவம் இறந்த புலிகள் 350 பேர் என்று கூறியுள்ளது.

பலாலியில் ஹெலிகொப்டர்கள் காயமடைந்தவர்களைக் கொண்டு வந்து இறக்கும் அதே வேளை புதிய துருப்புகளும் ஆயுதங்களும் சென்ற வண்ணம் உள்ளது. அத்துடன் காயமடைந்தவர்கள் விமானங்களில் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

சூழவர உள்ள சேற்றுப்பகுதியூடாக புலிகள் வந்து இறங்கி வியாழக்கிழமை தாக்குதல் நடத்தியதாக இராணுவ அதிகாரி லால் வீரசூரிய தெரிவித்தார். அலை அலையாக எல்லாத் திசையிலிருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் கூறினார். புலிகள் எண்ணிக்கையிலும் திறமையிலும்தங்களை மிஞ்சி விட்டதாக அவர் பலாலி முகாமில் வைத்து தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வணசிங்க கடந்த சனிக்கிழமை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவத்தை இந்த தாக்குதல் ஆச்சரியப்பட வைத்தது என்று கூறியுள்ளார்.

ஆனால் மீண்டும் முகாம் தமது பிடிக்குள் வந்துள்ளதாக இராணுவம் அறிவித்தவேளை புலிகளின் பரிஸ் கிளை தனது அறிக்கையில் பூனகரி கடற்படை, இராணுவ தளங்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் மேலும் புலிகள் அங்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவித்திருந்தது.

இங்கு நிலை கொண்ட கஜபா ரெஜிமெண்ட் பிரிவினரே இறுதி வரை வெளிப் பகுதியுடன் தொடர்புகளைப் பேணிக் கொண்டதுடன் எதிர்த் தாக்குதல்களிலும் ஈடுபட்டிருந்தனர். மென்படைப் பிரிவினரே பெருமளவில் கொல்லப்பட்டதாகவும் அவர்களுடனான வானொலி தொடர்பும் முதலில் தாக்குதலின் போது துண்டிக்கப்பட்டிருந்தது.

இவர்களில் முப்பது கடற்படையினரும் ஆறு இராணுவத்தினரும் கடலேரியின் ஊடாக நீந்திச் சென்று ஆனையிறவை அடைந்தனர்.

பிந்திய செய்திகளின்படி இதுவரையும் 272 இராணுவத்தினரின் உடல்கள் மீட்கப்பட்டன. 145 பேர் காணாமல் போய்விட்டார்கள். இவர்கள் இறந்திருப்பதாக அஞ்சப்படுகிறது. அத்துடன் எழுபது பேர் வரை புலிகள் பணயமாக்கியுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்தது. 500 இராணுவத்தினர் பலவேறு வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தங்களின் பிள்ளைகள், கணவர்மாரின் நிலைகளை அறிந்து கொள்ள இராணுவத்தினரின் குடும்பத்தினர் இராணுவ தலைமையத்தின் முன்னால் திரண்டுள்ளனர்.

அத்துடன் பூனகரி முகாம் மீது தற்போது புலிகள் தாக்குதல் நடத்துவதாக இராணுவம் தெரிவித்தது. தங்கள் நிலைகளைப் பலப்படுத்திக் கொண்ட துருப்புகள் அருகில் உள்ள காடுகளில் மறைந்திருக்கக் கூடிய துருப்புகளை தேடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. தற்போது பூனகரி முகாமைச் சூழ பத்து கிலோமீற்றர் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாகவும் வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிரேட்ட இராணுவ அதிகாரிகள் விஜயம் செய்து நிலைகளைப் பரிசீலிப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கூறுகிறது.

# மசூதிக்குள்ளிருந்தவர்கள் சரணடைந்தனர்

32 நாள் முற்றுகையின் பின்னர் காஷ்மீர் மசூதிக்குள்ளிருந்த தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர். இதனால் நரசிம்மராவின் அரசுக்கான ஆதரவு அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த முற்றுகையின் போது நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 65 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

அதிகாலை ஒரு மணி முதல் இரண்டு மணி வரை 65 பொதுமக்களும் தீவிரவாதிகளும் சரணடைந்த பின்னர் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்ட பின்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கோயிலுள் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 13 ஏ.கே துப்பாக்கிகள், ஒரு ஸ்னைப்பர் துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன. பத்துப் பத்துப் பேராக வெளியே வந்த அவர்கள் தங்களை அடையாளம் காட்டி சரணடைந்தனர். இவர்களில் இருவர் வெளிநாட்டார் ஆவர். இவர்கள் காஷ்மீரின் பாகிஸ்தான் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இந்தச் சரணாகதிக்கு வழியமைப்பதற்காக இரு தரப்பினரும் ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்ததாகவும் முன்னர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தவிர்ந்த மற்றவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என்று அரசு மறுத்துள்ளது. இருப்பினும் தங்களை இராணுவம் விசாரிக்கக் கூடாது என்று தீவிரவாதிகளின் நிபந்தனைப்படி இராணுவம் அவர்களை விசாரிக்கவில்லை என இராணுவத் தளபதி கன்வர் தெரிவித்திருந்தார்.

இவர்கள் சரணடைந்த பின்னர் ஆறு முஸ்லிம் இராணுவத்தினர் உள்ளே அனுப்பப்பட்டு மசூதி சோதனையிடப்பட்டது.

அரசாங்கம் பொறுமையுடன் இருந்ததால் வெற்றி பெற்றிருக்கிறது என பத்திரிகைகள் பாராட்டியுள்ளன.

தற்போது மசூதியைச் சூழ பராஇராணுவப் பிரிவினர் காவல் நிலைகளைப் பலப்படுத்துகின்றனர். இவர்கள் அங்கு நிலை கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பெண்களின் ஊர்வலத்தை பெண் பொலிசார் கலைத்ததுடன் பெண்களை தாக்கினர்.

# பலாலி முகாமில் தாக்குதல்

பூனகரி முகாமில் தாக்குதல் நடந்த வேளையில் பலாலி முகாமிற்குள்ளும் புலிகள் ஊடுருவி தாக்குதல் நடத்தியுள்ளனர். இராணுவத்தினர் போன்ற தோற்றத்துடன் இவர்கள் விமானங்களை தகர்க்கும் நோக்குடன் உள்ளே நுழைந்ததாகவும் இவர்கள் அனைவரும் தற்போது கொல்லப்பட்டதாகவும் இராணுவம் கூறியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை பதினறு புலிகள் முகாமுக்குள் இன்னமும் உள்ளதாகவும் அவர்கள் இராணுவத்தினர் போன்றே நடமாடக் கூடும் என்றும் அவர்களை தேடும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் பலாலியில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

புலிகள் இந்த தாக்குதலில் ஐந்து இராணுவத்தினரும் பன்னிரண்டு புலிகளும் கொல்லப்பட்டதாகவும் சனிக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கிடைத்த செய்திகளின்படி 25 புலிகள் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் இவர்கள் அனைவரும் முகாமிற்குள் அகப்பட்டுக் கொண்டதாகவும் இராணுவம் கூறியது. ரொக்கட்டுக்களால் உந்தப்படும் கிரனெட்டுக்கள், இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் இவர்கள் முகாமிற்குள் நுழைந்தனர். இவர்களில் பதினைந்து பேர் தப்பி விட்டதாகவும் கூறப்படுகிறது.

# பேச்சுவார்த்தைக்கு தயார் பிரதமர் கூறுகிறார்

சமீபத்திய இராணுவத் தாக்குதலின் பின்னர் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக பிரதமர் கூறியுள்ளார். பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருப்பதாகவும் தற்போதைய யுத்தம் அதை மாற்றவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த யுத்தம் முடிந்த பின்னர் இது பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி சகல படைத் தளபதிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளார் என்றும் பிரதமர் கூறினர்.

இந்த யுத்தத்தை நடத்தக் கூடிய வலிமையுள்ள தலைவர்கள் தற்போது இல்லை என்றும் இந்த நிலை தொடர்ந்தால் பிரபாகரன் கொழும்புக்கு தனது படைகளுடன் வருவார் என்றும் உப சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்திருக்கிறர். துருப்புகளுக்கு போதிய பயிற்சியோ, உணவோ, உடைகளோ இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினர்.

அரசாங்கத்தால் இந்த யுத்தத்தை நடத்த முடியாது என்பது தெளிவாகி விட்டது. ஜனாதிபதி விஜேதுங்க தற்போது தற்போதைய பிரச்சனை பயங்கர வாதப் பிரச்சனையே என்று கூறுவதை தவிர்க்க வேண்டி வரும் என்று முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக கூறியுள்ளார்.

தாங்கள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதான பிரமையை ஏற்படுத்தும் முயற்சியை அரசு செய்வது கடினமாக இருக்கும் என்று ஹெக்டர் அபேவர்த்தன கூறியுள்ளார்.

## மடு முகாமிற்கு செஞ்சிலுவைச் சங்கம்

மடு அகதிகள் முகாமிலிருந்து ஐ.நா அகதிகள் அமைப்பு வெளியேறிய திலிருந்து அப்பகுதியை நிர்வாகிக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை இலங்கை அரசு நாட உத்தேசித்துள்ளது. ஐ.நா அகதிகள் அமைப்பு உணவு விநியோகத்திற்கும் முகாம் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருந்தது.

தற்போது உணவைக் கொண்டு செல்ல செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி நாடப்படும். ஆனல் விநியோகம் அரச அதிபராலேயே நடத்தப்படும்.

# ஜனாதிபதி வேட்பாளராக விஜேதுங்க

அடுத்த தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்காக விஜேதுங்க வையே ஐ.தே.கட்சி தெரிவு செய்துள்ளது. 1994 டிசம்பரில் நடைபெறவிருக்கும் இந்த தேர்தலின் பின்னர் அடுத்த பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடைபெறும்.

இந்த வருட வரவு செலவுத்திட்டமும் இந்த தேர்தலை மனதில் கொண்டே முன்வைக்கப் பட்டது என்று கூறப்படுகிறது. தற்போதைய விதிகளின்படி மாத வருமானமாக ஆறுயிரம் ரூபா வரை பெறும் தனியார் ஊழியர்களிற்கு வரிவிலக்கு அளிக்கப்படும். இதுவரையும்1800 ரூபா வரையே வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

வெங்காயம், டின் மீன் போன்றவற்றுக்கான வரிகள் குறைக்கப்பட்டதுடன் குடிபானங் களின் விலைகளும் குறைக்கப் பட்டுள்ளன.

# வடக்குகிழக்கில் தேர்தல்

கிழக்கு மாகாணத்திலும் வடக்கில் சில பகுதிகளிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும்படி தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா பகுதிகளில் வேட்பு மனுத்தாக்கல் டிசம்பர் முதலாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை நடைபெறும். ஆயினும் தேர்தலுக்கான திகதிகள் நிர்ணயிக்கப்படவில்லை.

**ராவய ஆசிரியர் குழுவின் யாழ் பயணக் கட்டுரை அடுத்த வாரம் வெளிவரும்**

## ஆனையிறவைத் தாக்க முயற்சி

பூனகரித் தாக்குதலின் பின்னர் புலிகள் ஆனையிறவு முகாம் மீது தாக்குதல் நடத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதாக இராணுவம் கூறியுள்ளது. ஆனையிறவு முகாமைச் சூழ புலிகள் அதிகளவில் குவிக்கப்படுவதாகவும் வானலைகளில் அதிகளவில் புலிகளின் வானொலி அலைகள் நடமாடுவதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் குடாநாட்டிலிருந்து உள்ளேயும் வெளியேயுமான பயணங்கள் புலிகளால் தடை செய்யப்பட்டுள்ளன. அத்துடன் செஞ்சிலுவைச் சங்கம் உணவுக் கப்பல்களில் ஆட்களை ஏற்றிச் செல்வதை நிறுத்தியுள்ளது.

வடபகுதி முகாம்களில் இராணுவத்தினர் தங்கள் எல்லைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

## இழப்புகள் அதிகம்

பிந்திய செய்திகளின்படி இன்னமும் முழுமையான இராணுவ இழப்புகள் பற்றிய செய்திகள் கிட்டவில்லை. ஆறு அதிகாரிகள் உட்பட 194 உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. ஒன்பது அதிகாரிகள், 428 இராணுவத்தினர், 200 கடற்படையினர் இன்னமும் காணாமல் போயுள்ளனர்.

புலிகள் சுமார் 400 பேருக்கு இறந்திருக்கலாம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வியாழக்கிழமை நடந்த தாக்குதலை தலைமை தாங்கிய அன்பு இறந்ததாக அவர் தெரிவித்தார்.

16 அதிகாரிகளும் 419 இராணுவத்தினரும் காயமடைந்துள்ளனர்.

## கண்டியில் கல்வீச்சு

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பதட்ட நிலை உருவாகியதை அடுத்து பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியதாக செய்திகள் கூறுகின்றன. கண்டியில் சில இடங்களில் கல்வீச்சுக்கள் இடம் பெற்றிருக்கின்றன. நாட்டு மக்களை அமைதியாயிருக்கும்படி ஜனாதிபதி ஏற்கனவே கோரியிருந்தார்.

## வீட்டுக்கு ஒருவர் இயக்கத்தில் சேரக் கோரிக்கை

சமீபத்திய யாழ்.தேவி தாக்குதல் பற்றிய வீடியோ தமிழீழப் பகுதிகளில் காண்பிக்கப்பட்டு வருகிறது. கிராமங்கள் தோறும், பாடசாலைகளிலும் இந்த வீடியோக்கள் காண்பிக்கப்பட்டு ஆட்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். வயது வேறுபாடு இன்றி அனைவரும் யுத்தத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. மாவீரர் தினக் கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்களும் நடைபெறுகின்றன. பந்தல்கள் அமைக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

அத்துடன் சிற்றூரவையினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதையும் விட குடும்பம் தோறும் தொண்டர் ஒருவர் அனுப்பப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க கோரிக்கை

ஜே.வி.பி காலத்தில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் காணாமல் போன இளைஞர்களின் பெற்றோர்கள் இந்த காணாமல் போதல் பற்றி சுதந்திரமான விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். அரச ஆணைக்குழுக்கள் எந்த விதமான அதிகாரமும் கொண்டிராததால் சுதந்திர ஆணைக்குழுக்களே நியமிக்கப்பட வேண்டும் என்று சந்திரா பீரிஸ் கூறியுள்ளார்.

35 ஆயிரம் பேரை உறுப்பினராகக் கொண்ட காணாமல் போனவர்களின் பெற்றோரும் குடும்பத்தினரும் என்ற அமைப்பின் செயலாளரே சந்திரா பீரிஸ் ஆவர்.

அத்துடன் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும், தற்போது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 1500 பேர் விடுவிக்கப்பட வேண்டும் என்று இவர் கோரிக்கை விடுத்தார்.

கடந்த செவ்வாய் முதல் வியாழன் வரை இந்த அமைப்பு கண்காட்சி ஒன்றை நடத்தியது. இதில் காணாமல் போனவர்களில் 4500 பேரின் பெயர்களும் சிலரின் படங்களும் இருந்தன. அதத்துடன் ஆயுதங்கள் தாக்கிய இராணுவத்தினரின் படங்களும் இரத்தம் வழியும், எரிந்த உடல்களின் வரைபடங்களும் காண்பிக்கப்பட்டன. 1990 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு ஊர்வலங்கள், கூட்டங்கள், உண்ணாவிரதங்கள் போன்றவற்றை நடத்தி வந்திருக்கிறது.

அரசாங்கம் 1991 தை மாதத்தின் பின்னர் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க குழு அமைக்கப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலானவர்கள் 1989-90 இலேயே காணாமல் போனதாக சந்திரா பீரிஸ் கூறுகிறார்.

இந்த அமைப்புக்கு வடக்கு கிழக்கில் இரண்டாயிரம் தமிழர் உறுப்பினராக உள்ளனர்.

இலங்கை பிரஜைகளாகிய நாம், இலங்கை அரசாங்கத்திடம் இல்லாமல் வேறு எங்கு நியாயத்தை எதிர்பார்க்க முடியும் என்று கேட்கிறார் மகனை இழந்த சந்திரபால டி சில்வா. தன் மகனைக் கொன்றவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்கிறார் அவர். குறைந்த பட்சம் அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா, இறந்து விட்டார்களா என்பதை அறிய வேண்டும் என்கிறார் அவர். இவரது மகன் 1989 இல் காணாமல் போன பாடசாலை மாணவர்களில் ஒருவர்.

## பன்னாட்டு தமிழுறவு மன்ற மூன்றும் மாநாடும் தேசியவாதமும்: ஒரு பார்வை

**செ.தனபால்**

ஐரோப்பாவில் இருக்கக்கூடியவர்கள் அரசியல், சமூக விஞ்ஞானத்திற்கூடான ஒடுக்குமுறைக்கு எதிராக கருத்தரங்கம் கலைநிகழ்சிகள் கலைநிகழ்ச்சி இல்லாத கருத்துப் பரிமாற்றங்களாகவும் பத்திரிகை, சஞ்சிகைக்கூடாகவும் எழுதிக்கொண்டும் போராட்ட இலக்கியத்தை வளம்படுத்தி வருகிருர்கள். இதே ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் பல நாடுகளில் குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளிலும் பல அறிவியல் நிகழ்சிகள் நடைபெற்றன. உதாரணத்திற்கு ஜேர்மனியில் ஆரம்பித்த இலக்கியச் சந்திப்பு 15 வது பேர்லினில் 93 ஏப்பிரல் மாதம் நடைபெற்று 16 வது சந்திப்பு ஆகஸ்ட் 7,8 ம் திகதியில் ஒல்லாந்தில் நடைபெற்றது பேர்லின் பன்னுட்டுத்த.மன்ற மகாநாட்டுடன் ஒப்பிடுவோமாஞல் அடிப்படையில் சில வித்தியாசங்களைக் காணமுடியும். அதாவது மொழி அழிந்துவிடக் கூடாது என்ற கருத்து இருக்கிறது. அதற்காக மொழியின் பெருமையை பறைசாற்றித் திரிவதோ மொழி அடிப்படையிலான இன வாத கலாச்சார வெறிகளோ கிடையாது. ஈழவிடுதலையையும் அதனை முன்னெடுக்கும் சுயநிர்ணய உரிமைகளின் வழிகாட்டல்களையும் ஈழவிடுதலைப் பாதைகளின் தடைகளில் ஒன்ருகவும் முக்கியமாகவும் இருக்கக்கூடிய சமூக விஞ்ஞான சீர்த்திருத்தம் பற்றிய முற்போக்கான அரசியல் கருத்துப் பரிறமாற்றங்களுடன் கூடிய விவாதமேடையாக அமைத்துச் செயல்படுகிருர்கள். சபையில் இருப்போர் எழுந்து கை உயர்த்தி தனது மாற்றுக் கருத்தை தெரிவிக்க முடியும். அத்துடன் பெண்நிலைவாத கருத்துக்களும் ஆணுதிக்க தாக்கம் பற்றியும் நிகழ்ச்சியில் முக்கிய இடம்பெறுகிறது. உலக ஒடுக்கு முறைகளும் வளர் முகநாடுகளின் ஒடுக்குமுறை வடிவங்கள் பற்றிய தர்வுதேசவிமர்சனங்களுடன் அரசியல் விமர்சகர்கள் பங்கு பற்றுகிருர்கள். மனிதநேயம்

13ம் பக்கம் பார்க்க...

## வடபகுதியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட மூன்றும் ஆண்டு நிஜனவு

# பொதுக்கூட்டம்

**பேச்சு,கவியரங்கம்**

**21.11.93**

**ஞாயிற்றுக்கிழமை**

**மாலை 5.30**

100 St.George St
Sydney Smith Hall
Auditorium 2117
(St.George Subway)

தொடர்புகளுக்கு
502 2043/ 968 2603


**ATLANTIC AUTO CLINIC LTD**

1960 LAWRENCE AVE EAST
755 8550
CALL
MIKE or RAJAN

Car Certification
29.99

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
திருத்துவதில் பல வருடம் அனுபவம் உள்ளவர்கள்

We use Quaker State Oil



# முனியின் பதில்கள்

பூநகரியை புலி அடித்து இராணுவம் ஓடிவிட்டதே? விடுதலைப்புலிகளின் இராணுவத்திற்கு இது மாபெரும் வெற்றித்தானே முனிவா!
சி. கணேசானந்தன் ரொரன்டோ
**சந்தேகமில்லை. வெற்றி தான். புலி அடித்ததால் இராணுவம் கைவிட்ட முகாமை புலிகள் பிடித்தனர்....**

முனிவரே புலிகள் பலமிழந்து வருகிறார்கள் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கும் நேரத்தில் பூனகரி முகாமை தாக்கி முகாமையே நிர்முலமாக்கிவிட்டார்கள் என்று தொலைக்காட்சியில் பார்த்தேன் இதை எந்த அளவுக்கு நம்பலாம்? (சஞ்சயனை கேளும் என்று சொல்லவேண்டாம்)
ஆர்.எஸ். ரொரன்டோ
**புலிகள் இராணுவ முகாமை தாக்கியது உண்மை. ஆனால் பிந்திக் கிடைக்கும் செய்திகளின்படி இராணுவம் மீண்டும் அந்த இடத்தில் நிலை கொண்டுவிட்டதாக தெரியவருகிறது. (இதையாவது நீங்கள் சஞ்சயனைக் கேட்டு அறியலாம் தானே)**

ஓய் கம்பியூட்டர் முனி... புலி சிங்கள இராணுவத்தை ஓட ஓட விரட்டியிருக்கிறது. பூனகரியில் புலிக்கொடி பட்டொளி வீசி பறக்கிறது. விரைவில் தமிழீழம் வரப்போகிறது. வாழ்க பிரபாகரன் என்று இனியாவது சொல்லும்.
சிவா ஸ்காபரோ
**ஊஹூம் ... சொல்லமாட்டேன். முன்பு புலிகள் கோட்டையை அடித்து முடிந்ததும் கூட இப்படித் தான் பலர் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் ஆனந்தக் கூத்தாடினார்கள். பிறகு? பொறுமை தம்பிகாள் பொறுமை......**

ஜோன் கிரெட்ஷியான் ஆட்சியைப் பற்றி சுருக்கமாக சொல்லுவீரா முனியரே!
நவீனன், பாரிஸ்
**புதிய களகு.**

கனடாவிலிருந்து கியூபெக் பிரிந்தால் நட்டம் கனடாவிற்காக? கியுபெக்கிற்கா?
நவீனன் பாரிஸ்
**கனடாவிலிருந்து கியூபெக் பிரிவது பகல் கனவு அரசியல்வாதிகளின் கனவுகளுக்கு அப்பால் பல யதார்த்தங்களும் உள்ளன.**

வை.கோபாலசாமி கருணாநிதி பிளவுக்கு ஈழப் புலிகளின் உளவுப்படை காரணமாக இருக்குமா?
இரா. ராஜகோபாலன் மொன்றியால்
**கருணாநிதி தனது இறுதிக் காலத்திற்கு வந்து கொண்டிருக்கிறார். இந்த நிலையில் கட்சியின் பொறுப்பை புதியவர்களிடம் கௌரவமாக ஒப்படைக்க வேண்டும். பதவி மோகத்திற்கு கட்சிக்கட்டுப்பாடு என்று முலாம் பூச முயல்வாரேயானால் இருப்பதையும் பறிகொடுத்து விடுவதாகத் தான் போய் முடியும். வைகோ ஒன்றும் பெரிய புலி ஆதரவாளரல்ல. தற்போதைய நிலையில் முன்பு கருணாநிதி செய்தது போல வைகோவும் புலியை ஆதரிக்கிறார். பதவி கிடைத்தால் வை.கோவும் புலியை கைவிடுவார் திராவிட பாரம்பரியம் அப்படி.... (இதற்கும் புலிகளின் உளவுப்படைக்கும் சம்பந்தம் என்பது சில உளறுப்படைகளின் பேச்சு)**

கலைக்கதம்ப நிகழ்ச்சிக்கு 25க்கு மேற்பட்ட கலைஞர்கள் வருகை தருகிறார்கள் என டிக்கட் விற்பனை செய்துபின்பு ஆறுபேர் மட்டுமே வருகை தந்தனர். இந்த முறைகேட்டிற்கு அமைப்பாளர்கள் என்ன பதில் சொல்வார்கள்?
எஸ். லிங்கேஸ்
**"பல தவிர்க்க முடியாத காரணங்களினால்..." என அமைப்பாளர்கள் தெரிவித்தாலும், அந்த தவிர்க்க முடியாத காரணங்களில் சில அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். தெரிந்தும் கூட வேண்டுமென்றே விளம்பரங்களை செய்வதும் அதன் மூலம் அவப்பெயருக்கு உள்ளாவதும் இனிமேல் இதுபோன்ற நிகழ்சிகளை ஒழுங்கு செய்பவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும் (ரொரன்டோ வந்திருந்த நடிகன் பிரசாந் தமிழகத்தில் உள்ள ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ரொறன்டோவில் தனக்கு பெண்கள் தங்கச்சங்கிலிகள் கழற்றி எறிந்ததாக 'டும்' விட்டிருக்கிறார். ஒரு வெருளி (நிட்சயமாக பெண் அல்ல) தங்கச்சங்கிலி எறிய அதை வைத்து எப்படி வியாபாரம் நடக்கிறது பார்த்தீர்களா!)**

குடாநாட்டில் மீண்டும் மீண்டும் பேரிழப்பு! என்று தணியும் எங்கள் அழிவின் தாகம்?
எஸ்.லிங்கேஸ்
**புலிகளின் தாகம் தணிந்தபின்..**

அநுரா கட்சி மாறியதில் ஏதேனும் சூழ்ச்சியிருக்கிறதா?
கருணா, ஸ்காபரோ
**சுதந்திரக் கட்சியை உடைக்க வேண்டும் என்ற தந்திரம் இருக்கிறது.**

மாவீரர் தினக் கொண்டாட்டங்களின் போது மாத்தயா மேடையில் தோன்றக்கூடுமா?
கருணா
**உயிரோடா? உருவப்படமாகவா?**

தாயக சஞ்சிகையின் தரமான அடிப்படைக் கருத்துக்களோடு பார்க்கையில் முனிவரே, உமது கேள்வி பதில் பகுதியில் வரும் சினிமா, நடிகைகள் என்பன பொருத்தமில்லாதவை. சிலவேளைகளில் புலிகளை ஆதரிப்பது போலவும் உமது பதில்களில் சில அமைந்திருப்பதை கவனிக்கிறோம். இவற்றை நீரும் கவனித்து உமது பதிலை கொஞ்சம் திருத்திக் கொண்டால் என்ன?
சிவகுரு நமசிவாயம் ரொரன்ரோ
**கம்யூனிஸ்ட் கார்த்திகேசு மாஸ்டர் பேசும் போது சொன்ன கதை இது. காவடி ஆடிகொண்டு போன ஒரு கூட்டத்திற்கு பக்கத்தில் ஒரு பகுத்தறிவுவாதி நின்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் கழித்து அந்த பகுத்தறிவுவாதியும் ஒரு காவடியை எடுத்து வைத்து ஆடிக்கொண்டு நிற்பதைக் கண்டவர்கள்**

**அதிசயித்துப் போனுர்கள். விபரம் கேட்டபோது காவடி ஆடிக் கொண்டே பகுத்தறிவுவாதி சொன்ஞராம் "நான் இந்தக் கூட்டத்திற்கு வெளியே நின்று சொல்லிப் பார்த்தேன்... யாரும் கேட்பதாயில்லே.... அதுதான் காவடியை நானும் எடுத்து விட்டேன் ஆடி ஆடியாவது இவர்களுக்கு நான் சொல்ல வந்ததை சொல்லியே தீருவேன்"**

சென்ற வார தாயகத்தில் செந்தாமரையிலும் ஒரு எழுத்தாளரைப் பற்றி எழுதப்பட்டிருந்தது. தமிழோசையில் 'கண்டேன் அன்னேயை' என அவர் எழுதிய விபரமும் இவ்விரு கட்டுரைகளிலும் குறிக்கப்பட்டிருந்தது. இதுதற்செயலாக நடந்ததா? அல்லது திட்டமிடப்பட்டே இக்கட்டுரைகள் எழுதப்பட்டனவா? செந்தாமரை கட்டுரை போன்ற கட்டுரை தாயகத்தில் வெளிவந்த காரணம் என்ன?

சிவகுரு நமசிவாயம்

**"கண்டேன் அன்னேயை..." என்கிருர் தாயகத்திற்கு கட்டுரையை எழுதியவர்.**

கோவிலேப்பற்றி, வேறு பத்திரிகைகள் பற்றி அமைப்புகளேப் பற்றி எழுதாமல் தரமான இலக்கியப்பணியை மட்டும் செய்துகொண்டு உருப்படியாக தாயகத்தை நீங்கள் நடத்தினுல் என்ன?

சிவகுரு நமசிவாயம்

**"இப்படியெல்லாம் எழுதுகிருர்களே' என அலறுபவர்கள் "இப்படியெல்லாம் நடக்கிறதே" என முதலில் சிந்திக்கட்டும் உலகம் உருப்படும்.**

மீண்டும் ஈழம் ஒரு தொடர்கதையை ஆரம்பித்து பல பயனுள்ள விடயங்களே எழுதிவரும் சின்னத்தம்பி வேலாயுதம் அவர்களின் கட்டுரைத் தொடரின் வாசகன் நான். அரசியலினே ஒரு புதிய கோணத்தில் ஆராயும் கட்டுரையாசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

சதாசிவம் அறிவழகன் ஜேர்மனி.

**ஈழம் எப்போதும் தொடர்கதை தான்**
**முடிவே இல்லாதது**
**எங்கே சென்ருலும் தேடி அடிக்கும் இனிய கதை இது...!**

நீர் ரசிக்கும் பாடல்களே முன்பு அடிக்கடி எழுதுவீர் இப்போது ஏன் எழுதுவதில்ல?

கிறிஸ்டீஞ.. ஸ்காபரோ

**"எழுதக்கூடாது என்று எனக்கு என்ன விரதமா? நீங்கள் கேட்டால் நான் மாட்டேன் என்று சொல்வேஞ..? (ஒரு தகவல் "வெய்யிற்கேற்ற நிழலுண்டு.. வீசும் தென்றல் காற்றுண்டு..." என்ற பழைய பாடல் கேட்டிருப்பீர்கள் தானே! அந்தப்பாட்டு உமர்கய்யம் என்ற பாரசீக கவிஞரின் கவிதையின் தமிழ் மொழி பெயர்ப்பாம். மொழி பெயர்த்தவர் கவிமணி தேசிக விஞயகம் பிள்ளே)**

ஜெயந்தீசனும் பெண் சூரியனும் ஒருவரா?

கிறிஸ்டிஞ ஸ்காபரோ

**இல்லே. வெற்றிக்கலகலப்பாசிரியர் பிரான்ஸிலிருந்து எழுதுகிருர். பேஞவை கூராக வைத்திருப்பவர் கனடாவிலிருக்கிருர்.**

முனிவரே நீர் புலி அனுதாபியா?

விஜி– ஸ்காபரோ

**ஆம்! புலிகள் மீது அனுதாபம் கொண்டவன் (அனுதாபம் ஏற்படக் காரணம் யாதோ?)**

பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பன தமது அடிப்படைக் கொள்கை களிலிருந்து விலகி வியாபாரத்தை நோக்கமாக கொள்கின்றன. இதற்கு தமிழ் சஞ்சிகைகள் உதாரணம். இங்குள்ள கனடா தமிழ் சஞ்சிகைகளும் தமது வியாபாரத்திற்காக எதை வேண்டுமானுலும் எழுதலாமா?

ராஜன், ரொறன்ரோ

**நீங்கள் எதை மனதில் வைத்து இந்தக் கேள்வியை கேட்கிறீர்களோ தெரியவில்லே. அடிப்படைக் கொள்கை என்பது ஒவ்வொரு பத்திரிகை, சஞ்சிகைக்கும் வித்தியாசப்படுகிறது. புலிகளின் மட்டுமல்லாது எந்த அராஜகத் தையும் விமர்சிப்பது தாயகத்தின் அடிப்படைக்கொள்கை. வியாபார த்தையே முதன்மைப் படுத்துவது வேறு சில பத்திரிகைகளின் அடிப்படைக் கொள்கை. ஆக அடிப்படைக் கொள்கைக ளிலிருந்து யாரும் மாறவில்லே.**

புதிய அரசாங்கம் வந்தபின் கனடாவில் செய்தி ஒளிப்பரப்புகள் கிரெட்சியன் பக்கம் சாய்ந்துவிட்டனவா?

தேவராஜன், ஸ்காபரோ

**தவறு! அரசுக்கு ஒத்தூத வேண்டிய கட்டாயத் தேவை இங்குள்ள தொடர்பு சாதனங்களுக்கு கிடையாது. எங்கள் நாடுகளில் தான் தொலேத்தொடர்பு சாதன ங்களே அரச பிரச்சார சாதனமாக மாற்றிவைக்கிருர்கள். இங்கு தொலேத்தொடர்பு சாதனங்க ளுக்கும் அரசுக்கும் உள்ள உறவு ரூேட்டுக்கும் டயருக்கும் உள்ள உறவு போன்றது. (CBC யில் ஒளிப்பரப்பாகும் This hour has 22 minutes என்ற program பார்ப்பீர்களா? துக்ளக், தாயக பாணியில் சகல கனேடிய அரசியல்வாதிகளுக்கும் கிண்ட லோ கிண்டல்... ரசிக்கலாம்)**

உமது கனவில் பிரபாகரன் தோன்றிஞல் அவரிடம் என்ன கேட்பீர்?

கருணுகரன் ஸ்காபரோ

**"தலேவரே உங்கள் மெய்பாதுகாப் பாளர்கள் எங்கே..?**

இளேயராஜாவுக்கு கிடைத்திருக்கும் 'மாஸ்ட்ரோ' புகழ் நிலேத்து நிற்குமா?

கருணுகரன் ஸ்காபரோ

**இளேயராஜாவுக்கு கிடைத்த கௌரவம் உண்மையிலேயே புகழுக்குரியது. இந்தியர்கள் உலக அளவில் புகழ்பெறுவது இதுதான் முதல்தடவையல்ல. விஞ்ஞானம், இலக்கியம், கலே, ஆன்மீகம் என பல பகுதிகளிலும் இந்தியாவின் மைந்தர்கள் சாதித்திருக்கிருர்கள். (ஒரு சினிமா சஞ்சிகையை மேய்ந்தபோது கிடைத்த தகவல்; இளேயராசாவுக்கு வேண்டிய சிலர் அவருடன் பேசியபோது "நீங்களும் ரஹ்மான் போல கொம்பியூட்டரில் இனி இசையமைக்க வேண்டும்" என்று சொல்லப்போக இளேய ராசா கடித்துக் குதறிவிட்டார்.)**

கனடாவில் வரும் பத்திரிகைகளில் எந்த செய்திப் பத்திரிகைக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்?

கருணுகரன் ஸ்காபரோ

**என்ன.. நோபல் பரிசோ....? செந்தாமரையின் செய்திகளும் ஆய்வுகளும் ஒரே சொதப்பல். தமிழோசையோ குதப்பல். ஈழநாடு செய்திகள் நிரப்பல். இதில் எதற்கையா நோபல்?**

சகல விதமான மீன் வகைகள், இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள...

## Antony Brothers Peoples Market

**1472 Queen St West**

**Tel:516 3903**

## மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| சிவப்புப் பச்சை அரிசி 1கிலோ | 1.49 |
| முந்திரி வத்தல் 200 கி | .99 |
| சக்கரை 450 கி | 1.49 |
| பயறு 2 றாத் | 1.49 |


## Antony Brothers Fashion House

**1484 Queen St West**

| | |
|---|---|
| Ladies Clothes (Front open) | $13.99 |
| Maestro Phones (Call Display) | $99.99 |
| 8 pc நிறைகுடம் செட் | $47.99 |

---


# WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL




## VITAMOL by DR. ROBERT


DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




## DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




## NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




## CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

# தமிழர் வரலாற்றுப் பெருமை மிக்க நாகதேவன்துறை

## ஸ்ரீசங்கபோதி

வரலாற்று காலத்தில் இருந்து பெருநிலப் பகுதிக்கும் யாழ்தீபகற்பத்தின் பல்வேறு பகுதிகட்கும் பிரயாணம் செய்யும் ஒரு முக்கிய துறையாக இருந்த நாகதேவன் துறை தற்போது உலகமெங்கும் வாழும் தமிழரின் கவனத்தில் வந்துள்ளது.

அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியால் பண்டு தொட்டு, யாழ்ப்பாண ஆட்சியாளருக்கும் மக்களிற்கும், பெரும் பங்காற்றிய இத்துறை யாழ்ப்பாண கடல் நீர் ஏரியில் தென் கரையோரத்தில், கடல்நீர் ஏரியில் வடபகுதியில் உள்ள கச்சாய் துறைமுகத்திற்கு தெற்காகவும் பூனகரி வாடியடி ஒல்லாந்தர் கோட்டைக்கு நேர் வடக்காக நாகதேவன் துறை வீதியில் சங்குப்பிட்டி கேரதீவு பகுதிகளை இணைக்கும் மகாதேவா தாம்போதிக்கு 2 1/2 மைல் கிழக்காகவும் அமைந்துள்ளது.

மன்னாரில் போத்துக்கேயரிடம் இருந்து ஆட்சியை கைப்பற்றி கொண்ட ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் தமது அதிகாரத்தை பரப்புவதற்காக மன்னார் பூநகரி கடற்கரையோர வழியை பயன்படுத்தினாலும் யாழ்ப்பாண மன்னர்களின் ஆதிக்கத்தில் இருந்த நாகதேவன் துறையை கைப்பற்றாது விடின் தமது படைகளை யாழ்ப்பாணம் நகர்த்த முடியாது என்ற தேசாதிபதி கிரிக்குலோவு வான்கோயன் (1664-1675) ஆணைப்படி இத்துறை கைப்பற்றப்பட்டது. எனினும் இத்துறையை பாதுகாக்கும் நோக்கத்துடனும் யாழ்ப்பாணம் செல்கின்ற படை வீரர்கள், பாதிரிமார்கள் தங்கவும் அங்கிருந்து வருகின்ற படை வீரர்களின் வசதிகளைக் கவனிக்கும் நோக்குடன் இத்துறையில் இருந்து கிட்டத்தட்ட ஒரு மைல் தெற்கே ஒரு பெரும் கோட்டையையும், தேவாலயத்தையும் நிறுவினர். யாழ்ப்பாணத்தின் ஏனைய கோட்டைகளை அவர்களுடைய படகுகள் கப்பல்களை நேரடிப் பார்வையில் வைத்திருக்க கூடியதாக கடலுடன் அண்டிய பகுதியில் அமைந்திருந்தும் இங்கு அப்படி செய்யாத காரணம் சதுப்பு நிலங்களால் சூழப்பட்ட இத்துறையில் கோட்டையையோ, படைவீரர்களையோ பாதுகாக்க கூடிய இயற்கை வள வசதிகள் அன்றைய கால கட்டத்தில் இல்லாததை கருத்தில் கொண்டே என்பதை இலகுவில் விளங்கி கொள்ளலாம்.

அகழிகள், காவல் அரண்கள், சுரங்கங்கள் சுற்றுமதில்களுடன் கூடிய பூநகரி கோட்டையும் இலங்கை இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த வேளை இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகும் தினங்களில் விடுதலைப்புலிகளால் தாக்கி அளிக்கப்பட்டது.

இத்துறையில் இருந்து டச்சுக்காரர் காலத்தில் கச்சாய் துறைமுகத்திற்கும் பின்பு கொழும்புத்துறைக்கும் நாவாய்களை பருவகால காற்றிற்கு ஏற்க கொண்டு சென்றனர். இருந்தும் ஆங்கிலேயர் காலத்தில் தீபகற்பத்தின் முக்கிய துறையாக கொழும்புத்துறை பாவிக்கப்பட்டாலும் பெருநிலத்தை இணைக்கும் ஒரே துறையாக யாழ் புகையிரதபாதை, அமைக்கப்படும்வரை இருந்தது இதுவே. தென்பகுதியில் இருந்த கொழும்பின் பெயரை ஒரு துறையில் மக்கள் பழக்கத்தில் வைத்துக் கொண்டு அதன்பெயரை, (கொழும்புக்கு போகும் துறை) கொழும்புதுறை என்று வழக்கப்படுத்திக் கொண்டதில் இருந்து நாகதேவ இறங்கு துறையின் முக்கியம் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

இத்துறையின் வரலாறு மேற்கு நாட்டாரில் வருகையுடன் அன்றி சரித்திர காலத்தில் இருந்தே முக்கியத்துவத்துடன் இருக்கிறது. இலங்கையின் ஆதிக் குடிகள் நாகரும், இயக்கரும் என்பதும், நாகர் வடபகுதியில் பண்பட்ட ஆட்சியை நிறுவி இருந்தனர். என்பதும் அவர்களின் பெயரில் இடங்களும், துறைமுகங்களும் இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். யாழ்ப்பாண நகரிற்கு மேற்கே நாகவன்துறை (நாவாந்துறை) நாகவலியான் துறை (நவாலியான்துறை, நவாலி) என்பன நாகர்களினாலும் அவர்கள் வழிவந்தவர்களாலும் பயன்படுத்தப்பட்டது என்பது ஆராய்ச்சிக்குரியது. மேலும் சங்கமித்தா வடக்கே சம்பில் துறையில் இறங்கி இத்துறைகளின் ஊடாக புனித அரச மரக்கிளையுடன் அனுராதபுரம் சென்றதாக வரலாறு உண்டு. (புன்னாலை தேர்ச்சிறப்பு மலர்) மன்னார் வருகின்ற அராபிய வணிகரும் நாகவன்துறையூடாக யாழ்ப்பாண வாணிபத்தை செய்தனர் என்பதும் இன்றும் நாவந்துறை, பொம்மைவெளி பகுதிகளில் அதிகமான முஸ்லீம்குடியிருப்புகள் இருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நாகர் என்போர் கடலோடும் திறமையும் வணிகமும் செய்யும் வல்லமையும், அதனால் ஆட்சி செய்யும் அந்தஸ்தும் கொண்ட எமது முன்னோர்கள். ஆனால் தங்கள் வரலாற்று பெருமையை கூட்டவும், நகரின் வாணிப பெருமையை குறைக்கும் நோக்கமும் கொண்ட பௌத்த குருமார்களும், சிங்கள சரித்திர ஆய்வாளரும் நாகர் பாம்பு போல் வாலும் மனித உடலும் கொண்ட அறிவற்ற ஜீவன்களாக ஏடுகளில் படைத்து விட்டனர். ஆனால் கி.பி 10ம் ஆண்டுக்குரிய தமிழ்நாட்டில் கல்வெட்டு செய்தி வருமாறு

'ஒளிராகன் மடையல் அழகிய சோழன்
இந்துப் புரவலன் சங்க நாகன்தமது
உச்ச கிழவன் முகுழி நாகன் (இந்திய பண்பாடு 6 பக்கம் 22)

இவற்றில் இருந்து நாகர் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

மேலும் கந்தரோடை ஆனைக்கோட்டைப பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில், பராக்கிரமசாலி, பாம்பு மீன், சங்கு, சக்கரம் கருடப்பறவை குறியீடுகள் இருக்கின்றன என்பதை செ. கிருஸ்ணராசா (சிரேஷ்ட வரலாற்று விரிவுரையாளர் யாழ்ப்பாணம்) ஆராய்ச்சி செய்துள்ளார். மேலும் யாழ்ப்பாண சரித்திரம் எனும் சாலில் அதன் ஆசிரியர் டானியல் யோக் (1ம்பாகம்- 1930) நெடுந்தீவைத் கோட்டையாக கொண்டு யாழ்ப்பாணத்தின் வட பகுதியை கி.பி. 2ம் நூற்றாண்டில் ஆண்ட வெடி அரசன் என்பான் நாகரின் வழித்தோன்றல் என்று குறிப்பிட்டதும் ஆராய்ச்சிக்குரியவை. மேலும் வெடி அரசனின் அரச குறியீடாக சங்கு, சக்கரமும், கொடியில் கருடப்பறவையும் இருந்ததும். நாகதேவன் துறைக்கு அண்மையில் உள்ள கிராமத்தவர்கள் தமது மந்தைகட்கு வயிற்றில், தமது முதல் எழுத்துக்களுடன் இரு தொடைகளில் சக்கரத்தையும், சங்கையும் வம்ச குறியீடாக வழங்கி வருவதையும் வரலாற்று சமூகவியல் ஆய்வாளருக்கு வளம் சேர்க்கும் தடயங்களாகும்.

# கொழும்பில் நடைபெறும் கைதுகள்: சில வெளியே வராத தகவல்கள்

சமீப காலங்களில் கொழும்பில் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டு வருகின்றனர். இரவுகளில் தமிழர்களான ஆண்களும் பெண்களும் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி அடைத்து வைக்கப்படுகின்றனர். புலிகளைக்கைது செய்கிறோம் என்று கூறிக் கொண்டு நடக்கும் இந்த மனித உரிமை மீறல்கள் குறித்து எமக்கு கிடைத்த தகவல்கள் மூலம் மேலும் பல விடயங்களை அறியக் கூடியதாக உள்ளது. அக்டோபர் 17 ம் திகதி காலை 3 மணி முதல் 5 மணி வரை பாதுகாப்பு படையினர் மவுன்ட் லவினியா, வெள்ளவத்தை, கிரிலப்பனை, கொட்டாஞ்சேனை, மொதர பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்தினர். 11 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் உடுத்தியிருந்த சேட்டுகளினால் கண்கள் கட்டப்பட்டு ஜீப் வண்டிகளில் கொண்டு செல்லப்பட்டனர். கைது செய்தவர்களில் சில சீருடைகளுடனும் சிலர் சாதாரண உடைகளிலும் இருந்ததுடன் ஒரு பகுதியினர் தமிழ் பேசிக் கொண்டனர். மவுன்ட் லவினியாவில் ஜீப் ஒன்றும் ட்ரக் இரண்டும் வந்ததுடன் முப்பது முதல் நாற்பது வரையானவர்கள் வீடு ஒன்றைச் சூழ்ந்து தேடுதலில் ஈடுபட்டனர். களுபோவிலவில் பொலிஸ் குறியீடுகள் உள்ள ஜீப் ஒன்று காணப்பட்டிருந்தது.

மவுன்ட் லவினியாவில் தேடப்பட்ட வீடு சிங்களவருக்கு சொந்தமானது. அங்கு ஏழு தமிழர்கள் வாடகைக்குகுடியிருந்தனர். இந்த ஏழு பேரும் முதல் நாள் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். வீட்டுச் சொந்தகாரப் பெண் பொலிஸ் அதிகாரிக்கு இது குறித்து முறையிட்ட போது அவரைக் கவலை கொள்ள வேண்டாம் என்றும் வழமையான விசாரணைகள் முடிந்ததும் அவர்களை விடுவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஏழாம் நாள் அந்தப் பெண்ணிற்கு தொலைபேசி மூலமாக விசாரணைகள் முடிந்ததாகவும் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இரவு பத்து மணியாகி விட்டதால் அவர்களை காலையில் விடுவிக்கும்படி அந்த பெண் கேட்டுக்கொண்டார். அதேநேரம்கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வெளியூரிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரி மாணவனாக இருப்பதால் அவரை அங்கு அறிவிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸ் பொறுப்பதிகாரி அவரின் மைத்துனருடன் தொடர்பு கொண்டு அவரிடம் கையளித்த பின்னர் மைத்துனர் அவரை அவரது வீட்டில் விட்டுச்சென்றார். மற்றவர்கள் மறுநாள் பொலிஸ் நிலையத்தில் வைத்து விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் மறுநாள் வீட்டில் தேடுதல் நடந்த போது அந்த இளைஞரே கைது செய்யப்பட்டார். கைது நடந்தது பற்றி வீட்டுக்காரி பொலிஸ் அதிகாரிக்கு தகவல் தெரிவித்ததும் அவர் ஆச்சரியப்பட்டார். அந்தப் பெண்ணை எந்தப் பொருட்களையும் தொட வேண்டாம் என்றும் மறுநாள் காலை வந்து விபரங்களைப் பெற்றுச் சென்றார். தேடுதலில் ஈடுபட்டவர்கள் பற்றி தனக்குத் தெரியாது என்றும் இது குறிதது மேலதிகாரிகளிடம் அறிவிப்பதாகவும் அவர் கூறிச் சென்றார்.

வெள்ளவத்தையில் ஹம்ப்டன் லேனில் ஒரு மாணவரும் சவுதியிலிருந்து வந்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். பத்து நிமிடங்களின் பின்னர் வெள்ளவத்தை புகையிரத நிலையத்தில் இறக்கி விடப்பட்டார். கண் கட்டப்பட்ட நிலையில் இறங்கிய அவர் தனது கட்டுக்களை அவிழ்த்து வீடு திரும்பிய போது பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

களுபோவிலவில் கைது செய்யப்பட்டவர் வீடியோ நிலையம் ஒன்றில் பணியாற்றுபவர். அதே இரவு கொட்டாஞ்சேனையில் கைது செய்யப்பட்ட நான்கு பெண்களின் நிலை இன்னமும் தெரியாது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் கிரிலப்பனை, வெள்ளவத்தை பகுதிகளில் கைது செய்யப்பட்டனர். இதில் ஒருவரின் மாமனார் சட்டத்தரணியும் தொழில் நீதிமன்ற நீதிபதியுமாவர். ஆனால் கைது செய்தவர்கள் அவரது கேள்விகளையும் புறக்கணித்திருந்தனர்.

சவுதியிலிருந்து வந்தவர்களில் ஒருவர் பொரளையில் 19ம் திகதி காலை பத்து மணிகு விடுவிக்கப்பட்டார். அவர் வெள்ளவத்தை சென்று தனது பொருட்களை எடுத்துக் கொண்டு வேறிடத்துக்கு சென்று விட்டார்.

இந்தப் பகுதிகளில் உள்ள பொலிசார் இந்த கைது செய்பவர்கள் பற்றி உண்மையில் அறியாதவர்களாகவே உள்ளனர். ராகமையில் வைத்து இந்துக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர், வீடியோ கடை ஊழியர் ஆகிய நால்வரும் 22ம் திகதி விடுவிக்கப்பட்டனர். இரண்டு பேர் சேரிப் பகுதியில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை தமிழர்கள் என்று அறிந்த அப்பகுதி மக்கள் அவர்களைத்தாக்கினர். மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அவர்களை பொலிசாரிடம் கையளிக்கும்படி கூறினார். இருவர் வேறிடத்தில் விடப்பட்டு பத்து நிமிடங்களுக்கு அசையக் கூடாது என்று கட்டளையிடப்பட்டது. இவர்கள் பொலிசாரால் பிடிக்கப்பட்டு ராகம பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் தாங்கள் ஏன் ராகம பகுதியில் நின்றார்கள் என்பதற்கு சரியான விளக்கம் கொடுக்கவில்லை என்று கூறி பொலிசார் அவர்களை தடுதது வைத்தனர். பின்னர் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டு பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

இதில் கைது செய்யப்பட்ட இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டது வினோதமான காரணங்களுக்காக. இவர்கள் கைது செய்யப்பட்ட போது சென்றவர்கள் இவர்களின் பெயர்களை வைத்துக் கொண்டு தேடிக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி நடத்திய கண்காட்சி ஒன்றில் இந்த மாணவர்கள் கடை ஒன்றில் உதவி செய்து கொண்டிருந்தார்கள். இந்த கடையில் வெளிநாட்டு நாணயங்கள் காட்சிக்கு இருந்தன. பம்பலப்பிட்டி சென்.பீட்டர்ஸ் கல்லூரி மாணவர் ஒருவர் இந்த நாணயங்களை திருடும் நோக்குடன் உலவியிருக்கிறார். இதனால் மோதல் ஏற்பட்டு அந்த மாணவர் தாக்கப்பட்டார். தாக்கப்பட்ட மாணவரோ தேசிய உளவு அமைப்பின் பொலிஸ் அதிபரான தமிழரின் மகனுவார். கைது செய்யப்பட்ட மாணவர்கள் தாக்கியவர்கள். இதனால் தான் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இன்னொருவர் இந்த நிகழ்ச்சிகளுக்கு சில வாரங்களுக்கு முன்னர் வீதியால் சென்று கொண்டிருந்த போது வெள்ளை நிற வான் ஒன்றில் இழுக்கப்பட்டு கடத்தப்பட்டார். அவர் மாடி வீடு ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு நான்கு நாட்கள் சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். முழு நேரமும் இவரது கண் கட்டப்பட்டிருந்தது. அங்கு நாற்பது பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அதில் சில சிங்களவர்களும் உள்ளனர் என்றும் மீதிப்பேர் தமிழர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய கைதுகள் இராணுவ உளவு நெறிப்படுத்தமைப்பு என்ற பிரிவின் தலைவரான பிரிகேடியர் பலகல்லேவின் மேற்பார்வையில் நடைபெறுகிறது. பிரிகேடியர் பலகல்லே நேரடியாக சிசில் வைத்தியரத்தினவின் கீழ் செயற்படுகிறார். அத்துடன் பொலிஸ் பிரிவின் தேசிய உளவுப் பிரிவும் இதில் செயற்படுகிறது. கொழும்பில் புலிகளின் நடமாட்டத்தை அகற்றுவதே இவற்றின் நோக்கம்.

ராகம பகுதியில் உள்ள வனவசாலைப் பகுதியில் இருந்து சில குழுக்கள் செயற்படுகின்றன. கிழக்கில் மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களே இங்கு உள்ளார்கள். கப்டன் முனஸ் என்ற பெயரில் செயற்பட்ட டயஸ் றிச்சாட், கப்டன் நிலாம், உமா பிரகாஷ், மோகன் ஆகிய முன்னாள் புளொட் உறுப்பினர்களே இவர்கள். 1990 செப்டம்பர் ஐந்தாம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமிலிருந்து கொண்டு செல்லப்பட்ட 158 இளைஞர்கள் காணமல் போனது சம்பந்தமாக இவர்கள் மீதே நீதிபதி சொய்சா ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளதுடன் முழுமையான விசாரணைக்கும் கோரியுள்ளது. முனஸ் முன்பு செயற்பட்ட தேசிய உளவுப் பிரிவில் மோகன் செயற்பட்டிருந்தார். இவர் கப்பம் வாங்குவதில் பெயர் போனவர். உமா பிரகாஸ் புளொட்டிலிருந்து விலகி சுமார் இருபது பேரை தன்னுடன் இந்தியா கொண்டு சென்றிருந்தார். தேசிய உளவுப் பிரிவில் உள்ள தமிழ் பொலிஸ் அதிபர் ஒருவர் இந்தியா சென்று பிரகாஸையும் மற்றவர்களையும் வந்து இலங்கை அரசுக்காக செயற்படும்படியும் அதற்கு பணவசதிகள் வழங்குவதாகவும் தெரிவித்ததன் பின்னர் அவர் வந்திருக்கிறார். அவரும் வனவசாலையில் உள்ளார் என்று கூறப்படுகிறது. தற்போது பிடிக்கப்பட்டுள்ள புலி உறுப்பினர்கள் சிலரும் அடையாளம் காட்டுவதற்காக முகமூடிகளுடன் கொண்டு வரப்படுகின்றனர்.

சுமார் நூறு பேர் வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதில் அறுபது பேர் வரையில் அவர்களின் உறவினர்கள் யாரும் பொலிசாருடன் தொடர்பு கொள்ளவில்லை. இதில் பாதிப்பேர் வரையில் புலிகளிலிருந்து விலகுவதாக 'துண்டு கொடுத்து' வந்து வெளிநாடு செல்ல நிற்பவர்கள்.

# பன்னாட்டு தமிழுறவு.

குறிக்கோளாக உள்ளதைப் பார்க்க முடிகிறது. ஐரோப்பிய எழுத்தாளர்களும் வாசகர்களும் சந்திக்கும் இடமாகவும் உள்ளது. சமுதாயக் குறைகளுக்காக யதார்த்தத்தைத் தாண்டிய அதிதீவிரப்போக்கும் ஒரு சிலரிடம் காணமுடிகிறது. அதுபற்றிய சரிபிழை ஆய்வுக்குரியது. அத்துடன் ஜேர்மனியில் எந்த மூலையில் வாழ்பவரும் பெற்றும் நேரடியாகவும் வாசிக்கக்கூடிய விதத்தில் ஜேர்மன் நாட்டு நூல்நிலையத்துடன் இணைந்த தமிழ் நூல்நிலையம் 1989 தொடக்கம் ஆயிரத்துக்கு மேற்பட்பட்ட நூல்களுடன் (விற்றன்) நகரில் இயங்கி வருகிறது. பெர்லினிலும் தனிப்பட்ட ஒரு சிலரால் இயங்கிய நூல் நிலையம் வாசிப்போரின் ஆர்வம் இன்மையால் இடையில் நின்று இடைவேளை எடுக்கிறது. ஒருவரின் வாசிப்புத் தேவைக்கு முற்போக்கான நாவல் சஞ்சிகைகள் ஐரோப்பா எங்கும் குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் தாராளமாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் முற்போக்கான புரட்சிகர கருத்துகளுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை. இந்தியாவில் இருந்து வந்தவர்களோ ஈழத்தவர் சிலரோ பலரோ என்ன தான் கதைத்தாலும் சீர்திருத்தம் என்று கூறி திரும்ப திரும்ப பிற்போக்கு வட்டத்துக்குள்ளேயே நிற்கிறோம் அல்லது நிற்க விரும்புகிறோம். நாம் எங்கு சுற்றிச் சுற்றிப் போனாலும் எங்கு போய் முட்டி மோதினாலும் கார்ல் மாக்சின் அடிப்படைத் தத்துவத்திற்கும் அதன் வழி மாவோ சேதுங்கின் சமூக விஞ்ஞான சீர் திருத்தத்திற்கும் போயே ஆகவேண்டும். இந்திய உப கண்டங்களுக்கும் மா சேதுங்கின் சீர்த்திருத்தம் குறிப்பாக எமக்கு முக்கியமானது.

பெண் விடுதலைக் கருத்துக்களும் அன்றைய காந்தி முதல் கூர்மை அடைந்து வந்துள்ள இன்றைய பாரதி (பச்சையப்பாக் கல்லூரி விரிவுரையாளர்) மல்லிகா, ராஜினி, தேவிகா, குயில் என்று இன்னும் பல நூறு பேரால் எழுதப்பட்டும் வாதிக்கப்பட்டும் சிந்திக்கப்பட்டும் மந்த வேகமாகவே வளர்வதற்கு காரணங்கள் பழமை வாதமும் எமக்கே உரித்தான கலாச்சார பிற்போக்குத் தனங்களுமே காரணம். ராமையாவின் நினைவாக ஓர் ஒன்று கூடல் எனும் நிகழ்ச்சியாக கலாச்சாரம் என்றால் என்ன எமது கலாச்சாரம் என்ன என்ற தலைப்பு எடுத்துக்கொள்ளப்பட்டு (1990 பெர்லினில்) கலந்துரையாடல் கருத்தரங்கம் ஒன்று மிகவும் ஆழமான கருத்துகளுடன் ஆராயப்பட்டது. இத்தலைப்பை எடுத்து தாங்கி நடத்திய ந. சுசீந்தரன் அவர்கள் கலாச்சாரம் என்பது பொய்யானது. கல்வி, பொருளாதாரம் சூழ்நிலை காலநிலைகளுக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் மாறக்கூடியது என்றும் இதன் இருப்பு யாருக்கு தேவை என்பதையும் எமது கலாச்சாரம் என்பது பெண்களின் அவையங்களுக்குப் பூட்டுப் போடும் கலாச்சாரம் என்றும் தொடக்க உரையிலும் முடிவுரையிலும் கூறடி முடித்தார் இதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

தொடரும்

# மணிவிழாக் காணும் கவிஞர் கந்தவனம்

கந்தவனம்
நீ கவிதைப் பூ பூத்திருக்கும் ஒரு நந்தவனம்
உனக்கு இன்று இங்கு மணிவிழா
எதற்குனக்கு மணிவிழா?
அறுபதைத் தாண்டியதற்கா? இல்லை
அழகுதமிழை யாம்
படிப்பதற்கு தூண்டியதற்கா?
தாயக மேடைகளில் அன்று தனித்துவமாக
நீ பொழிந்திட்ட கவிதை மழையினிலே
எம் தமிழ் பயிர் கருகாமல்
தழைத்தோங்கியதுண்மை
'தாயக' ஏட்டினிலே இன்று நீ படைக்கும்
மணிக் கவிதையில் மனம் லயிக்கும் போது
'மணிக்குறளோன்' மனதில்
வந்து போவதை
தவிர்க்க முடியவில்லையே!

மணிக்கணக்காய் அன்று நீ மடைதிறந்த
தமிழ் வெள்ளமும், மழைத்துளியாய்
இன்று தரும் மணிக் கவிதையும்
இரண்டுமே மணிப்பிரவாகம் தான்!
மணிவிழா உன் வயதுக்கல்ல, தமிழை
வாழ வைத்த நின் கவியாற்றலுக்கு

இது என் முகஸ்துதியல்ல
வார்த்தைக்குள் புகுந்து விளையாடும் நீ
உண்மையில் ஒரு ஆஸ்தான கவி.

மக்கள் அவையை அலங்கரிப்பவன்தான்
ஆஸ்தானக் கவியாம்

ஆனால் நீ
மக்களின் அகங்களில்
அங்கீகரிக்கப்படுபவன்

**தமிழ்யா**

வெண்பாவிற்கோர் புகழேந்தி என்பது போல, ஈழத்தில் கவியரங்குக்கு ஒரு கந்தவனம் என்று கூறும் அளவுக்கு யாழ். இலக்கிய வட்ட அமைப்பு மூலமாக இலக்கிய விழாக்கள் எங்கும் தோன்றி சக்கை போடு போட்ட கவிஞர் கந்தவனம் அவர்கள் இன்று தனது மணிவிழாவைக் கொண்டாடுகிறார். தாயகம் வாசகர்களின் மனதில் 'இவ்வாரச் சிந்தனைக்கு' என்ற இருவரிக் குறள் கவிதைகள் மூலம் இடம் பிடித்துக் கொண்டவர்.

யாழ்.இலக்கிய வட்ட அமைப்பை 66இல் ஸ்தாபித்து 'எமது எழுத்தாளர்கள், எமது நூல்கள்' என்ற சுலோகத்துடன் ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துக்களை வெளியில் கொண்டு வந்ததில் இவரது பங்கு நிறையவே. இந்திய எழுத்தாளர்கள், வெளியீடுகள் ஆக்கிரமித்த அந்த நேரத்தில் 'சுதேசிய படைப்புகள்' பற்றி அவர் கொண்டிருந்த பிரக்ஞையும் ஆர்வமும் தான் இளவயதிலேயே ரசிகமணி கனகசெந்திநாதன் போன்றோரின் அனுசரணையுடன் இவரை இந்த இலக்கிய வட்டத்தை தோற்றுவிக்க காரணமாயிருந்தன.

நூல்களை வெளியிட்டாலும் அவற்றை விற்க வேண்டுமே. இதனால் பாடசாலை பரிசளிப்பு விழாக்களில் ஈழத்து நூல்களை வாங்கச் செய்யும் இவரது முயற்சிக்கு முதலில் மகாஜனக் கல்லூரியும் பின்னர் நடேஸ்வராக் கல்லூரியும் தொடர்ந்து ஏனைய பாடசாலைகளும் ஒத்துழைப்பு நல்கின. இதில் மகாஜனவின் முன்னாள் அதிபர் கனகசபாபதியை நன்றியுடன் நினைவு கூர்கிறார் இவர். அத்தோடு ஈழத்து நூல்களை வாங்குவதற்கான இடம் இல்லை என்ற குறையைத் தீர்க்க சுன்னாகம் தனலட்சுமி புத்தகசாலையில் ஈழத்து நூல்களுக்கான பிரிவு ஒன்று இவரது முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது. மு.சபாரத்தினத்தின் உதவியால் ஏற்படுத்தப்பட்ட இப்பிரிவை கல்வி அதிபர் மாணிக்கவாசகர் திறந்து வைத்தார்.

இலக்கிய விழாக்களில் கவியரங்கு என்ற அம்சம் கட்டாயமானதாக வரும் அளவுக்கு இவரது உழைப்பு முக்கியமானது. இ.நாகராஜன், காரை சுந்தரம்பிள்ளை, வே.ஐயாத்துரை, கல்வயல் குமாரசாமி போன்றோருடன் இவர் பல கவியரங்குகளில் பங்கு கொண்டுள்ளார். கவியரங்கை ஒரு ஜனரஞ்சகத் தன்மையுடன் மக்கள் முன் கொண்டு சென்றதில் இக்குழுவுக்கு பெருமையும் உண்டு.

இலக்கிய வட்டம் கிராமந்தோறும் விழா எடுத்து அவ்வூர்களில் உள்ள இலக்கியகாரர்களை கௌரவித்து விழா எடுத்ததுடன் ஒவ்வொரு ஆண்டுவிழாவிலும் ஒவ்வொரு புலவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த இலக்கிய முயற்சிகளையும் விட, ஈழகேசரி பொன்னையா மூலமாக புவியியல் பாடப்புத்தகங்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆரம்ப காலங்களில் எழுத்து மூலமாக சர்ச்சைக்குள்ளாகியவர் கந்தவனம் அவர்கள். ஒண்டரை ரூபா என்ற பெயரில் பொலிசாரை விமர்சித்து எழுதிய நாவல் காரணமாக பொலிசார் இவரைத் தேட இவர் இந்தியாவுக்கு மேற்படிப்புக்காக சென்றுவிட்டார். சமூகம் என்ற பெயரில் சாதிப்பிரச்சனை பற்றிய இவரது நாவல் வெளிவர முடியாத அளவுக்கு சிக்கல்கள் இருந்தது குறித்து இன்னமும் வேதனை கொண்டுள்ளார்.

மாத்தளையில் தென்.தோமஸ் கல்லூரியில் கற்பித்த வேளை அங்கு சு. சொக்கநாதன், ஈழவாணனுடன் சேர்ந்து இலக்கிய வட்டம் ஆரம்பித்தார். அங்கு முக்கவிஞர் வெளியீடு என்ற பெயரில் கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. அங்கு நடைபெற்ற பாரதி விழாவில் நடந்த கவியரங்களில் ஈழவாணனின் கவிதை ஒன்று பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

கூனியின் சாதனை என்ற கட்டுரையில் கூனியின் மறுபக்கத்தைச் சொல்லி, அவள் கெட்டிக்காரி என்று எழுதியதை பெருமையுடன் நினைவுகூருகிறார்.

இலக்கிய உலகம், ஏன் இந்தப் பெருமூச்சு, பாடு மனமே, கீரிமலையினிலே, உய்யும் வழி, நல்லூர் நாற்பது போன்ற கவிதை நூல்களும் இலங்கையில் ஆசிரியர் தொழில், ஈழத்து கூத்து மொழிகள், ஈழத்து கிராமிய நடனங்கள் போன்ற ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

பாடசாலை நூலகங்கள் என்ற தொடர் ஈழநாட்டிலும் சிறுவர் நாடகம் தினகரனில் தொடராகவும் வெளிவந்திருந்தன.

இன்று கனடாவிலும் இவரது எழுத்துப்பணி தொடர்ந்த வண்ணமே உள்ளது.

'தாயகம்' பற்றி அன்பும் அக்கறையும் கொண்ட இவர் மணிக்கொடி எழுத்தாளர் குழு போலவே தாயகத்திற்கான எழுத்தாளர் குழு ஒன்று இருக்கின்றது என்று பெருமைப்படுபவர்.

இன்று மணிவிழாவைக் கொண்டாடும் இவரை வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.

**பக்குவப்பட்டார் பண்புகள் பற்றின்**
**சிக்கல்கள் தீரும் சிறப்புச் சேரும்**
**கவிஞர் வி.கந்தவனம்**

## பென் கூரியனின் பாட்டிக் கதைகள்

# இழக்க இழக்க இறுதி வரை இன்பம் தருவது..

எனக்கு இருக்கிற தலையிடிக்குள் இவன் சந்திரனுடை பெரிய துன்பம்.. அடிச்சு ஒரே கரைச்சல்.. மச்சான் ஒருக்கா வீட்டை வா என்று.. அவனுக்கும் தாய்க்கும் ஒரே பிரச்சனையாம்.. சந்திரனின் மனிசியும் 'பென் அண்ணை, நீங்கள் ஒருக்கா வந்து மாமியோட கதையுங்கோ' என்று விட்டாள். போதாக்குறைக்கு 'மேனை, நீ தான் இந்த ஞாயத்தைக் கேக்க வேணும்' என்று சந்திரனின் அம்மாவும் அடிச்சுச் சொல்லியிட்டா. எப்படியாவது போய் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேணும்.

'மச்சான், மனிசி ஊருக்குப் போகப் போறன் எண்டு நிக்குது. நான் அதைக் கூப்பிட எவ்வளவு கஷ்டப்பட்டனான் எண்டு தெரியும் தானே' சந்திரன் வீட்டுக்கு வர முன் எனக்கு பிரச்சனை பற்றிய ஒரு ஐடியாவைத் தந்தான். 'அண்ணை, நான் மற்ற பெம்பிளையள் மாதிரி இல்லை, அவவை என்ரை அம்மா மாதிரித் தான் பாக்கிறன். இப்ப இவ்வளவையும் செய்து போட்டு இப்ப ஊருக்குப் போனால் என்னையல்லே எல்லாரும் குறை சொல்லுவினம்' இது சித்திரா. இப்ப நான் போய் நியாயம் சொல்லாட்டி என்ன நடக்குமோ?

எனக்கு ஃபமிலிகாரர் வீட்டை போறதெண்டு பரம சந்தோசம். போனால் எப்படியெண்டாலும் நல்ல சாப்பாடு ஒன்று தந்து தான் விடுவினம். றெஸ்ரோறன்டில கோழிக்காலைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப் போச்சு.

'சரி எதுக்கும் சனிக்கிழமை வாறன்'

சனிக்கிழமை போனால்.. சந்திரனின் அம்மா 'மேனை, நீ நல்லது கெட்டது தெரிஞ்சவன், நீ என்ரை வயித்தில பிறக்காத பிள்ளையடா, இதைக் கேள்.. மனிசனாய் பிறந்தவன் இங்க இருப்பானோ?' என்று தொடங்க.

'நீ தானே அங்க எல்லாருக்கும் நான் கனடாவுக்குப் போறன் எண்டு புழுகிப் போட்டு வந்தனி.'

'ஓமடா, நீயும் இங்க ஏதோ நல்ல வேலை செய்யிறன் எண்டு எழுதினாய். இங்க வந்து பாக்கத் தானே தெரியுது'

'அங்க இருக்குமட்டும் என்னைக் கூப்பிடு என்று அழுகிறது. வந்தவுடன ஓட நிக்கிறாய்'

'இங்கயும் மனிசன் இருப்பானோ, கோழிக் கொட்டில் மாதிரி வீட்டுக்கு இருந்து கொண்டு கதைக்கிறாய். அங்க எப்படி இருந்தனான்?'

'ஓமோம், பங்கருக்குள்ள இருந்தனீ.. இங்க வந்தவுடன மட்டும் கோழிக்கூடு'

'டேய், சும்மா இரு, அதுக்கேன் அம்மாவைப் பேசுறாய்?' நான் தலையிட்டு மனிசிக்கு சைட் எடுப்பதாக நடித்தேன்.

'அப்படிச் சொல்லு மேனை. நீ கேளடா.. இங்க சீவிக்கேலாது தம்பி. நான் போகப் போறன். கொள்ளி வைக்கிறதுக்கு இவன் இருக்கிறான் எண்டு இங்க வந்தால். . இதிலும் பாக்க நான் செல் விழுந்து செத்துப் போறன்'

'அப்பிடிச் சொல்லக் கூடாது அம்மா, எப்படி யெண்டாலும் கடைசிக்காலத்தில பிள்ளையளோட இருக்கிறது தானே நல்லது..'

நான் பவ்வியமாக தலையிட்டேன்.

'நானும் அப்பிடித்தான் நினைச்சு வந்தனான். இங்க என்ன கிடக்கு'

'என்னம்மா'அப்பிடிச் சொல்றியள்.. இங்க என்ன இல்லை? ரேஸ் பாண் தொடக்கம் உடன் மீன் மட்டும் கிடக்கு. இன்னும் பனங்கிழங்கு வரேலையோ ஒழிய எல்லாம் கிடக்கு'

'இதெல்லாம் எனக்கு என்னத்துக்கு? எனக்கு உந்த தாவடிப் பொயிலையிலை ஒரு சுத்துச் சுத்தி புகை விடாட்டி பொச்சம் தீராது. உவன் வாங்கிக் கொண்டாறானும் பொயிலை. வெறும் காய்ஞ்ச சருகுமாதிரி... நான் கொண்டந்த முப்பது பொயிலையும் முடிஞ்சு போச்சு.. நான் அப்பிடி இங்க இருக்க வேணும் எண்டால் எனக்கு முன்னாலை கொண்டந்து இப்ப பத்து தாவடிப் பொயிலை கொண்டு வந்து வை.. இல்லாட்டி என்னை விடு, நான் போறன்'

★ ★ ★

நான் எழுந்து பார்த்த போது எனக்கு முகத்தில் சந்திரனும் மனைவியும் தண்ணி தெளித்து புத்தகத்தால் விசிறிக் கொண்டிருந்தார்கள்.



# கை

## ஜெயந்தீஸனின் குட்டிக்கதைகள்

(இது ஒரு கற்பனையாகவும் இல்லாமலுமிருக்கலாம்)

அவரது கைகள் துடித்துக் கொண்டிருந்தன. அவருக்கோ வேலையில்லை. ஆனால் வேலை முடிந்து வரும் மனைவி மீது புலி போல் பாய்ந்து ரெண்டு சாத்து சாத்தா விட்டால் அவருக்கு தூக்கம் வராது. வேலை முடிந்து மனைவி பிந்தி வருவது தான் இந்த சாகச விளையாட்டிற்கான காரணம். ஓவர்ரைம் செய்வதால் தான் தான் பிந்தி வருவதாக அவள் பல தடவைகள் சொல்லியும் அவரோ அதை நம்பத் தயாராக இல்லை. வேலை முடிந்ததும் ஒரு பெடியனோடு போய் 'வேலை' செய்வது தான் உண்மையான காரணம் என்பது அவரது கண்டுபிடிப்பு. தான் ஒரு ஐன்ஸ்டீன் என்ற நினைப்பு போலும். அவள் ஓவர்ரைம் செய்வதென்பது தான் உண்மை தான். புருஷலட்சணம் புருசனுக்குத் தெரியாது இருக்குமானால் மனைவி ஓவர்ரைம் செய்து தானே ஆக வேண்டும். அன்று அவள் ஓவர்ரைம் முடித்து களைப்புடன் வீடு சென்றாள். வாசலில் புருசனைக் கண்டதும் 'அறுவான் இண்டைக்கும் கொல்லத் தான் போறான்' என்று அவள் நினைப்பதற்குள் 'கள்ளி, ஓவர்ரைம் செய்யிறாளாம். ஓவர்ரைம்' என்றபடி பாய்ந்து கையை நீட்டினார். அவ்வளவுதான். வலது கை கழண்டு கொண்டது. ஐயோ என்றபடி மயங்கி விழுந்தான். கல்லானாலும் கணவன் அல்லவா. அவளது மனம் இரங்கியது. 'தெய்வமே, நான் கற்புடையவளானால் கழண்டு போன எனது கணவனின் கையை ஒட்டப் பண்ணு' என்றபடி அம்புலன்ஸ்க்கு அடித்து விட்டு அது எப்போது கூய்! கூய்! என்று கத்திக் கொண்டு வரும் எனக் காத்திருந்தாள். அது வருவதற்குள் கல்லானவரின் மயக்கம் தெளிந்தது. கழண்டு போன கையை டெஸ்ட் பண்ணினார். அது பொருத்தப்படவில்லை. 'கிட்டவா' என்று செல்லமாக அழைத்தார். மனிசன் திருந்தி விட்டான் என நினைத்துக் கிட்டச் சென்ற போது 'ஓவர்ரைமோடி' என்றபடி கழண்டு விழாத இடதுகையை உயர்த்த அதுவும் கழண்டு விட்டது. மயங்கினார். அவள் மீண்டும் அம்புலன்ஸ்க்கு அடிக்கப் போகையில் வெளியே கூய்! கூய்! கேட்டது.

(பி.கு: கை கழண்டு விழும் வியாதி உண்மையிலேயே உள்ளது. எனக்குத் தெரிந்த முதியவர் ஒருவருக்கு வயலில் வேலை செய்யும் போது கை கழண்டு கொள்ளும். தானாகவே அதைப் பொருத்திக் கொண்டு கலப்பையால் நிலத்தை தன்பாட்டில் உழுது கொள்வார்.)

# புகலிடத் தமிழரை கொச்சைப்படுத்தும் ஈழத்து வெளியீடுகள்

நிவேதிகா

இலங்கையிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகளும் சஞ்சிகைகளும், புகலிட தமிழர்களை கேவலமாக எழுதி நகைச்சுவை உணர்வை ஏற்படுத்த முயன்று வருகின்றன. முன்பு வெளிநாடு சென்றவர்களை 'நக்கச் சென்ற நாய்கள்' என்று கவிஞர் ஒருவர் வர்ணித்திருந்தார். கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு சஞ்சிகையின் முதற்பக்கம் காலைக்குரல் என்னும் தலைப்பின் கீழ் சில வரிகள்.....

"உலகில் வாழும் தமிழ் மக்கள் மொழியை மறந்து இனத்தை மறந்து குளிர் தூக்கம் அடிக்கிறார்கள். தமிழ் தெரியாத தமிழன். தேவாரம் தெரியாத சமயவாதி, இன அன்பில்லாத உலகத்தமிழன், வெகுவிரைவில் உருவாகப் போகிறான். தமிழுலகம் இதை தடுத்து நிறுத்தாவிடில் எமது இனத்தின் நிலை 'கையைத் தட்டு ராக்கம்மாவாகவே முடியும்" இது இவரின் கற்பனையின் ஏக்கமா? உண்மையாகவே தமிழுக்காக துயரப்படுகின்றாரா? என்பது புரியவில்லை. தமிழ் அழிந்து விடும் என துயரப்படும் இவரது எழுத்தில் கேவலமான கீழ்த்தரமான எழுத்துக்களே அழகிய தமிழுக்கு கேவலத்தையும் வேதனையையும் தருகின்றன.....

கேள்வி பதிலில் கனடாவில் வாழும் தமிழ்ப்பெண்கள் விவாகரத்தை அதிகம் விரும்புகிறார்களாமே?

தமிழ் வாலிபர்கள் குளிருக்கு உதவாத குணசீலன்கள் என நினைக்கிறார்கள் போலும் என பதில்.

தங்கள் கணவனை மாற்றிக்கொண்ட மனைவிமாரின் புள்ளி விபரங்கள் எதையும் பெற்றிருப்பார் போலும் பெண்களை இழிவுபடுத்தி எழுதுவது ஏன்?

மார்பில் புரளும் சங்கிலியுடன் தான் கனடாஅகதி, டென்மார்க் அகதி, பிரான்ஸ் அகதி என சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறான் என மீண்டும் ஓர் பதில். எல்லையை தாண்டிவிட்டால் கனடா தமிழர்கள், பிரான்ஸ் தமிழர்கள் என அங்குள்ளவர்கள் முத்திரைக் குத்திவிடுகிறார்கள். இங்கோ கேஸ் முடியாமல் அலையும் தமிழர்கள் குளிரில் இரவும் பகலுமாய் உழைப்புடன் போராடித்தான் வாழ்க்கை நடாத்துகிறார்கள் என்பதை இவர்கள் அறிய நியாயமில்லைதான். ஒரு சிலரின் வாழ்க்கை முறையை வைத்து ஒரு தமிழ் சமுதாயத்தை கேவலப்படுத்துவது ஏன்?

ஒரு சஞ்சிகையோ, பத்திரிகையோ ஒரு நாட்டிலிருந்து வெளியானால் அது உலக நாடுகளுக்கெல்லாம் சென்று உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே நேசத்தையும் நல்லுணர்வையும் நல்ல எண்ணப்பரிமாற்றங்களையும் உண்டுபண்ணும் ஒரு தொடர்பாகவே அமையவேண்டும். அதைத்தவிர்த்து வேதனையை உண்டுபண்ணக் கூடாது.

வெளிநாடு சென்ற எம்மவர்கள் வேறு பாஷைகளைப் பேசி கலப்பினக் கலாச்சாரத்தில் மூழ்கி எமக்கு அன்னியராகி விடுகின்றார்கள், உள்நாட்டில் வாழும் நாம் பல ஜாதியினராகி பிளவுண்டு பிரதேசவாதியாகி அன்புப் பிணைப்பு அறுந்து இன உணர்வு குன்றிக் குறுகிய தமிழ்பேசும் மக்களாகி விட்டோம் என வருந்துகிறார்.

புகலிடத்திலிருந்து நிறையவே வீரகேசரி, தினமுரசு, சரிநிகர், இறக்குமதி செய்யப்படுகின்றது. இலங்கையை விட புகலிடத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் ஏராளம்... இவற்றை பாஷை மறந்த தமிழனால் தான் வெளியிட முடிகின்றதா? புகலிட பத்திரிகைகள் இத்தனை வருகின்றனவே. புகலிடங்களில் பாஷைகள் அழிகின்றனவா, வெளிநாட்டு சஞ்சிகைகளைப் போல் எமது சஞ்சிகைகள் கவர்ச்சி இல்லாமல் இருக்கலாம் என வருந்துகிறார் ஒருவர்... சுமைகள் என்ற தலைப்பில் வெறும் கையெழுத்தில் எழுதப்பட்டு போட்டோ கொப்பி எடுத்து சஞ்சிகையாக உருப் பெற்றிருந்த சஞ்சிகையை நான் படித்தேன். புகலிட நிலைமைகளை இவர்கள் அறிய நியாயமில்லைதான் அதற்காக அறியாதவைகளையெல்லாம் வைத்து அறிந்தவற்றை எழுதுவது போல் எழுதுவது ஏன்?

கொழும்பிலிருந்து வரும் ஒரு தமிழ் பத்திரிகையில் கட்டுரையில் சமகால புகலிட வாழ்வில் ஊசலாடும் தமிழ் கலாச்சாரம் என்ற கட்டுரையில் சில வரிகள்.. திருமண விழாக்களுக்குத்தானே பெண்கள் சாறி கட்டல், சில பெண்கள் திருமண மண்டபத்துக்கு வந்தே சாறியை உடுத்துக் கொள்ளும் நிலையும் உள்ளது என்கிறார்.

கொழும்பில் கூட திருமணத்துக்கு 10 நிமிடங்களுக்கு முன்பே தான் மணமகன் ட்ரவுசருக்கு மேல் வேட்டியை சுற்றிக் கொள்கின்றார். ஒரு பண்பாட்டிற்காக. இதனால் கலாச்சாரம் அழிந்து விட்டதா? மொத்தத்தில்' கோட்டும் சூட்டும், டை இவற்றுடன் தானே எந்த ஒரு நல்ல நிகழ்ச்சிக்கு சென்றாலும் புகலிடத்திலும் சரி, கொழும்பிலும் சரி, ஆண்கள் செல்கின்றார்கள். இதனால் கலாச்சாரம் அழியவில்லையா? பெண்களின் சாறிக்குள் குளிர் ஊடுருவுகிறதாம் அதனால் புகலிடங்களில் பெண்கள் சாறி உடுத்த சிரமப்படுகின்றார்கள் என வருத்தம் ஏன்? ஜீன்ஸ் உடுத்தும்போது மட்டும் ஜீன்சுக்குள் குளிர் ஊடுருவதுதில்லையா?.....

கொழும்பில் இறுக்கமான டைட் ஸ்கட்டுகளுடனும், மினிகவுன்களுடனும், பெண்கள் செல்லவில்லையா, அங்கே கலாச்சாரம் அழியவில்லையா? நெற்றியின் உச்சியில் குங்குமம் வைத்திருப்பார்கள் அது என்ன ? என்று வெள்ளைக்கார நண்பர்கள் கேட்கிறார்களாம்?....


அட ஈழத்தில் சிங்களவர்களும் தான் கேட்பார்கள் ஏன் பொட்டு வைக்கிறார்கள் என?

இங்கு வந்து பல மாதங்கள் குடும்ப வாழ்க்கை வாழ்ந்த பின்னரே பெண்கள் திருமணம் செய்து கொள்கின்றார்களாம், புகலிடங்களில் வாழ்பவர்கள் வானலோகத்தில் இருந்து இறங்கி வந்த தேவதைகளோ தேவர்களோ அல்ல... அவர்களும் சாதாரண மனிதர்கள் தான்... அங்கிருந்து துயரங்களை சுமந்து வந்தவர்கள் தான்... அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் வாழ்க்கை திசையில் ஏற்படும் மாற்றங்களை குறை கூறி எழுதுவதால் எந்த வித மாற்றமும் உருவாகப் போவதில்லை..

கொழும்பிலும் கடற்கரையோரங்களில் குடைகளுக்கு கீழ் வாழ்ந்து விட்டுத்தானே பின்பு குடும்பம் நடாத்துகின்றார்கள்... இவையெல்லாம் அழியாத, உள்ளூர்க்கலாச்சாரமோ? அன்றும் இன்றும் எங்கும் நடப்பவை நடந்துக்கொண்டுதானிருக்கின்றது.. புகலிடத்தில் மட்டும் ஸ்பெஷலாக ஒன்றும் நடக்கவில்லை.

ஆண்கள் சீதனம் கேட்கின்றார்கள்? கத்திக்குத்து கலாச்சாரம் சாதிச்சண்டை வழக்கமாகி வருகிறது தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் புகலிட பிரச்சனைகளை போக்க முயல்கின்றன என கூறுகிறாரே கட்டுரையாளர்...

**19ம் பக்கம் பார்க்க..**



அருண்

# புன்னகை என்ன விலை?

அச்சமயத்தில் யாரும் மதுபோதையில் அங்கு வந்திருந்தால் தவறிக் காட்டுக்குள் வந்து விட்டோமோ என ஐயப்படக்கூடும். இருக்காதா பின்னே. அந்த இருளில் குணம் அண்ணரின் குறட்டை அறையின் ஆறு பக்கங்களிலும் மோதி மீண்டு விலங்குகளின் சத்தம் போன்றே நிலவி நின்றிருந்தது. இதற்கெல்லாம் இசைவாக்கம் பெற்றிருந்த இன்னொரு ஜீவன் சஞ்சயன் அமைதியான ஆழ்த்த தூக்கத்தில். குணம் அண்ணர் திடுக்கிட்டு அலறியடித்து எழுந்து கொண்டார். சரமாரியான துப்பாக்கிச்சத்தமாக அவருக்கு பிரதிபலித்திருக்க வேண்டும் அந்த ரெலிபோன் மணி. இந்த இரண்டு சத்தங்களிலும் சஞ்சயன் எழுந்து கொண்டான்.

"ஹலோ .........

" யேஸ் , ஸ்பீக்கிங் .........

"புறம் வெயர்? ...... யேஸ் , யேஸ் . ஐ வில் ........ஐ வில் அக்சப்ற சாஜேர்ஸ் ...... தங் யூ"

" ஓமோம் சஞ்சயன் தான்"

"இண்டைக்கோ? ..... இப்ப .... .இங்கை ..... குணம் அண்ணை அந்த மணிக்கூட்டை திருப்புங்கோ ...... 2 . 10 சாமம்."

"என்ன 26 மணித்தியால பிளைற்றோ ? "

"ஆ அப்படியே . எங்க சிட்னியிலே 4 மணித்தியாலமே ? "

"சரி சரி எப்படியும் இன்னம் ஒருநாள் இருக்குது. இண்டைக்கு விடிஞ்சால் திங்கள். நாளைக்கு
பின்னேரம் ஆறரை ஆகும் வந்து சேர எண்டு நினைக்கிறன். "

" சரி நான் எயப்போட்டில் நிப்பன். ........ மற்றது சைந்தவி பக்கத்தில் நிக்கிறாவே? ..... ஒருக்கால் அவவிட்டைக் கொடுக்கிறீங்களே!"

"என்ன சந்தோசமாய் இருக்குமெண்டு நினைக்கிறன். இன்னும் ஒரே ஒரு நாள்தானே. அது பறந்
திடும். பிறகு என்னட்டை வந்து சேர்ந்திடுவீர். ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். நான் வெளிக்கிட்ட அண்டைக்கு நீர் சொன்னது ஞாபகம் இருக்கே?"

"என்ன ம் ம் எண்டிறீர். ஓ பக்கத்தில ஆக்கள் இருக்கினம் போல . மற்றது இங்கை வந்து கேக்கிற விஷயம் கடிதத்தில எழுதினானல்லோ. அதை ஒருக்கா திரும்பவும் பாத்துக் கொள்ளும். மற்றது என்ரை பெயரை ரெலிபோன் நம்பரை விலாசத்தை எல்லாம் கொடும். அதிலை பிரச்சனை இல்லை. நான் இங்கை விசாரிச்சுட்டன். மற்றது .... இனி என்ன இங்கை வந்து கதைப்பம். நான் வைக்கிறன் ....பொறும் பொறும் மூர்த்தியிட்டை ஒருக்கா குடும்."

"தனியவை அனுப்பிறீயள் ?"

"ஆ சரி ஏனெண்டால் அவ கொஞ்சம் பயந்தவ. மற்றது றூட் நல்ல றூட்தானே?"

"ஆ சரி சரி சந்திப்பம் என்ன!"

அறுவது டொலருக்கு கணக்கு வந்திருக்கும். சஞ்சயனின் புழக்கத்திலே இத்தொகை ஒருதூசு. இதுக்காக எட்டு மணித்தியாலம் காய வேண்டும். கோட்டு சூட்டு போட்டாலும் எல்லாம் கழற்றிவிட்டு கச்சையுடன் வேலை செய்வது போன்ற பிழைப்புத்தானே. அதிலை வரி மட்டை யெல்லாம் கழித்தால் அவ்வளவுதான் தேறும்.

குணம் அண்ணர் கையால் நாடிக்கு முண்டு கொடுத்துக் கொண்டு குத்துக்கல்லாட்டம் அமர்ந்திருந்தார்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிலவரம். இவனுக்கு மனிசி வர தான் ஒண்டுறதுக்கு ஒரு இடம் பார்க்க வேண்டுமென அவர் கவலையை மேய விட்டிருக்கக்கூடும்.

"அண்ணை எனக்கு நித்திரை பறந்தொடிவிட்டது போல் இருக்குது எனச் சொல்லிக் கொண்டு சஞ்சயன் சைந்தவியின் படத்தை நோட்டம் விட்டான் . அப்படம் இருளில் விழித்தால் கூட தெரிவதற்காக எப்போதும் ஒளி அடிக்கப்பட்டிருக்கும்

"பிறகென்ன சஞ்சயன் மனுசியும் வரப்போறா. சந்தோசம்தான். முதலில் உந்தத் தாடியை வழிச்சுப்போட்டு மனுசியைக் கூப்பிடப் போம் ...... உம்மை இனிப் பிடிக்கேலாது. நான்தான் மூட்டைமுடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு அலைய வேணும்."

குணத்தாரின் பேச்சில் பூரண தொனி இல்லாததை உணர்ந்து கொள்ளும் நிலையில் சஞ்சயன் இல்லை. தாடியைத் தடவியபடி அவன் வேறு சிந்தனையில் இருந்தான்.

"சரி சஞ்சயன் நீர் படுக்கிற நேரத்துக்குப் படும் அல்லது முழிச்சிருக்கிறதெண்டாலும் இரும். நான் சரியப் போறன். எனக்கு கண்ணைச் சுழட்டுது."

குணத்தார் எப்படிச் சொல்லிக் கொண்டாலும் அவருக்கு நித்திரை வரப் போவதில்லை. ஆனாலும் அவர் மெதுவாய் கட்டிலில் சரிந்தார். சஞ்சயன் மட்டும் மணிக்கூட்டின் செக்கன்கள் வளர்ந்து முடிவதில் உன்னிப்பாய் இருந்தான்.

சஞ்சயன் பழைய நினைவுகளை மீள அழைத்து சுகங்கண்டு கொண்டிருந்தான். அதனையும் மீறி உடல் அலுப்பு அவனை நித்திரைக்குள் விழுத்திவிட்டது. சஞ்சயன் நித்திரை கலைந்து எழுந்தபோது 7 மணி.

குணத்தார் வழமைக்கு மாறுதலாய் எழுந்து திருநீறு பூசிக்கொண்டு தெரிந்தவர்களை யெல்லாம் தொலைபேசியில் துயில் எழுப்பி உறையூளுக்காக விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்.

சஞ்சயன் இன்றைக்கும் நாளைக்குமாக வேலைக்கு விடுப்பும் கொடுத்து விட்டு வரப்போகும் மனைவிக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்குச் செல்ல ஆயத்தமானான். இன்னும் அவன் கலியாணம் செய்து கொள்ளாவிடினும் மனைவி என்று சொல்வதில் தவறு இருப்பதாய் தெரியவில்லை. ஏனெனில் சைந்தவி
இலங்கையில் இருக்கும்போதே இவனது படத்தை முன்னுக்கு வைத்து மானசீகமாக அவனை எண்ணி தன் கழுத்தில் தானே தாலி கட்டிக்கொண்டவள். அந்தத் தாலியுடன்தான் அவள் வருகிறாள். சஞ்சயன் புறப்பட ஆயத்தமானான்.

" அண்ணை ஏதும் "கொலக்ற் கோல்" வந்தாலும் அக்சப்ற் பண்ணி விஷயத்தைக் கேட்டு வையுங்கோ"

" ஓம் ஓம் . ஆனால் நான் 11 மணிக்கு இறங்கி விடுவன். அதுக்குள்ளை வந்தால் அக்சப்ற் பண்ணுறன்." இது குணத்தார்.

" ஓ கே அண்ணை. நான் வாறன்"

சஞ்சயனுக்கான நாளொன்று நகர்ந்து மறைந்தது மிக மெதுவாய். மறு நாளில் பாதி வர முன்பே அவனுக்கு பரபரப்பு ஆர்முடுகிக் கொண்டது. சவரம் செய்து குளித்து உச்சியில் பிரசன்யமாயிருந்த வெளியை பின்னுக்கு முன்னுக்கு கரைகளில் இருந்த சில முடிகளால் நிரவ பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தான்.

எல்லாத்துக்கும் வரப்போகிறவள் அவன் காதலிதான். ஆனாலும் அவன் மனம் மட்டும் ஏனோ துருதுருத்துக் கொண்டது. 8 வருடங்களின்பின் காணப்போகும் காதலி இவனைச் சந்திக்கும் போது மனச்சஞ்சலம் கொள்ள தான் காரணமாயிருக்கக் கூடாதென நினைத்திருக்கக்கூடும். இரு மணித்தியாலத்தின் பின் குளியல் அறையிலிருந்தும் மீண்டான். ஒருநாளும் இல்லாத மாதிரி. பரபரக்கச் சாப்பிட்டான். விமான நிலையத்திற்கு செல்வதற்கான ஆயத்தங்களை

26ம் பக்கம் பார்க்க..

# குர்திஷ்தான்: புதிய தாக்குதல்கள்!

குர்திஷ் தீவிரவாதிகள் நீண்டகாலமாக துருக்கி அரசுக்கெதிராக நிகழ்த்திவரும் யுத்தத்தில் ஒரு புதிய தாக்குதலை நவம்பர் மாத முதல் வாரத்தில் ஐரோப்பிய நகர்களில் நிகழ்த்தினர். இங்கிலாந்து ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, டென்மார்க், அவுஸ்திரியா போன்ற நாடுகளிலுள்ள துருக்கிய வங்கிகள், பயண முகவர் நிலையங்கள், கடைகள் போன்றவை குர்தீஷ் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டன. பெற்றோல் குண்டுகளும் வீசப்பட்டன.

ஜேர்மனியிலுள்ள 28 நகர்களில் இத்தாக்குதல்கள் இடம் பெற்றன. சுவிற்சலாந்திலுள்ள 3 நிலையங்கள், மற்றும் லண்டன், கொப்பன்காகன், வியன்னு, ஸ்ராஸ்பூர்க் ஆகிய நகரங்களிலும் தாக்குதல்கள் நடந்துள்ளன. PKK என்றழைக்கப்படும் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியினுலேயே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து துருக்கிப்பிரதமர் திருமதி கில்லர் விடுத்துள்ள அறிக்கையில் துருக்கியின் கிழக்குப் பகுதியிலுள்ள அயல்நாடுகளான ஆர்மீனியா, ஈரான், ஈராக், சிரியா போன்ற நாடுகள் பி.கே.கேக்கு ஆதரவளிப்பதை நிறுத்தி விடவேண்டும் என்றும் இந்த நாடுகள் தாங்கள் துருக்கியின் நண்பர்களா பகைவர்களா என்பதை பகிரங்கமாக தெரிவிக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார். ஜேர்மனியில் பி.கே.கே யின் நடவடிக்கைகள் தடை செய்யப்பட வேண்டும் என்பதும் துருக்கியப் பிரதமரின் கோரிக்கைகளில் ஒன்று. அதேசமயம் ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சரான கிளோஸ் கின்கெல்லும் சமீபத்திய தாக்குதல்களை அடுத்து "ஜேர்மனியில் பி.கே.கே தடை செய்யப்பட வேண்டிய காலகட்டம் வந்து விட்டது" எனக் கூறியுள்ளார். ஜேர்மனியின் வைஸ்பாடென் பகுதியிலுள்ள துருக்கிய உணவுவிடுதி ஒன்றில் நடந்த தாக்குதலில் துருக்கியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் எட்டுப்பேர் காயமடைந்தனர். ஹனேவர் நகரில் தாக்குதல் நடத்த முயன்ற குர்தீஷ் தீவிரவாதி ஒருவரது கையிலிருந்த பெற்றோல் குண்டு வெடித்து அவர் கொல்லப்பட்டார்.

குர்திஷ் மக்களில் பெரும்பான்மையோர் பி.கே.கேயின் ஆதரவாளர்களே. பி.கே.கே. யூன் மாதத்திலிருந்து துருக்கிக்கு வெளியே துருக்கிக்கு எதிராக புதிய முறையிலான நகரப்புறத் தாக்குதல்களை முடுக்கியுள்ளது. இத்தகைய ஒரு தாக்குதலுக்கான தயாரிப்புக்களில் கடந்த நாலு மாதங்களாக பி.கே.கே ஈடுபட்டிருந்தது என ஜேர்மன் பொலிஸ் பிரிவு அறிக்கை ஒன்று கூறுகிறது.

பேர்லினில் ஒரு துருக்கி வங்கி, ஒரு பயண முகவர் நிலையம், ஒரு வானொலி நிலையம் ஆகியவை தாக்கப்பட்டன. பிராங்போர்ட் நகரிலுள்ள பிரபல துருக்கிப் பத்திரிகையான HURRIYET இன் ஐரோப்பிய தலைமை அலுவலகத்துக்குள் புகுந்த 20 குர்தீஷ் தீவிரவாதிகள் அலுவலகத்தை சேதமாக்கினர். பொன், மான்ஸ், ஹனேவர் போன்ற இடங்களிலும் தாக்குதல்கள் நடந்தன. டென்மார்க்கில் துருக்கிய விமான நிறுவன அலுவலகமும், துருக்கிய தகவல் நிலையமும் தாக்கப்பட்டன. சுவிற்சலாந்தில் துருக்கிய தூதரகமும் மற்றும் பல துருக்கிய நிறுவனங்களும் தாக்கப்பட்டன. குறிப்பாக சூரிச் நகரிலுள்ள துருக்கிய பயண முகவர் நிலையத்தின் மீது பெற்றோல் குண்டுகளும் வீசப்பட்டன.

இந்தத் தாக்குதல்களை அடுத்தே துருக்கியின் பிரதமர் திருமதி சில்லர் ஆர்மீனியா, ஈரான், ஈராக், சிரியா ஆகிய அயல்நாடுகள் பி.கே.கேக்கு பின்தளமாக இருப்பதுடன் ஆயுதங்களையும் வழங்கி வருகின்றன என்று குற்றம் சாட்டியுள்ளதுடன் தேவை ஏற்பட்டால் இந்த நாடுகளுடனான எல்லைகளை மூடுவது குறித்தும் துருக்கி யோசிக்கும் என குறிப்பிட்டுள்ளனர். அதுமட்டுமல்ல குர்திஷ் மக்கள்மீது பழிதீர்க்கும் தன்மையையே அரசாங்கம் தொடர்கிறது. குர்திஷ் மக்கள் பெருமளவில் வாழும் துருக்கியின் தென்கிழக்குப் பகுதியின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட 75 மில்லியன் டொலர்களை துருக்கிய அரசு நிதி வெவ்வேறு வழிகளால் பி.கே. கேயைப் போய் சேருகிறது என்பதுதான்.

ஆனுல் பி.கே.கேயின் சமீபத்திய தாக்குதல்கள் துருக்கிய அரசாங்கத்துக்கு பெரும் சவாலாகவே அமைந்திருக்கின்றன. பி.கே.கே. மீண்டுமொருமுறை தனது பலத்தை வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை துருக்கிய அரசாங்கம் எத்தகைய மோசமான பிரச்சனையை எதிர் கொள்கிறது என்பதும் வெளியாகியுள்ளது.

ஆனுல் துருக்கிய அரசு தன்னை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. குர்தீஷ் மக்களின் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வையே துருக்கியின் அரசு நாடுகிறது. மேற்படி தாக்குதல்கள் குறித்த செய்திகள் வெளிவருவதற்கு சில மணிநேரங்களின் முன் துருக்கிப்பிரதமர் கில்லர் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் குர்தீஷ் தீவிரவாதிகள் மீது இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதற்கு தனக்கு ஆதரவு தரும்படியும் மிகக்கடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை நிறைவேற்ற தனக்கு உதவும்படியும் கேட்டுள்ளார். இது பிரதமர் திருமதி

## சுழலும் உலகம்



**தி. உமாகாந்தன்**

சில்லரின் சுயருபத்தை வெளிக் கொணர்ந்துள்ளது. ஒரு மாதத்துக்கு முன்னர் குர்தீஷ் மொழியில் கல்வி பயிலும் சட்டமுலத்தைக் கொணர்ந்துவருவேன், தொலேக்காட்சியிலும் குர்திஷ் மொழிச்சேவையை அறிமுகம் செய்வேன் என வாக்குறுதி அளித்தே இவர் பதவி ஏற்ருர்.

அதுமட்டுமல்ல பிரதமர் சில்லர் பி.பி.கே.யுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது முடியாத காரியம் ஏனெனில் பி.கே.கே. குழந்தைகளையும், கர்ப்பிணிகளையும் கொலைசெய்யும் ஒரு கூட்டம் எனக்கூறி பேச்சுவார்த்தைக் கதவுகளை இறுக மூடியுள்ளார். இவர் கொண்டுவர முயலும் சட்டமூலத்தின்படி குர்தீஷ் தீவிரவாதிகள் ஒழுங்கு செய்யும் ஹர்த்தால்களின் போது கடைகளை பூட்டும் வர்த்தகர்கள் கூட பயங்கரவாதிகளாக கருதபட்டு கைதுசெய்யப்படும் நிலை உள்ளது. குறிப்பாக துருக்கியின் தென்கிழக்குப்பகுதியில்வாழும்குர்திஷ் மக்கள் மீது பெரும் கொடுமைகளை நிகழ்த்திவரும் துருக்கிய இராணுவத்துக்கு இச்சட்டமூலம் ஒரு பாதுகாப்புக் கவசமாகும்.

அரசாங்க ஆதரவாளர்கள் மீதும், தம்மைப் பற்றிய தகவல்களை இராணுவத்துக்கு கொடுப்பவர்கள் வாழும் கிராமங்கள் மீதும் பி.கே.கே சமீப நாட்களில் பல தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளது. இதனுல் துருக்கிய மக்கள் பி.கே.கே மீது ஒரு பலமான இராணுவ நடவடிக்கையை எடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்துகிருர்கள். ஆனுல் இன்றைய நிலையில் இதற்கான சாத்தியக்கூறுகள் குறைவே. காரணம் குர்தீஷ் மக்களின் எண்ணிக்கை பெரியது. அத்துடன் பலவேறு நாடுகளில் பரவலாக அவர்கள் வாழ்கிருர்கள் துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் ஈரான், சிரிய எல்லைகளை அண்டி 12 தொடக்கம் 15 மில்லியன் குர்திஷ் மக்கள் வாழ்கிருர்கள். இந்தப்பகுதிகளில் 15 இலட்சம் தொடக்கம் 25 இலட்சம் வரையிலான துருக்கியப் படைகள் இப்பகுதியில் நிலை கொண்டுள்ளன இன்னும் மேலதிகபடையினர் இப் பகுதிக்கு விரைவில் அனுப்பப்படுவார்கள்.

1984ம் ஆண்டே பி.கே.கே. துருக்கிய இராணுவத்தின் மீதான தனது முதலாவது தாக்குதலை நிகழ்த்தியது அப்போதிலிருந்து இதுவரை நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தில் கடந்த ஆறுமாதத்துக்குள் சம்பவித்த இறப்பு எண்ணிக்கையே மிக அதிகமானதாகக் கருதப்படுகிறது. ஆறு மாதத்துக்குள் இறந்தவர்கள் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை 10 ஆயிரம் என துருக்கி தரப்பு செய்திகள் கூறினுலும் குர்திஷ்தான் தரப்புத் தகவலின்படி இவ்வெண்ணிக்கை பல மடங்கு அதிகம்.

பி.கே.கே. யின் தாக்குதல்களை பி.பி.கே யின் பலத்தை வெளிப்படுத்திவரும் போதிலும் இத்தாக்குதல்களைத் தொடர்ந்து துருக்கிய இராணுவம் நிகழ்த்தும் இராணுவ வெறியாட்டங்கள் குர்திஷ் மக்களுக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்துகின்றன. சர்வதேச சமூகத்தின் கவன எல்லைகளுக்குள் தட்டுப்படாத இநத இனம்தொடர்ந்தும் எல்லையில்லாத துயரத்தையே அனுபவிக்கிறது. இருதரப்புமே இராணுவத் தீர்வை நாடும்போது இடையில் அகப்பட்ட மக்களின் நிலே சோகமானது. இதற்கு இன்னுமொரு உதாரணம் குர்திஷ் மக்கள்.

## புகலிடத்தில்..

ஒரு பக்கம் சாதிப்பிரச்சனே மக்களிடையே என எழுதிவிட்டு மணமகன் தேவை பகுதியில் வெள்ளாள மணமகனுக்கு வெள்ளாள மணமகள் தேவை... அழகு, குணம், அறிவு, உயரம், படிப்பு, சீதனம், வெஜிட்டேரியன் சாப்பிடுபவராக இருக்க வேண்டும், வர்த்தக குடும்பத்தைச்சேர்ந்த மணமகனுக்கு வர்த்தக குடும்பத்தில் மணமகள் தேவை... இன்னும்... மணமகன் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எந்த வித கெட்ட பழக்கமும் இருக்க கூடாது. அப்பன் குடிகாரனுய் இருந்தால் பிள்ளைக்கு வாழ்வு இல்லையா? கொழும்பிலிருந்த வெளிவரும் எந்த நகைச்சுவைகளும் நகைச்சுவை உணர்வை ஏற்படுத்தாத போதிலும் மணமகன் தேவை. பகுதியைப்பார்த்தால் நகைச்சுவை ஏராளமாய் கிடக்கும்.

புகலிடத்தில் மட்டும் தானு கத்திக்குத்து கலாச்சாரம் வளர்கிறது? அங்கு 10 வயது சிறுமிக்கு கூட ஏ.கே. தூக்கி வீராங்கனையாக வில்லையா? 16 வயது மீசை அரும்பாத இளைஞன் லெப்டினன் ஆகவில்லையா? புகலிடத்தில் ஒரு சிலர் கத்திக்குத்தில் ஈடுபட்டதும், துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டதும், ஒரு கலாச்சாரமாகி விட முடியுமா?... ரெஸ்ரோன்டில் வேலை செய்து கொண்டும் இரவு பகலாய் படித்துக்கொண்டும் எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் இங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கின்ருர்கள். தானே சமைத்து, தானே தன் கடமைகளை செய்து வாழ்வில் உயர்ந்த இலட்சியங்களை அடைந்துவிடவேண்டும் என வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்.... நல்லவைகள் கண்களுக்கு தெரியாமல் போய்விடுகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தான் மனிதனது வாழ்வும் திசை மாறுகின்றது. இங்கே சாறிக்குள் குளிர் ஊடுருவதால்தான் . பெண்கள் சாறி அணிய முடியாமலிருக்கின்றது. அங்கு பெண் புலிகள் சாறி கட்டிக்கொண்டு போரிடுவது சிரமமாக இருப்பதால் தான் ஜீன்ஜம் டீசேட்டும் அணிந்துக்கொண்டு போரிடுகிருர்கள், கொழும்பில் நாகரீகம் வளர்ந்து வருவதால் மேல்நாட்டு பாணியில் உடை அணிகின்ருர்கள், எங்கும்தான்.. எல்லாம் நடக்கின்றது. புகலிடத்தில் மட்டும் அல்ல. அங்குள்ளவர்கள் புகலிடத்தில் உள்ளவர்கள் ஏதோ சுகபோக வாழ்வு வாழ்ந்துக் கொண்டிருப்பதாக கனவு காண்பது தவறு. சுவீடனில் அகதிகள் உண்ணுவிரதமிருக்கிருர்கள், கேஸ் முடியாமல் தாங்கள் திருப்பி அனுப்பப்படுவோமா? என்ற கேள்விக்குறியுடன். எங்கும் தமிழர்கள் துயரத்தை சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்... அவர்களின் துயரங்களை எந்த பத்திரிகையும் எழுதுவது இல்லை...குறிப்பிட்ட சிலரின் வாழ்க்கை முறைகளை வைத்து ஒரு சமுதாயத்தை கேவலமாய் எழுதி, புகலிடத்திலிருந்து வரும் கட்டுரைகளை ஆய்வு செய்யாமல் பிரசுரிப்பது மிகவும் வேதனைக்குரியது. புகலிடத்தில் வாழ்பவர்களுக்கு சார்பாக நான் இக்கட்டுரையை எழுதவில்லை. எல்லா இடங்களிலும் தான் எல்லாம் நடந்துக்கொண்டிருக்கின்றன... புகலிடத்தில் மட்டும் அல்ல.

# நிருபா:
# ஏக்கங்களும் போராட்டமும்.

"" AUTO-PRAXIS POUR UNE THEORIE FEMINISTE" என்ற தலைப்பில் பெண்ணிலைவாதம் மீது ஐரோப்பியர் பேராசிரியர் நண்பர் ஒருவர் எழுதியபோது பெண்புனைபெயர் ஒன்றையே பயன்படுத்திக் கொண்டார். ஏன் என நான் அவரிடம் விளக்கம் கேட்டபோது "பெண்ணிலைவாதம் தொடர்பான கருத்துமூலங்களை பெண்கள் வலியுறுத்துவதே நல்லது." என்று சுருக்கமாகப் பதில் சொன்னார். அப்படியாயின் நீங்கள் இந்தக் கட்டுரையை எழுதத் தேவையில்லையே என நான் பேராசிரியரிடம் கேட்கவில்லை. பிரஸ்தாப கட்டுரையில் பெண்களுக்கான சமத்துவம் உறுதி செய்யப்படாமல் உலகப்புரட்சி சாத்தியமாகாது என வலியுறுத்தப்பட்டமையும், உலகப் புரட்சியினது மூலம் பெண்களிடமே தங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. பெண்களின் மீது சிக்மண்ட் பிராய்ட் எழுதியவைகளை சமகாலப் பெண்ணிலைவாதிகள் காரமான விசாரணைக்கு எடுத்துள்ளனர்.

அபிவிருத்தியடையாத நாடுகளில் ஆணாதிக்கம் மேலோங்கி யுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளிலோ பெண்களுக்கான சமத்துவம் ஓரளவுக்கு சட்டரீதியாகத் தானும் உறுதி செய்யப்பட்டுள்ளது. புகலிடத்திலே வாழும் தமிழ்ப் பெண்களின் இலக்கியரீதியான ஆர்ப்பாட்டங்கள் ஆணாதிக்கத்தினது கொடுமைகளின் பதிவுகளாகத் தம்மை இனம் காட்டினும், வர்க்கப் புரட்சிப் பேசுவோர் இவைகளை எள்ளி நகையாடுவதிலேயே தமது நேரத்தை விரயம் செய்கின்றனர். சமூகக் கட்டுமானங்களினால் உளவியல் ரீதியாகத் தாழ்த்தப்பட்டுள்ள பெண்கள் சமூகம் மீதான தெளிவான ஆய்வுகள் புகலிடப் பெண்ணிலைவாதிகளால் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை, நிருபா மீது எழுதும் இந்தக் கணத்தில் ஓர் கோரிக்கையாக வைக்கின்றேன்.

* * * *

புகலிடத்தில் பெண்ணிலைவாதத்துக்கு உந்து சக்தியாக அன்றும் போல இன்றும் இருப்பது ஜேர்மனியே. மூன்று மாதத்துக்கு ஒரு தடவையென "பெண்கள் சந்திப்பு" நிகழ்கின்றது. "தேனீ" "ஊதா" போன்ற தரமான இதழ்கள் வெளிவருகின்றன. "நமது குரல்" இப்போது வெளி வருவதில்லை. நிருபா ஜேர்மனியில் வாழும் ஒரு இளம் பெண். ஜேர்மனிய பாஷையில் நன்கு பரீட்சயம் கொண்ட இவர், இந்தப் பாஷையிலிருந்து தரமான படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்துமுள்ளார். சில சிறுகதைகளை இவர் எழுதியுள்ள போதும், ஓர் கவிஞையாகவே பலராலும் அறியப்பட்டுள்ளார். புகலிடத்திலே தரமாக இலக்கியம் படைக்கும் ஒரு சில பெண்களுள் நிருபாவையும் குறிப்பிடலாம்.

* * * *

புகலிடப் பெண்களது இலக்கிய வடிவத் தேர்வாக இருப்பது கவிதையே. இந்த வடிவத் தேர்வைத் தாண்டி இவர்கள் அபூர்வமாகவே வேறு வடிவங்களுக்குச் செல்வதுண்டு. இதேவேளையில், ஆண்களினால் நடத்தப்படும் வெளியீடுகளில் பெண்களினது பங்களிப்பு குறைந்தேயுள்ளது என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும். பெண்கள் வாழ்வு ரீதியாகச் சந்திக்கும் நெருக்கடிகளே இவைகளுக்கான காரணம் எனக் கொள்ளலாம். புகலிடத்திலே, பெண்களது இலக்கிய இயக்கத்தை இழுத்துச் செல்லவேண்டும் என்பதில் அக்கறை, கொண்டவர்கள் வரிசையில் அடங்குவோராக எனக்குப் படுவோர் நிருபா, பானுபாரதி, ஜி.மோனிக்கா, பிரியதர்ஷினி.. ஆகியோரே.

* * * *

நிருபாவின் கவிதைகளில் ஏக்கங்களைத் தரிசிக்கலாம். ஆணாதிக்கத்தின் விமர்சனமாக, தம்மை இனங்காட்டும் ஒரு தனமும் உண்டு. இதேவேளையில் புகலிட உவாதைகளையும் இவர் பதிவு செய்யத் தவறவில்லை. தெளிவான வார்த்தைக் கோவைகளால் எதனையும் புரியவைத்துவிடும் ஓர் ஆற்றல் நிருபாவிடம் உண்டு. புலப்பெயர்வின் தாக்கங்களை ஜீரணிப்பதில் சிரமம் உண்டு என்பதையும் தேசத்து வாழ்விற்காக ஏங்குதல் தவிர்க்க முடியாது என்பதையும் நிருபா கவிதைகள் காட்டுகின்றன. இல்ல......
...அப்பிள் மரத்தடியில்
மாங்காய்களைத் தேடும்" கற்பனை நிருபாவிற்குள் எப்படி உதித்திருக்க முடியும்.

***"வீட்டின் கோடியில்***
***............***
***மாமரங்கள்***
***மரவள்ளி மாலை.....***

***நீர்வற்றிய***
***குட்டிக் கிணறு***
***குரும்பட்டித்தேர் இழுக்க(க்)***
***காத்திருக்கும் தோழியர்கள்"***
(சித்திரை 91 நமது குரல்)

அந்நிய தேசத்தில் எமது வாழ்வு ரீதிய இருத்தல் கேள்விக்குறியாக்கப் படும்போது குரும்பட்டித்தேரினை இழுக்க மனது கெந்தி எழுதல் தவிர்க்க முடியாததே.

* * * *

மனித உரிமைகளுக்கான ஆவேசத்தை மறுதலிப்பனவல்ல நிருபாவின் கவிதைகள். இந்த உரிமைகள் அங்கும் போல இங்கும் தடை செய்யப்பட்டன என்பது ஒரு உண்மையல்லவா! உணர்வுகளைக் கூடச் சுதந்திரமாக அள்ளிக்கொட்டமுடியாத நிலை புகலிடப் பெண்களுக்கு....
"கொல்லுவதற்கு பல வழிகள் உண்டு"

**25ம் பக்கம் பார்க்க..**

**இருத்தலியல் விசாரணைகள்**

**கௌரந்தி**

# சூரசம்ஹாரம் (2)

## வெற்றிகொண்டான்

"பொம்புளைப் பிரச்சினையில"

"ஓமோம் அதுதானே பாத்தன் என்னடா விட்ட இடம் அவ்வளவு கரக்டா நிக்குதெண்டு. சூரன் இந்திரனை பிடிச்ச போது இந்திராணி தப்பி விட்டா. சூரனுக்கு இந்திராணியையும் சேர்த்துப் பிடித்துவர வேணுமெண்டுதான் ஆசை, ஆனால் இந்திராணியை அவனால கண்டு பிடிக்க முடியல. சூரன் கொதித்துக் கொண்டிருக்கிறான். அப்ப இந்திராணி எங்க என்ன செய்து கொண்டிருக்கிறாள் தெரியுமோ?"

"தெரியும் இந்திரனை விடுவிக்க அவ உண்ணாவிரதமிருந்திருப்பா கடைசி நேரம் யாராவது கடத்திக் கொண்டு போய் சூரனிட்டை கொடுக்க சூரன் இந்திராணியை கலியாணம் பண்ணுவார் எண்டுதானே முடிக்கப் போறியள் எனக்குத் தெரியும் இது பொய்க் கதை புராணமல்லவெண்டு"

"இல்லைத் தம்பி நீ தெரிஞ்ச கதை மட்டும் கதையில்லை. அதைவிட தெய்வீகமான கதையெல்லாமிருக்கு அதுக்கு கொஞ்சம் படிச்சிருக்க வேணும். சொன்னால் கோவிப்பாய்"

"நான் படிக்கேல்லைத்தான் போகட்டும் அடுத்த பரம்பரையாவது சுதந்திரமாய் படிக்கட்டுமெண்டுதான் நான் இயக்கத்தில சேந்தனான்"

"தம்பி நீ படிக்காமல் இயக்கத்தில சேர்ந்து தான் அடுத்த பரம்பரை படிக்க வேணுமெண்டால் எங்களுக்கு அடுத்தொரு பரம்பரையே தேவையில்லைத் தம்பி. தேவையில்லையெண்டு நானென்ன சொல்லுறது அது இருக்காதுதானே. அதைவிடு இந்திராணி சிவபெருமானை வணங்கி முறையிட்டுக் கொண்டிருக்கிறாள் அப்ப சூரன்ரை தங்கை அசமுகி சூரனிட்டை தான் இந்திராணியை எப்படியாவது கொண்டு வந்து தாறன் எண்டு போறாள். இந்திராணியை எப்படியோ கண்டு பிடிச்ச அசமுகி இந்திராணியை கொண்டு போய் தமையனுக்கு பரிசாய் குடுக்க முயற்சிக்கிறாள். ஆனால் இந்திராணிக்கு காவலாய் நின்ற மகாகாளன் அசமுகியின்ரை கையை வெட்டி விடுகிறான். இதாலதான் சூரனுக்கு கோவம் வந்து பிறகு சிவபெருமான் முருகனை படைக்க சக்தி அவனுக்கு வேலைக் கொடுக்க தொடங்கினது சூரன்போர்"

"அது சரி தாரகாசுரன் பெரிய அசுரன் என்றீங்கள். எப்பிடி அவனை முருகன் தனிய விழுத்தியிருப்பான் அந்தக்காலம்"

"அவன் அசுரன் மட்டுமல்ல தம்பி. அவன் அரசாண்டது ஒரு பெரிய மலை கிரவுஞ்ச மலையெண்டு பெயர். அந்த மலையை அழிக்காமல் யாரும் சூரன்ரை நகரத்துக்கை போக முடியாது. அவ்வளவு பெரிய மலை. அதையும் விட தான் உயிரோடை இருக்கும் வரை தமையனை யாரும் அழிக்க முடியாது என்ற பெருமையும் அவனுக்கு. தமையனுக்காக உயிரை கொடுக்கிறதில அவனுக்கு அவ்வளவு பெருமையும் சந்தோசமும்"

"உது என்ன பெரிய விசயம்? எங்கட இயக்கத்தில எத்தின பெடியள் தம்பிக்காக உயிரைக் குடுக்கிருங்கள். கரும்புலி எண்டு. அதையும் விட உங்கட போரில வாறமாதிரி ஒரு மலை எங்கட போரிலையும் இருக்கு..... நீங்கள் சொல்லுங்கோ இதே இந்தக் காலமாயிருந்தால் ஒவ்வொரு வீதிக்கும் கண்ணிவெடியை தாட்டு முருகனையும் விரதகாறரையும் போட்டிருப்பம்"

"பொறும் தம்பி உணர்ச்சி வசப்படாதையும் இது சும்மா ஒரு கதைதானே கதை முடிவில உம்மட கருத்தை சொல்லுமன். அந்தா பார் சிங்க முகன் வாறான். பாரும் எல்லாரும் ஒற்றைக் கையில தூக்கி என்னமாய் ஆட்டுறானுகள்"

"ஆர் எதை ஒற்றைக் கையில தூக்கி ஆட்டினாலும் கடசில வெல்லுறது முருகன் தானே"

"நான் நினைச்சன் வல்வெட்டித்துறை ஆக்கள் வந்து தூக்கி ஆட்டினால் சிலவேளை சூரன் வெண்டுவிடுவானோ எண்டு நினைச்சன். அது சரி கடைசியில சூரன் தான் சாகவேணுமெண்ட விடயம் ஆட்டுற ஆட்களுக்கு தெரியுமே? ஏனெண்டால் அங்கயிருந்து வந்தும் சூரன் தோற்கிறது அவைக்குப் பிடிக்காது"

"பாரும் தம்பி முருகனும் சூரனும் தட்டு மறிக்கிறதை. பாரும் சூரனை நிலத்தில போட்டு இழுத்துக் கொண்டு ஓடுறாங்கள். பாரும் எறிஞ்சு போட்டு ஏந்துறாங்கள். இந்தத் தலை மேற்கு வீதியில விழும். பிறகுதான் சூரன் வருவான்"

"அது சரி திருவிழா முடிய சூரனை எங்கை வைப்பினம்? கோவிலுக்குள்ள தான் வைப்பினமோ? அல்லது புராணக் கதைப்படி வேற எங்கையேன் வைக்க இடமிருக்கோ"

"அதுவும் உங்கட போர் மாதிரித்தான் எல்லாம் ஒண்டுக்கை ஒண்டுதான். சூரன் போர் வரேக்கை மாத்திரம் சனத்துக்கு முன்னால இப்பிடி ஒரு சூரன் போர். சனம் வீட்டை போயிடும். சூரனும் முருகனும் கோவிலுக்குள்ள தானிருப்பினம். சிங்கமுகன் தலை விழுந்திட்டுது"

"என்ன சனம் சூரனை கும்பிப் பிடிச்சிருக்கு?

"அது சூரனாட்டுற பெடியன் கீழ விழுந்து கால் முறிஞ்சு போச்சாம் ஆசுப்பத்திரிக்குக்கொண்டு போறாங்கள் வருசம் வருசம் அவன்தானாம் மேல நிண்டு ஆட்டுறவன் பாவம் பெடியன் முழங்காலோட அடி"

"சூரன் இனி அவரை சர்வதேசப் பேச்சாளராக்குவாரோ?"

"என்ன தம்பி சொல்லுறாய்?"

"இல்ல எங்கட போர் கதையிலயும் இப்படி நடந்தது அதுதான் சொல்ல வந்தனான்"

"தம்பி இது வடக்குவீதி பாரும் சூரன் நிறைய ஆயுதங்களோட வாறான். எல்லாத் தம்பிமாரும் அவனுக்காக போர் செய்து செத்துப்போனதும் சூரன், தானே முருகனோடை போர் செய்ய வாறான்"

"ஏனணை இந்தப் போருக்கு சனங்களும் சூரனுக்கு முருகனுக்கு எண்டு கட்சி கட்டி நிக்குமோ?"

"இல்லைத்தம்பி சனம் கும்புடுறது எப்பவும் முருகனைத்தான். ஏன் சூரனை ஆட்டுற ஆக்கள் கூட முருகபக்தர்கள் தான். சூரன் போரில மட்டும் சூரனை சூரனோடை நிண்டு ஆட்டுவினம்"

"கடைசியில சூரன்ரை தலையையும்

**24ம் பக்கம் பார்க்க..**

## தமிழ் ஈழமும் இடதுசாரிகளும்



# ஈழம் ஒரு தொடர்கதை

சின்னத்தம்பி வேலாயுதம்

முன்னுரையில் கூறப்பட்டபடி இடதுசாரிகள் பற்றிய வரலாறும் விமர்சனங்களும் இதில் அடங்கும். "இடதுசாரிகள்" (LEFTIST) என்ற சொற்பதம் இந்த இருபதாம் நூற்றுண்டு முழுவதையும் ஆக்கிரமித்துள்ளது. இந்தச் சொற்பதம் பிரித்தானிய பாராளுமன்றத்தை மையமாக வைத்து பிரபல்யமாகி இன்று தேசிய சக்திகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் சோஸலிசவாதிகள், கம்யூனிஸ்ட்டுக்கள் ஆகிய எல்லோருக்கும் பொதுவான ஒரு சொற்பிரயோகமாக நடைமுறையிலுள்ளது. பாராளுமன்றத்தில் வலது பக்கம் ஆளும் கட்சியும் இடது பக்கம் எதிர்க்கட்சியும் என்ற மரபு இடதுசாரிகள் என்ற சொற்பிரயோகத்தை உபயோகிக்க காரணமாயிருந்திருக்கும். ஆனுல் இன்னெரு உண்மையும் இதனுள் புதைந்து கிடக்கிறது. அதாவது பாராளுமன்ற ஆட்சி முறையில் இடதுசாரிகள் இடது பக்கத்திலேயே நிரந்தரமாக இருப்பர் என்பதே அது.

கார்ள் மாக்ஸின் தத்துவத் தோற்றத்தின் பின் பல வருடங்களுக்கு பிறகு 1917 ல் ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் வெற்றி "உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள் "என்ற தத்துவத்தின் வெற்றிக்குக் கிடைத்த நெம்புகோலாக உலகம் முழுவதும் வியாபித்தது.

மதத்தத்துவங்கள் பழமையானவை என்பதுடன் சமூக மேம்பாட்டுக்கான வழிகளையும் பல நூற்றுண்டுகள் பேணி வந்த போதும் அதன் நம்பகத் தன்மையில் எழுந்த கேள்விகள், புதிய தத்துவமொன்றின் தோற்றத்துக்கு வழி வகுத்தது. மார்க்ஸ் பழைய வரலாற்றை ஆய்வு செய்ததன் மூலமும் பழைய தத்துவவழிகளின் வாதங்களை ஆய்வு செய்தும் எழுதினுர். மத தத்துவங்களில் பழமை வாய்ந்த இந்து தத்துவம் பொருளையும் விஞ்ஞானத்தையும் விட மெய் ஞானமே ஆன்ம ஈடேற்றத்துக்கு முக்கியமானது என்று கூறுவதற்கு நேர் எதிர்மாருக மார்க்ஸ் தனது பொருள் முதல் வாதக் கோட்பாட்டை முன் வைத்தார். இது விஞ்ஞானபூர்வமான சமூக நடைமுறைக் கோட்பாட்டை வலியுறுத்தியது. ஆனுல் அவரின் தத்துவம் நடைமுறையில் போடப்படும்போது புதிய தத்துவ விளக்கங்களையும், வழிகாட்டலையும் வேண்டி நின்றது. 20 ம் நூற்றுண்டில் பரீட்சிக்கப் பட்டு வெற்றி கண்ட இந்த தத்துவம் நூற்றுண்டின் முடிவில் பல புதிய கேள்விகளை எழுப்பி ஒரு சரிவு நிலையிலுள்ளது.

இந்தத் தத்துவம் பூரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளது அல்லது நிராகரிக்கப்படப்போகிறதுஎன்றுகூற முடியாமலுள்ளதுடன் முதலாளித்துவ கோட்பாடுகளின் வறுமை காரணமாக மீண்டும் பல திருத்தங்களுடன் மீண்டும் மேடையேறச் செய்யும் எனக் கருத வேண்டியுள்ளது.

இனி விடயத்துக்கு வருவோம் 1917ல் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதை தொடர்ந்து உலகத்தின் பார்வை சோவியத் யூனியன் பக்கம் திரும்பியது. ஆனுல் இலங்கையில் உடனடியாக எந்த நிகழ்வும் இடம் பெறவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைத் தனத்தில் அமைதியாகக் கழிந்த காலம் அது. 1931 ல் டொனமூர் கமிஷன் சர்வசன வாக்குரிமையை இலங்கைக்குச் சிபார்சு செய்த பின் தேசிய எழுச்சிக்கான சூழல் படிப்படியாக வளரத் தொடங்கியது.

1934ம் ஆண்டு தேசிய ஆதரவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும்கொண்ட "சூரியமல்" இயக்கம் தொடங்கப் பட்டது. இதன் செயற்பாடுகளில் ஒன்று முதலாம் உலக மகாயுத்த நிறுத்த நாளான நவம்பர் 11ம் திகதி யுத்தத்தில் மாண்ட வீரர்கள் நினைவாக விற்கப்பட்ட "காகிதப்பூ" விற்பனையை எதிர்த்ததாகும். இது ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய உணர்வைத் தட்டியெழுப்பும் போராட்டமாகும். 1939ம் ஆண்டு வரை அதாவது இரண்டாவது உலகயுத்தம் தொடங்கிய ஆண்டுவரை இது நீடித்தது. 1931ல் ஏ.ஈ. குணசிங்கவின் கட்சியும் தொழிற்சங்கமுமே செயற்பட்டது. அகில இலங்கை தொழிற் சங்க காங்கிரஸ் செயற்பட்டது. 1935 ம் ஆண்டு லங்கா சமசமாஜக்கட்சி உதயமானது. இரட்டையர்கள் என அழைக்கப்பட்ட பிலிப் குணவர்த்தன, என்,எம்.பெரேரா ஆகிய இருவரால் இந்த கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய வாதிகளுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு வாதிகள் சோஸலிச, கம்யூனிஸ வாதிகள் என பலதரப்பட்டோருடைய கூட்டணியாக இது விளங்கியது. இந்தக் கட்சி ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியதுடன், சோஸலிசக் கருத்துக்களைப் பரப்புவதிலும் ஈடுபட்டது. இந்தக் கட்சியும் 1939-40ம் ஆண்டு ட்ரொஸ்க்கியவாத தத்துவார்த்தப் போராட்டத்தால் பிளவுபட்டது. ட்ரொஸ்க்கியவாதிகளால் கம்யூனிஸ்ட்டுக்கள் எனக் கருதப்பட்டோர் வெளியேற்றப்பட்டனர்.

வெளியேற்றப்பட்ட கம்யூனிஸ்டுக்கள் "தொழிலாளர் மன்றம்" என்ற ஸ்தாபனத்தைத் தொடங்கினர். இதன் முக்கிய வேலை தொழிற் சங்கங்களை ஸ்தாபித்தமையாகும். அதனைத் தொடர்ந்து "ஐக்கிய சோஸலிஸ்ட்" கட்சியை ஆரம்பித்தன. இது தான் பின் இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்றம் பெற்றது. 1943ம் ஆண்டு யூலை 3ம் திகதி ஐக்கிய சோஸலிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. ஆனுல் கம்யூனிஸ்ட் கட்சி என்ற வகையில் அது சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இந்திய, பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் மட்டும் தொடர்புகளை வைத்திருந்தது.

1940 ம் ஆண்டு ஐக்கிய

சோஸலிசக்கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் தடைசெய்யப்பட்டன. ல.ச.ச. கட்சி தலைவர்கள் கண்டி போகம்பரையில் சிறை வைக்கப்பட்டனர், ஐக்கிய சோஸலிசக் கட்சியைச் சேர்ந்த எஸ்.ஏ. விக்கிரமசிங்க, இன்னும் சிலருக்கெதிராக வழக்குகள் போடப்பட்டு சிறை சென்றனர்.

போல்ஷ்விக்-லெனினிஸக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னணியில் கொல்வின், லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் இருந்தனர், இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய மூன்று நாடுகளின் (அப்போது பாகிஸ்தான் - பங்களாதேஷ் இந்தியாவுடன் ஒன்றாக இருந்தது.) மகாநாடு கண்டியில் நடைபெற்றது. என்.எம்., பிலிப் சிறையிலிருந்து இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

1942ல் சிறையை உடைத்து ல.ச.சக தலைவர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடி இந்தியா சென்றனர். ஒருவருடத்தின் பின் இந்தியாவில் கைது செய்யப்பட்டு மீண்டும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு சிறையிலிருந்தனர். 2ம் உலக யுத்த முடிவில் விடுதலை செய்யப்பட்டனர். பிலிப்பும், என்எம்மும் சமசமாஜ கட்சியை புதுப்பித்தனர், கொல்வினும், லெஸ்லியும்போல்ஷ்விக்-லெனினிஸக் கட்சியை தொடர்ந்தனர், இந்த இரு கட்சிகளும் 1950 ம் ஆண்டு யூன் 3ம் திகதி இணைந்து கொண்டன. இந்த இணைவின் பின் ல.ச.சக ஒரு பலமான இடதுசாரிக் கட்சியாக வளர்ச்சி பெற்றது. இந்த நேரத்தில் இரண்டு பிரதான இடதுசாரிக் கட்சிகளே முழு இலங்கையிலும் வேலை செய்தன. ல.ச. ச.க கம்யூனிஸ்ட் என்பனவே அவை.

1947ம் ஆண்டு நடைபெற்ற பொதுவேலை நிறுத்தம் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்தது. இடதுசாரிகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த வேலை நிறுத்தம் பெருவெற்றி பெற்றதனால் பிரிட்டிஸாரின் கடற்படை நகரை பாதுகாத்தது. இராணுவம் குவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று கொலொன்னவை எண்ணெய் குதங்களை நோக்கி முன்னேறிய போது பொலிஸார் இடைமறித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அரசாங்க எழுதுவினைஞரான கந்தசாமி என்பவர் கொல்லப்பட்டார். அரசின் சகல பலப் பிரயோகங்களும் பாவிக்கப்பட்டு மூன்று வாரங்களில் வேலை நிறுத்தம் அடக்கப்பட்டது. தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர்.

இலங்கையில் தொழிலாளர் கோரிக்கைகளை அடக்கும் வழிமுறைகளையும் அரசு நடைமுறையில் போட்டு அனுபவத்தைப் பெற்றுக் கொண்டது. ஆனால் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.கட்சி 1947 தேர்தலில் இதன் பலனை அறுவடை செய்தது. 101 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் 46 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மை அரசை அமைக்கத் தேவையான 47 ஆசனங்களைப் பெருமையால் கூட்டுச் சேர வேண்டியேற்பட்டது. இதை ஜி. ஜி.யும் ஜி.ஜி யை ஐ.தே.க வும் பயன்படுத்திக் கொள்ள வழி செய்தது.

1950ல் இணைந்த ல.ச.ச.க போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சி மீண்டும் 1951ல் ஒரு பிளவை சந்தித்தது. 1951ல் பிலிப் குணவர்த்தன புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சியை ஸ்தாபித்தார். 1954ல் மீண்டும் இடதுசாரி ஐக்கியம் கட்டி எழுப்பப்பட வேண்டுமென்ற முயற்சியை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்தது. பிலிப் இதற்கு சம்மதித்த வேளை ல.ச.ச கட்சிக்குள் மீண்டும் உடைவு ஏற்பட்டது. ல.ச.ச கட்சி நடத்திய மகா நாட்டில் ஐக்கியத்துக்கான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இதன் விளைவு ரீ.பி சுபசிங்க, வில்லியம் டி சில்வா, ஸ்ரன்லி திலகரத்ன போன்றோர் ல.ச. ச.க வை விட்டு விலகினர். இவர்களில் ஸ்ரன்லி திலகரத்ன உட்பட்ட பலர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்கள்.

அடுத்து 1953ம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தால் பற்றிக் குறிப்பிட்டேயாகவேண்டும். அதே ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன 25 சதமாக இருந்த ஒரு படி அரசியின் விலையை 70 சதமாக அதிகரித்ததுடன், புகையிரத தபாற் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டது. பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு நிறுத்தப்பட்டது. இதை எதிர்த்து மூன்று இடது சாரிக்கட்சிகளும் (பிலிப் குணவர்த்தன உட்பட) மிகப் பெரிய ஹர்த்தாலை நடத்தினர். அரசு நிலை குலைந்தது. பொலிஸார் ஏவி விடப்பட்டனர். 12 பேர் சுட்டு கொல்லப்பட்டார்கள். இந் நிலையில் வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்டது. ஆனால் பிரதமராயிருந்த டட்லி சேனநாயக்காவும் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என பதவியை ராஜினாமாச் செய்து விட்டு லண்டன் சென்றார். டி.எஸ்.சேனநாயக்காவின் மருமகனை சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமரானார்.

அடுத்த அரசியல் திருப்பம் 1956ம் ஆண்டு தேர்தலில் ஏற்பட்டது. ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஸ்தாபித்த பண்டார நாயக்காவுடன் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டில் பிலிப் குணவர்த்தனவின் கட்சி இணைந்து ஆட்சியைக் கைப்பற்றியதாகும். இதில் சிறப்பம்சம் எதிர்க்கட்சி தலைவராகவும் இடதுசாரியான என். எம்பெரேரா (14 ஆசனம்) வந்ததுதான் (தொடரும்)


## ஒரு சிறு கதை

1947ம் ஆண்டுப் பொது வேலை நிறுத்தத்தில் பொலீஸாரால் சூடுபட்டு இறந்த கந்தசாமியின் பூதவுடல் காலிமுகத்திடலில் பல்லாயிரம் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுப் பின் புகையிரதத்தில் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டது. என்.எம் உட்பட ல.ச.ச தலைவர்கள் உடன் சென்றனர். இதே புகைவண்டியில் ஜி. ஜியும் தனது சொந்த பயணத்தை மேற் கொண்டார். யாழ் புகையிரத நிலையம் மக்களால் நிரம்பி வழிந்தது. ஜீ.ஜீ. முதலில் இறங்கி அங்குள்ள மக்களுக்கு சொன்னார் "பாருங்கள் சிங்களவன் சுட்டுப் போட்டு அனுப்பியிருக்கிறதை" என்று கூறிச் சென்று விட்டார். அந்த இனதவாதச் சொல் அவரின் எதிரியும் அப்போதைய உள்நாட்ட மைச்சருமாயிருந்த பொன் அருணாசலத்தின் மகன் மகாதேவாவை 1947ல் யாழ் தொகுதியில் தோற்கடிக்க உதவியது.

குறுநாவல்

# வன்னி மண்

வ.ந. கிரிதரன்



முள்ளியவளைச் சந்தைக்கு மேற்குப் புறமாக, பிரதான பாதையிலிருந்து செல்லும் மண்ரோட் வழியாகச் சென்ருல் அக்காட்டுப் பகுதியை அடையலாம். அடர்ந்த, செறிந்த ஆழமான காடு அது. ஒரு கோடை காலம். சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் கதையோடு கதையாக முள்ளியவளைக் குமரன் கூறிஞன்.

"டே ராகவா.... எங்கட ஊரிலையிருக்கிற காட்டுப் பகுதியிலை பெரியதொரு அதிசயமேயிருக்கு...."

எனக்கு அவனது வார்த்தைகள் ஆர்வத்தையேற்படுத்தின. வன்னிக் காட்டுப் பகுதிகளில் யானைகள் சிறுகதைகள், கரடிகள், மலைப்பாம்பு களெல்லாம் இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அவற்றைப் பற்றித்தான் ஏதாவது குமரன் கூறப்போகின்ருனே என எண்ணினேன்.

"பெரிய அதிசயமா.. அப்பிடியென்ன பெரிய அதிசயம்....."

"நடுக்காட்டுக்குள்ளை ஒரு பகுதியிருக்கு.. எந்தக் கோடை யென்ருலும் அங்கையொரு இடத்திலை மட்டும் நீர் வற்றுவதேயில்லை. அது ஒரு சின்ன ஊற்று.' இந்த முள்ளியவளைப் பகுதி இயற்கையான ஊற்றுக்களிற்குப் பெயர் போன பகுதி, தண்ணீருற்று என்ருெரு புகழ்பெற்ற பகுதியிலுள்ள கேணி இயற்கையூற்றுக்களில் முக்கியமானது.

"சில சமயங்களில் கடுங்கோடையென்ருல் குளங்களெல்லாம் நீர் வற்றிக் காய்ந்து விடும். ஆனல் இந்தப் பகுதியில் மட்டும் நீர் ஒருக்காலும் வற்றவே மாட்டாது...."

எனக்கு அப்பொழுதே அப்பகுதியைச் சென்று பார்க்க வேண்டும போலிருந்தது.

"இதனலை இந்தப் பகுதி வேட்டைக்காரங்களிற்குப் பிடிச்ச இடம். எப்பிடியும் தண்ணி குடிக்க வரும் மிருகங்களைப் பிடிக்க ஈஸியான இடம்"

"குமரன்.. ஒரு நாளைக்கு அந்த இடத்தைக் கொண்டு போய்க் காட்டேன்... பார்க்க ஆசையாயிருக்கு"

"போறதெண்டால் லேசான தில்லை..... அந்தப் பகுதி நடுக்காட்டுக்குள்ளையிருக்கு.... ஒற்றையடியப் பாதை வழியாகத் தான் போகவேண்டும்... பயங்கரமான காட்டு மிருகங்கள்.. கரடி, காட்டெருமை யெல்லாம் இருக்கிற இடம்...."

ஆழநடுக்காடு, ஓங்கிய பெரிய மரங்கள் மிருகங்கள் எனக்கு புல்லரித்தது. எனக்கு மிகவும் பிடித்தமான விடயங்கள் அவற்றின் பின்னல் மறைந்திருந்த ஆபத்தைவிட அவற்றின் அழகுதான் என்னைக் கவர்ந்தது. எப்படியும் அந்தப் பகுதியைச் சென்று பார்த்து விடவேண்டும் போல் மனதினுள் தீர்மானம் செய்து கொண்டேன். அவற்றிலிருந்து குமரனைச் சந்திக்கும் போதெல்லாம் நச்சரிக்கத் தொடங்கினேன். அவனலும் என் நச்சரிப்பைத் தாங்க முடியவில்லை.

"எங்களாலை அங்கையெல்லாம் தனியப்போக ஏலாது. என்ரை மாமாயிருக்கிருர். அவருக்கு நேரமிருந்தால் தான் போகலாம் சனி, ஞாயிறென்ருல் அனேகமாய் வீட்டை தான் நிப்பார். எதுக்கும் ஒருக்கா எங்கடை வீட்டை வா .....பார்ப்பம்..."

எனக்கோ உற்சாகம் கரை புரண்டது. துள்ளிக் குதித்தேன். ஒரு சனிக்கிழமை குமரன் வீட்டிற்குப் பயணமானேன். இவனது வீடு முள்ளியவளைச் சந்தைக்கண்மையில் தான் அமைந்திருந்தது. ஊரில் பேர் போன குடும்பம் காணி, வளவு அது இதென்று ஆடம்பரமாக வாழ்ந்த குடும்பம். இவனது அப்பா ஒரு தீவிரமான மண் உபாசகர். பிறந்த மண்மேல் அளவுகடந்த பற்று வைத்திருந்தார். பிள்ளைகளிற்கெல்லாம் வன்னி மண்ணின் மணம் கமழும் பெயர்களையே வைத்து விட்டார். குமரனின் உண்மையான பெயர் முல்லைக்குமரன். இவனது சகோதரனின் பெயர் கைலை வன்னியன். சகோதரியின் பெயர் நல்லநாச்சி, கைலை வன்னியனைப் பற்றி முதன் முதலில் அறிந்தது அப்பொழுதுதான். பண்டார வன்னியனைப் போல புகழ்பெற்ற இன்னுமொரு வன்னி மண்ணின் குறுநிலவரசன். பனங்காமப் பகுதியின் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவன். இவனைப் பற்றிய நாடகப் பிரதியொன்றையும் அவர்களிடம் பெற்றேன். கரவை கிழார் எழுதியதென்று நினைக்கின்றேன் பெயர் "தணியாத தாகம்"

இரண்டு நாட்கள் தான் அங்கு தங்கியிருந்தேன். நல்ல உபசரிப்பு. நல்ல மனிதர்கள். என்னுடைய நல்ல காலம் முல்லைக்குமரனின் மாமா வீட்டில் தானிருந்தார். முதலில் அவர் சம்மதிக்கவில்லை. அவரிடமிருந்த. வயலில் பன்றி சுடுவதற்காக வைத்திருந்த கட்டுத்துவக்கு பழுதாகியிருந்தது. இந்த நிலைமையில் எந்தவித ஆயுதமுமில்லாமல் காட்டுக்குள் அதுவும் குறைந்தது பத்து மைல்களாவது காட்டினுள் நடப்பதென்ருல் ஆபத்தான விடயமென்பதை அவர் விளக்கினுர். எனக்கோ ஆர்வத்தின் முன்னல் ஆபத்து பற்றிய விடயம் அடிபட்டே போய்விட்டது. கடைசியில் என் ஆர்வத்தைக் கண்ட குமரனின் மாமா சம்மதித்தார்.

அடுத்த நாள், ஞாயிறு காலை, சாப்பாடு முடிந்த கையோடு நான், குமரன், குமரனின் மாமா, மாமாவின் நண்பர் ஆக நாலு பேர் பயணத்தைத்

தொடங்கினோம். என் நெஞ்சின் ஆழத்தில் மறக்க முடியாதபடி பதிந்துவிட்ட சம்பவங்களில் இந்த 'நீண்ட பயணமும்' ஒன்றாக அமைந்து விட்டது. 'துரோகி' ராமனின் முடிவு எனக்கு வாழ்க்கையின் நிலையாமை பற்றிய நியதியை முதலில் உணர்த்தி வைத்ததென்றால், இந்த 'நீண்ட பயணம்' வாழ்வு பற்றிய வேறு சில பக்கங்களை எனக்குக் காட்டி வைத்ததென்றுதான் சொல்லவேண்டும். உணர்வு சில சமயங்களில் எவ்விதம் அறிவை அடிமைப்படுத்தி விடுகிறதென்பதை இப்பயணம் முதலில் உணர்த்தி வைத்தது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் எப்படி மனிதனை மாற்றியமைத்து விடுகின்றனவென்பதையும் இப்பயணம் எனக்குத் தெளிவாக்கி வைத்தது.

இன்று நினைக்கும் பொழுது ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. உண்மையில் நம் வாழ்க்கை கூட இது போன்றதொரு பயணம் தான். இன்பத்தை அடைதலென்றதொரு குறிக்கோளை வைத்துக் கொண்டு ஒவ்வொருவரும் நடந்து கொண்டிருக்கின்றோம். இடையில் எதிர்படும் சூழல்கள் முன்கூட்டியே அறிய முடிவதில்லை. ஆபத்தான சூழல்கள் எதிர்ப்படுமேயென்று கவலைப்பட்டுக்கொண்டு ஆர்வத்துடன், நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடர்கின்றோம். வாழ்க்கையென்பதே இப்படியொரு பயணம்தானென்பதைக் கூட அந்தச் சிறுவயதில் நாங்கள் நடாத்திய 'நீண்டபயணம்' குறிப்பாக உணர்த்தி வைத்தது.

ஆழநடுக்காட்டினுள்ளிருந்த அந்த நீரூற்றிற்குக் கூட ஏதோவொரு பெயர்....சரியாக நினைவில்லை. 'கள்ளூறல்' என்று நினைக்கின்றேன். குமரனைக் கண்டால் அல்லது யாராவது முள்ளியவளைக் காரரைக் கண்டால் கேட்க வேண்டும். அன்று பயணத்தைத் தொடங்கும் முன்னர் வயிறு முட்டச் சாப்பிட்டோம். இடையில் பசித்தால் சாப்பிடுவதற்காகக் கொஞ்சம் பார்சலாகவும் கட்டிக் கொண்டோம். காட்டிற்குச் செல்லும் வழியில் குமரன் வீட்டாரிற்குச் சொந்தமான வளவொன்றிருந்தது. தென்னை, பலா, கொய்யா, மாதுளம்பழ மரங்கள் பல மண்டிக்கிடந்த வளவு. அப்பொழுது பலாப்பழ சீசன். ஒரு பழத்தை வெட்டிச் சாப்பிட்டோம். குமரனின் மாமாவும், நண்பனும் தென்னங்கள் கொண்டு வந்திருந்தார்கள். குடித்தார்கள் அதுவரை சிறிது அமைதியாகயிருந்த அவர்களிருவரும் அதன் பிறகு உற்சாகமாகிப் போனார்கள். அடிக்கடி சிரித்துக் கொண்டார்கள். அடிக்கடி சிகரட் பிடித்துக் கொண்டார்கள். மேலும் பலமாகச் சிரித்துக் கொண்டார்கள். அவர்களதுசிரிப்பிற்கு தென்னங்கள்தான் காரணமென்று எண்ணிக்கொண்டேன். நீண்ட காலத்திற்குப் பின்னர் தான் தெரிந்தது தென்னங்கள்ளோடு இன்னுமொரு காரணமுமிருந்தது .....அது......கஞ்சா.

## நிருபா...

(தேனீ) கவிதையில் நிருபா இப்படி எழுதுகின்றார்:

***"மனதுள் துள்ளும்
உணர்வுகளை அள்ளிக்
கொட்ட
ஆசைதான்....
ஆனால்
எழுதுதல் இங்கே
தடை செய்யப்பட்டுள்ளது***

***சுதந்திரம்
கம்பிகளுக்குப் பின்னால்
இன்னமும்
வாழ்ந்து கொண்டு
தானிருக்கின்றது***

***நான்
போராடிக்கொண்டிருக்கின்றேன்.
"***

நிருபாவின் போராட்டம், துப்பாக்கி தூக்கி எம்மவர் நடத்துகின்ற போராட்டம் போன்றதல்ல. அதற்கு எதிரான போராட்டம். ***"சோக கீதம் சொரிந்த படி வந்த தென்றல், மெதுவாய்...."*** நிருபாவிற்கு (மனிதம் தேடும் மரணங்கள்:சக்தி) ஓர் கதை சொல்கின்றது. கேளுங்கள்:

***"பெண்களும் போயாச்சு,
பெருமைகளும் தந்தாச்சு
சுடுவதில் அச்சமில்லை.
உயிர்களெல்லாம் துச்சம்
நட்பும் நலனும்
நாதியற்றுப் போச்சு
நாய்கள்தான் நாட்டில் மிச்சம்
அளவிட முடியாது
அராஜகத்திற்கு வணக்கம்!"***

வாழ்விற்கும், மனித இருத்தலுக்கும் எதிரானது தான் அராஜகம். இதற்கு மத்தியில் இருத்தலைத் தேடுதல் என்பது சுலபமான விஷயமா?

***"கல்லும் மண்ணும் சேர்த்து
கட்டிடம் வரும் முன்னே
சிறைகள் உருவாவதேன்
பெண்ணே?
சிதையும் வதையுமா?
வாழ்க்கை எங்கே?"***

(புதுப்பாட்டு தேனீ 92)

நிருபாவின் கேள்வி நியாயமானது. தீர்வுத் திட்டங்களின் போட்டோப் கொப்பிகளோடு அலைவோர்க்கு இது விளங்காது. படைப்பாளிகளினது உணர்வுகளின் பின்னே ஒளிந்து கிடக்கும் உண்மைகளைப் புரிந்துகொள்ள வர்க்க ஆத்திரங்கள் உதவா. அகதி நிலத்தில் மனரீதியாகவும், நிறசார்பின் அடிப்படையில் நாம் நசிக்கபடுவைகளையும் எழுத்தில் பதிவு செய்தலில் தப்பில்லை. இனவாத நோக்கில் ஜேர்மனிய நாஸிகளால் கொல்லப்பட்ட ஒரு பெண்ணுக்காக நிருபா கவிதை எழுதியுள்ளார். நிறம் புகலிடத்தில் ஒரு பிரச்சனையாகவே உள்ளது என்பதை நிருபாவின் அண்மைக்காலக் கவிதைகள் காட்டிநிற்கின்றன.

***"கறுப்பரைக் கண்டால்
கள்ளரென்று முடிவுகொண்டு,
சோதனைகள் செய்யும்
சிறைக்குள் தள்ளும்
அதிகார வர்க்கத்தின்
அங்கமென்று சொல்லும்
அநியாயக் காரர்களை
பச்சையாய்க் கண்டேன்."***

* * *

தீர்வுகளை வரிகளாக்காமல் மனதின் பாதிப்புகளை சிறப்பாகப் படம்பிடிக்கும் நிருபாவின் கவிதைகள் புகலிடத்தின் இருத்தலியல் மீதான விசாரணைகளுக்கு பயன்படத்தக்கன. நிருபாவின் கவிதைகள் புத்தகமாக இன்னமும் வெளிவரவில்லை. ஆனால், பிரான்ஸில் வெளியிடப்பட்ட "மறையாத மறுபாதி" தொகுப்பில் இவரது கவிதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

பையப் பையச் செய்து கொண்டான்.

சைந்தவிக்காக வாங்கிய குளிர்கால "ஜாக்கற்றை" எடுத்து வைத்தான். மறக்காமல் அவள் விரும்பும் பாடல்கள் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாவையும் எடுத்துக்கொண்டான். அவளைக் கூட்டிக்கொண்டு வரும்போது அப்பாடல்களை காரில் ஒலிக்கப்பண்ணி அவளைப் பரவசப்படுத்தவாய் அவன் திட்டம். 4.30 க்கெல்லாம் அவன் புறப்பட ஆயத்தமாகி விட்டான். இன்னும் நேரம் இருப்பதால் சுடுதண்ணீர் குடித்த நாய் மாதிரி இருப்புக் கொள்ளாமல் தவித்தான்.

இதையெல்லாம் குணம் அண்ணர் பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் ஒன்றுமே கதைக்கவில்லை.

இதெல்லாம் அவருக்குப் புதிதல்லவே. அவர் பழமும் தின்று கொட்டையும் போட்ட ஆள். 5.10 க்கெல்லாம் புறப்பட்டுவிட்டான். அது கூட எவ்வளவோ முந்தித்தான். ஆயினும் இங்கு காத்துக' கொண்டிருப்பதை விமான நிலையத்தில் செய்தால் கூட தவறில்லையே என அவன் நினைத்திருக்கக் கூடும். குணத்தார் வாசல் வரை வழி அனுப்ப வந்தார். வாசல் வரை வந்த சஞ்சயன் சற்றுத்தரித்து " என்ன அண்ணை இதுவரையும் ஒரு ரெலிபோனும் வரவில்லை. ......"

"அதைப் பற்றி யோசியாதையும். ரெலிபோன் அடிக்க அதுகளுக்கு வசதி கிடைக்கவில்லையோ என்னவோ!

ஒண்டும் நடந்திருக்காது. பிடிபட்டிருந்தால்தான் ரெலிபோன் வந்திருக்குமே." இது குணத்தார்.

"நான் யோசிக்கெல்லை. மற்றது ரஞ்சனும் மனுசியும் வருவினம். நான் வர எப்படியும் எட்டாகும்.

அவயளை இருக்கச் சொல்லுங்கோ"

சஞ்சயன் போய் வருவதாய் சொல்லாமல் சென்றுவிட்டான். எப்போதும்சொல்லிவிட்டே செல்லும் அவன்சொல்லவில்லை என குணத்தார் நினைத்துக் கொண்டாலும் அவனது பதட்டத்தைக் கருதி சமாதானம் பெற்றார்.

சஞ்சயனின் கார் பெருஞ்சாலை 401 மேற்கில் ஏறிக்கொண்ட போதுதான் அதன் மெதுவான நகருதலை உணர்ந்து கொண்டான். நல்ல காலம் நான் வேளைக்கே வெளிக்கிட்டது எனச் சந்தோசப்பட்டாலும்பிந்தப்போகிறதோ என ஐயமும் கொண்டான்.

மணிக்கூடு 6 மணி காட்டியது. வெளியில் இருட்டு. எதிர்ப்பக்க நெடுஞ்சாலையும் வெறுமையயாய் – ஒன்றிரண்டு வாகனங்கள் கடந்து கொண்டிருந்தது. ஒரு குறித்த துாரத்துக்கு அப்பால் வெள்ளை ஒளிப் புள்ளிகள் நிரையாய் 4 நிரலில் தெரிந்தது. அவ்விடத்தில்தான் ஏதோ நடந்துவிட்டது என உறுதி செய்யமுடிந்தது. இப்பக்கத்தில் சிவப்பு இரட்டைப் புள்ளிகள் நான்கு நிரலில் நிரையாய் நகர்ந்து கொண்டிருந்தது. இப்பக்கத்தவர் "விடுப்பு"ப் பார்த்துச் செல்கின்றனர் என்பது விளங்கியது.

கார் ஸ்ரீரியோவின் ஒரு பட்டனை அழுத்தினான் சஞ்சயன். உள்ளிருந்த ஒளி நாடாப்பெட்டி கக்கப்பட்டது. அதை எடுத்து விட்டு சைந்தவியின் விருப்பங்களைச் செருகிக் கொண்டான். "ஏரியிலே ஒரு காஷ்மீர் ரோஜா .... " என ஜேசுதாஸ் குரல் புறப்பட்டது. இப்பாடலைக் கேட்டதும் அவனுக்கு பழைய ஞாபகம் தோண்டி எடுக்க நேர்ந்தது.

சஞ்சயன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் சைந்தவி குடும்பம் குடியமர்ந்திருந்தது. இரண்டு வீட்டையும் பிரிப்பது ஒரு கிடுகு வேலி. சஞ்சயன் வீட்டுப் பக்கமாய் அவ்வேலியை அண்டியிருந்த கொய்யா மரத்தின் கீழ் இருந்து இவன் படிப்பது வழமை. இதை ஒத்தபடி அவள் வீட்டு மாமர நிழலில் அவள் படித்துக் கொள்வாள். இவர்கள் எங்கை படிக்கிறது. இருவரும் கதைத்துக் கொள்வார்கள்.

அவ்வேலியில் இருந்த ஒரு பொட்டு வழியே பார்வையைப் பரிமாறிக்கொள்வார்கள். ஒரு முறை " சைந்தா நாளைக்கு ஒரு படத்துக்குப் போவமே ?" மெதுவான குரலில் சஞ்சயன் கேட்டான்.

"முந்தியே உங்களுக்கு சொல்லிட்டன். கலியாணத்துக்கு முதல் எங்கையும் நான் வரமாட்டன். அங்கை இங்கை எண்டு எங்கையும் கூப்பிடவேண்டாம். " கொஞ்சம் அழுத்தமாய் சொன்னாள்.

" ஆனா மணவறைக்கு வருவீர்தானே." இந்தக் கேள்விக்கு சைந்தவி கிளுக் என்று சிரித்துக்கொண்டாள். என்ன நினைத்தாளோ திடீரென்று எழுந்து வந்து அந்தப் பொட்டுக்குள்ளால் கையை நீட்டி " எங்கை சத்தியம் பண்ணுங்கோ நீங்கள் மணவறைக்கு வாறதாய் இருந்தால் அது என்னோடையாய் தான் இருக்கவேணும்........"

சஞ்சயன் எழுந்து சென்று அவளது கையைப் பிடித்து தன்கையால் மெதுவாக அடித்து சத்தியம் சொன்னான்.. இது இவர்களது முதல் ஸ்பரிசம். சைந்தவி படக்கென கையை இழுத்துக் கொண்டாள்.

" என்ன என்ன நடந்தது ...... " சஞ்சயன்

"நாளைக்குச் சொல்லுறன் " சொல்லிக் கொண்டே அவள் வீட்டுக்குள் ஓடிவிட்டாள். அடுத்த நாள் சந்திப்பில் ஒரு ஒலிநாடாவைக் கொடுத்தாள். அதை அவன் ஒலிக்கப் பண்ணியதில் அதில் "கண்படும் போதே கசங்கிய மேனி கைபடும் போது என்னாகும்" என்ற "ஏரியிலே "பாடலின் ஒரே ஒரு வரிமட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

விபத்து நடந்த இடத்தை நெருங்கிவிட்டான். மறு பக்கத்தில் மல்லாக்காய் கிடந்த ஒருவரை காருக்குள் இருந்து இழுத்து எடுத்துக் கொண்டிருந்தனர். அருகில் லொறி ஒன்று "ட" வடிவில் நின்றிருந்தது. அதற்கிடையில் இன்னொரு கார் முஞ்சியை லொறியிற்குள் செருகிக் கொண்டு நின்றிருந்தது.

சஞ்சயன் வாகன இறுக்கத்தில் இருந்து விடுபட்டான். "விமானக்குறியை"ப் பின்தொடர்ந்து 6.35 க்கு விமான நிலையத்தை அடைந்தான். காத்திருப்போர் கூட்டத்தில் நிற்பதும் நடப்பதுமாய் இருந்தான். சிலரை கறுத்தத் தொலைபேசிக்கு வரும்படி அழைத்தனர் குடிவரவு அதிகாரிகள். இவனை மட்டும் அழைக்கவில்லை. 7.40 இருக்கும். சைந்தவி தட்டுப்பட்டாள் கொஞ்சத்துாரத்தில். அருகில் ஒரு இளைஞன். அவன்தான் இவளுடன் வந்தவன் என விளங்கியது. அவர்களை நெருங்கினான் சஞ்சயன். சைந்தவியும் இவனைக் கண்டு கொண்டாள். அவள் புன்னகைக்கவில்லை. மிரண்டு கொண்டாள். முகம் மெதுவாய் கறுக்க ஆரம்பித்தது. இதயத்தில் இருந்து குருதி தலைக்கு ஓடி வந்திருக்கவேண்டும். அவள் அருகில் இருந்த பொடியனிடம் மெதுவாய் இவர் தான் சஞ்சயன் எனச் சொல்லிக்கொண்டு அப் பொடியனின் பின் ஒதுங்கிக் கொண்டாள். அந்தப் பெடியன் மெதுவாய் கனைத்துவிட்டு "அண்ணை நான் துஷ்யந்தன். இவவோடை வந்தனான். " நிறுத்தி கை குலுக்கினான். மீண்டும் "இவ இனி என்னோடுதான் இருக்கப்போறா. நாங்கள் புருஷன் பெண்சாதி என்றுதான் பதிஞ்சனாங்கள். உங்களைப் பற்றி இவ சொன்னவ. சொறி அண்ணை. அவவுக்காக நான் மன்னிப்பு கேட்கிறன்."

சைந்தவி கழுத்தில் இருந்த தாலியை கையால் பிடித்துக் கொண்டு முழித்தபடி நின்றாள். சஞ்சயனால் எதுவும் கதைக்க முடியவில்லை. விமானம் தரையில் இருந்து எழும்புங் கணத்தில் உடம்புக்குள் இதயம் குடல் எல்லாம் அறுந்து விழுவதுபோல தோன்றுமே அதே உணர்வில் அவன் நின்றிருந்தான்.

அவர்கள் இருவரும் மெதுவாக நகர்ந்தனர். சைந்தவியின் தலை குனிந்திருந்தது. துஷ்யந்தன் மட்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு தொடர்ந்தான் நடையை. சஞ்சயனுக்கு தலை கிறுகிறுத்தது. அங்கொரு கதிரையில் போய் அமர்ந்து கொண்டான். அந்த விமான நிலையம் ஏதோ அந்தரத்தில் மிதப்பதுபோல உணர்ந்தான். தான் எங்கிருக்கிறேன் அடுத்து என்ன செய்வது என்பதே அவன் சுயநினைவுக்கு விலக்காய் இருந்தது.

இரண்டு வருடங்கள் நேரடிக் காதல். கடந்த எட்டு வருடங்கள் கடிதங்களில் காதல். ஆக மொத்தம் பத்து வருடக்காதல். ஆனால் தொடர்ந்து இருபத்துநான்கு மணித்தியாலங்கள் இருவரும் சேர்ந்து இருந்ததே இல்லை. உண்மைதான். இந்த இடத்தில்தான் துஷ்யந்தன் அவளைத் தோற்கடித்திருந்தான். தரையில் இருந்து ஆகாயத்தில் பயணிக்கையில் எல்லாம் உடைக்க வேண்டும் என்ற புத்தணர்வு வருமே அதனால்தான் ஆகாயத்தில் அவன் காதலும் உடைக்கப்பட்டதோ ?

சஞ்சயன் அரைமணியில் நிதானித்தான். ஒரு துளி கண்ணீர் மட்டுமே எல்லாவற்றையும் கரைத்து அவனை நிமிர்த்தியது.

(இக்கதையில் உண்மை இல்லாமல் இல்லை)

A. R. K. MARKET

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள், கடலுணவு வகைகளை
மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள்
வாடகைக்குப் பெற...

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**


★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள்,
இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப்
பொருட்கள்
★ **Frozen seafood**

**CD, Audio**
**மலிவு**
**விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

**ஏ.ஆர்.கே மார்க்கட்**
**(416) 421 3429**

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

**பரீட்சித்துப்பாருங்கள்**

## TRY FIRST

**பலர் இச்சிகிச்சை மூலம்
பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922-0478

# Anita's Unisex

**239 Carlton St, West of Parliament**

## Tel:922 0478

**Ladies' and Men's**
Specializing in Hair CutsPermanents, Tinting and BleachingHair Removal, Permanent Eyelashes Nails Facial Scalp Clinic
**Cure against Hair loss**
Foam, Spiral Perm, Custom Uniperm
Who specialize in hair cutting and long hair

**Perms $30 & up**
**Try One (1) Professional Skin Care Treatment For only $20.00***
*For New Clients Only *By Appointment only



An off centre and full neckline are the main features on this conservative, short precision scissor cut. May be blown on air dried



Prestige- a short cut featuring a perm Easy-to-look after Lamp or air dried

# SIA TRIANTOS

**Income Tax & Accounting Service**
**(416) 469-4906/ 922-0478**

## It's Tax Time!!

We offer a professional, accurate and computerized service by competent tax planners. We help you lower your taxable income using tax plan strategies.
**We know how to best handle your changing income tax situation.**

We are goverment authorized **Electronic Filing (EFILE). EFILE** is a fast, accurate and paperless new system which enable us to transmit your tax return inexpensively directly to Revenue Canada. Your Return will be processed by Revenue Canada and You will receive your refund within 3-14 days.
**Income Tax By Phone** ™ Service is available again this year. Simply call and give us all your relevant tax information. Your computerized Income Tax return will be delivered to your door- with an extra copy for yourself.

Our prices are competetive... As low as $19.99
You will be satisfied with our service, price and professionalism.
Call to arrange an appointment at our office or in your home at your convenience.

**It is time to benefit from our personalized tax service. Don't forget. We also offer free pick up and delivery service.**

# கனடாவில் வாக்கிய பஞ்சாங்கம்

**சிவப்பிரகாசம்**

"வாரும் ஐயா சிவப்பிரகாசம் , குற்றங் கண்டு பேர் வாங்கும் புலவர்களில் நீரும் ஒருவனோ?" என மனச்சாட்சியே "நான்" இல்லாத சமயம் பேசிக் கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன எழுதிவிட்டேன். காகம் வெள்ளை நிறம் என பிரம்புமுனையில் பள்ளிக்கூட வாத்தியார் சொல்லிக் கொடுக்கும்போது "இல்லை ஐயா . அது கறுப்பு " என அந்தப் பாலகன் சொன்னால் வாத்தியார் தன் கூற்றை மறுபரிசீலனை செய்யும் அளவுக்கு தமிழினம் இன்னும் நாகரீகம் அடைந்து விடவில்லையா? விமர்சனங்கள் வியாபாரத்துக்கு எதிரியாய் இருக்கலாம். ஆனால் கலைவளர்ச்சிக்கு அறிவுப் பரிணாமத்துக்கு அவை உரங்கள். ஒவ்வொரு கலையும் முயற்சியும் எடுத்த எடுப்பிலே நேரியதாக அமைந்து விடுவதில்லை. வளைவு நெளிவுகள் படிப்படியாகவே செப்பனிடப் படுகின்றன. ரொரன்ரோ வுக்கு என கணிக்கப்பட்ட "சித்தி விநாயகர் வாக்கிய பஞ்சாங்கத்தை" பார்த்தபோது இந்த எண்ணந்தான் வந்தது. ஆனால் இத்தனை பிழைகளுடன் பஞ்சாங்கத்தை வெளியிட்டுள்ளார்களே என மிகவருத்தமாக இருந்தது.

"சோதிடர்களுக்கு சொன்னால்தான் புரியும். மற்றவர்களுக்கு சொன்னாலும் புரியாது" என்ற எண்ணமா? அல்லது பிழைவிட்டாலும் அதைக்கண்டு பிடிக்க யார் இருக்கிறார்கள் என்ற தைரியமா? அல்லது அவசர அவசரமாக கணித்ததினாலும் அச்சுப பிழைகளினாலும் வந்த துரதிஸ்டமா? என்பது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனால் இந்துக்களுக்கு பஞ்சாங்கத்தின் முக்கியத்தை உணர்ந்த இவர்கள் பஞ்சாங்கத்தில் உள்ள தவறுகளை அச்சுக்கு போகமுன் அறியவோ திருத்தவோ நினைக்காதது பல இந்துக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தவறுகள் உண்டென அறிந்திருந்தால் பஞ்சாங்கம் மக்களிடம் போய் அடைவதை ஏன் தடுக்க நினைக்கவில்லை. "மக்கள் எக்கேடு கெட்டால் என்ன" என்ற அலட்சியம் வியாபாரம் பெரிது என நினைத்ததால் வந்ததா? சரி இனி சில பிழைகளை ஆய்ந்து பார்ப்போம்.

வரிக்கு வரி உள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டாது அடிப்படைப் பிழைகளையே இங்கு குறிப்பிடுகிறேன். சில தமிழ் மாதப்பிறப்புகளில் தவறு. அதனால் தமிழ் திகதிகள் பிழை. அது பிழைத்ததும் அதை அடிப்படையான கரிநாள் , இராமா , திவமா எல்லாம் பிழை. இவை தவறானால் இதை கவனத்தில் கொள்ள வேண்டிய முகூர்த்தம் பிழைக்கும். சூரிய பாதசாரத்திலே இராசிப்பிரவேசம் எதுவோ அதுவே சங்கிராந்தியாகவும் இருக்கும். ஆனால் இந்தப் பஞ்சாங்கத்தில் பல இடங்களில் இவைகள் ஒரே நாழிகையாக இல்லை. சில மாதங்களில் வித்தியாசம் பெருமளவாக உள்ளது. இதனால் இதை உபயோகித்து எழுதப்படும் சாதகங்களிலும் தவறு ஏற்படும். விரத நிருபணங்களில் சில இடங்களில் "அபரண கால" விதி சரியாக உபயோகப்படுத்தப்பட வில்லை. உதாரணமாக தைப்பூசம். இதே போலத்தான் சிரார்த்த திதிகள் சிலவற்றிலும் குழம்பியுள்ளார்கள். சூனிய திதி பற்றி இவர்களுக்கு தெரியாதோ? அவை குறிக்கப் படவில்லை. சுபாசுப யோகம் விஷயத்தில் பஞ்சாங்கங்களில் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதைத் தவிர்த்தல் நல்லது. ஒவ்வொருவரும் ஆதாரம் காட்ட சில புத்தகங்கள் இருப்பினும் வாக்கிய பஞ்சாங்கங்கள் கடைப்பிடிக்கும் மரபை இவர்கள் அனுசரித்துப் போகவில்லை. ஒன்ராரியோவுக்கான சூரிய உதயம் தந்திருக்கிறார்கள். ஒன்ராரியோவிலேயே சூரிய உதயங்கள் இந்தத் தொங்கலுக்கும் மற்றத் தொங்கலுக்கும் இடையில் பல நாழிகை வித்தியாசம். அது சரி ரொரன்ரோவின் சூரிய உதயம் என்றாலும் அது சூரியனின் மேல்விளிம்பா? மத்தியா? கீழ்விளிம்பா? இவர்கள் தந்திருப்பது மேல்விளிம்புக்கு கணித்த சூரிய உதயத்தையே அருகியுள்ளது. சில தர்மசாஸ்த்திரங்களில் மேல்விளிம்பை உபயோகிக்கும்படி கூறி இருப்பினும் வாக்கிய பஞ்சாங்க கணக்கில் மேல்விளிம்பு பாவிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில விஷயங்களில் இரகுநாதையர் பஞ்சாங்கம் விட்ட அதே கணிப்பு (கூட்டல் பிழை)த் தவறுகள் இந்த பஞ்சாங்கத்திலும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சில வருடங்களின் முன் இராகுமாற்றத்தில் நாள் கூட்டலில் ஏற்பட்ட தவறு இலங்கையில் இதுவரை திருத்தப்படவில்லை. அதே தவறு இவர்களும் விட்டிருக்கிறார்கள் . அது எப்படி? இது பற்றிச் சில சோதிடரையும் ஆய்வாளர்களையும் கேட்டபோது "சில தவறுகள் எம்மாலும் அவதானிக்கப் பட்டன .இது அவர்களின் முதல் முயற்சி. நாளடைவில் திருத்திச் செய்யக்கூடிய பண்புள்ளவர் அந்த பஞ்சாங்க கணிதர்" என நம்பிக்கை தெரிவித்தனர். ஆனால் தவறான பஞ்சாங்கத்தை வெளிவிட்டது இந்துமதத்தையும் சோதிடத்தையும் அவமதித்ததுக்கு ஒப்பானது என்பதை இவர்கள் உணரவேண்டும்.

அங்கீகரிக்கக் கூடியதாக ஒரு வாக்கிய பஞ்சாங்கம் இன்னும் கனடாவுக்காக கணிக்கப்பட வில்லை. அந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட சோதிட கணித நிபுணர்கள் ( சோதிடமும் சோதிட கணிதமும் வேறுவேறு ) முன்வர வேண்டும். தமக்குத்தான் சகலதுவும் தெரியுமென்று நடக்காமல் பலரின் கருத்து விமர்சன பரிமாறலை அனுசரித்து கணிப்பதே கற்றவர் நெறி. கம்பியூட்டர் கணிப்பில் பஞ்சாங்கம் ஒன்று வெளிவருதாக பேச்சு அடிபடுகிறது. முன்னேற்றம் வரவேற்கத்தக்கது.

ஆனால் மனிதன் கொடுப்பதைத்தான் கம்பியூட்டர் துல்லியமாக கணிக்கும். கொடுக்கப்படும் தரவு சரியாக இல்லாமல் பிழை ஏற்பட்டால் அது கம்பியூட்டரின் தவறென சொல்லாமல் விட்டால் சரி. கனடாவில் "எவனுக்குத் தெரியும்?" என நினைத்துக்கொண்டு கிரியா பீடங்களும் இனிமேல் பஞ்சாங்கங்கள் வெளியிட இருப்பவர்களும் கண்போன போக்கில் கணக்குப் போடமாட்டார்கள் என நம்புகிறோம். விஷயம் தெரியாமல் எழுதுவதற்கு பஞ்சாங்கம் ஒன்றும் சுயசரிதம் அல்ல என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். பொறுத்திருந்து பார்ப்போம் .

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னான்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

### பழைய அரசியல் வகுப்புகளுக்கு பதிலாக புதிய அரசியல் வகுப்புகள்

நான்கு இந்திய இலங்கை உடன் படிக்கைக்கு பின்னர் "இந்திய ஆக்கிர மிப்பாளர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதை" இலக்காகக்கொண்டே ஜேவிபியின் ஒட்டுமொத்த அரசியற் செயற்பாடுகளும் அமைந்தன. இதன் பிரகாரமே ஜேவிபியின் கல்வி, பிரச்சாரம், ஸ்தாபன அமைப்பு, ஆகிய சலதுறைகளிலுமான நடவடிக்கை களும் அமைந்தன.

ஜேவிபியின் அங்கத்தவர்களை பெருக்குவதற்கான பிரதான பாதையாக அமைந்தது அரசியல் வகுப்புகளே யாகும். தோன்றியுள்ள புதிய நிலமைக்கு ஏற்ப அரசியல் வகுப்புகளும் புதிதாக தயாரிக்கப்பட்டன. 1987 டிசம்பர் மாதம் இவ்வாறாக நான்கு அரசியல் வகுப்புகள் தயாரிக்கப்ப ட்டன. அவையாவன

1. எமது நாடு வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது.
2. ஆக்கிரமிப்பாளர்களால் நெருக் கடிகள் மேலும் அதிகரிக்கப் பட்டுள்ளன.
3. இவ் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தாய்நாட்டை விடுதலை செய்யவேண்டும்.
4. ஜேவிபியினால் மட்டுமே தேசபக்த பேராட்டத்திற்கு தலைமை வழக்க முடியும்.

இவ் வகுப்புகளை நடாத்துவதற்கு முழுநேர ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான முகாம் ஒன்று 1988 ஜனவரி மாதத்தில் நடைபெற்றது. ஜேவிபி அரசியல் குழு உறுப்பினரான குணரத்ன வனசிங்க என்பவரே பயிற்சி வழங்கினார்.

முன்னர் சில வரம்புகளுக்குட் பட்டவர்களுக்கே அரசியல் வகுப்புகள் நடாத்தப்பெற்றன. ஆனால் அவ்வாறான தடைகள் இப்போது அகற்றப்பட்டன. மிகவும் பரந்த மட்டத்தில் அரசியல் வகுப்புகள் நடாத்தப் பெற்றதோடு இந்திய விரோதத்தைக் கொண்ட அனேக பகுதியினர் இவ்வகுப்புகளில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

### நெருங்கிக் கொண்டிருக்கும் பெரும்போராட்டத்திற்கு "தகுதியுள்ள" சக்திகளை ஒன்று திரட்டல்

தீர்க்கமான போராட்டம் நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தால போராட்டத்திற்கு தகுதியானவர்கள் எனக்கருதப்பட்ட பகுதியினரை நோக்கி கவனம் செலுத்தப்பட்டதோடு அப்பகுதியினரை ஒன்று திரட்டும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டதையும் இக்காலகட்டத்தில காணக்கூடியதாகவிருந்தது. கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் இருந்த உதிரிப்பேர்வழிகளே இவ்வாறு பெரும் கவனம் செலுத்தி இழுத்தெடுக்கப்பட்ட பகுதியினர் ஆவர். எப்பொழுதும் மோதுகின்ற மனோபாவத்தை கொண்டதும், எப்பொழுதும் பலவேறுபட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில ஈடுபடுபவர்களும், அனேக சந்தர்ப்பங்களில் பொலிசாருடன் மோதுபவர்களுமான இப்பிரிவினர் மத்தியிலே கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், காடையர்கள், விடுகாலிகள் என பல்வேறு தரப்பட்ட பகுதியினர் உள்ளடங்கியிருந்தனர். வடக்கின் அனேக ஆயுதக் குழுக்கள் ஆரம்பகாலத்தில் தமது இயக்கத்தின் முதுகெலும்பாக இழுத்தெடுத்ததும் இப்பகுதியினரையேயாகும். இவர்களை வன்முறைச் செயல்களில் ஈடுபடுத்துவதும் இலகுவானது. இது தொடர்பாக ஒருவகையிலான அனுபவமும் இவர்களுக்குண்டு. இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில இப்பகுதியினர் குறித்து ஜேவிபி விசேட கவனம் செலுத்தியது. உண்மையிலேயே தேசபக்த மக்கள் இயக்கத்தின் தாக்குதல்காரர்களாக அனேக இடங்களில் செயல்பட்டது இப்பகுதியினரேயாகும். எவ்வித எண்ணம் யோசனையுமின்றி நாடு பூராவும் படுகொலைகளைச்செய்வித்ததும் இப்பகுதியினருக்கு ஊடாகவே ஆகும். இறுதியில் ஜேவிபியினால் இப்பகுதியினரை கட்டுப்படுத்தக் கூட முடியாதுபோயிற்று. ஜேவிபியிலிருந்து கிடைத்த தகவல்களின்படி அரசியல் பிரிவினால் கட்டுப்படுத்த முடியாத நிலமைக்கு "பிரிவு" ("பிரிவு" என்னும் பெயர் ஜேவிபிக்குள் ஆயுதப் பிரிவையே குறித்தது) வளர்ச்சி பெற்றிருந்தது. ஆதலால் "பிரிவை" கட்டுப்படுத்துவதற்கு மேல்மட்டத்தில் தீர்மானம் கூட எடுக்கப்பட்டதோடு இதன் பொறுப்பு சமன் பியசிறி பெர்னான்டோவிடம் ஒப்படைக்கப பட்டது.

### கட்சியின் கட்டமைப்பில் மாற்றம்

1987ம் ஆண்டு இறுதிப்பகுதியில் கட்சியின் ஸ்தாபனக் கட்டமைப்பு புனரமைக்கப்பட்டது. நல்ல தொடர்புகளையும்வினைத்திறமையையும் ஏற்படுத்தவே புனரமைப்புச் செய்யப்பட்டது. அரசியல் குழுவின் நேரடி வழிகாட்டலின் கீழ் வலயம், துறை, முன்னணி என்னும் பிரதான மூன்று பிரிவுகளாக ஸ்தாபனக் கட்டமைப்பு பிரிக்கப்பட்டது. வலயத் துறைக்காக வலயக் கமிட்டிகளும், துறை முன்னணி என்பவற்றுக்காக தேசியக்கமிட்டி என இரு பிரதான வகைக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. வலயக் கமிட்டிக்குள்ளேயும் துறை, முன்னணிப் பிரிவுகள் இருந்ததோடு ஒரு வலயம் மாவட்டங்களாகவும், ஒரு மாவட்டம் பிரதேசங்களாகவும், ஒரு பிரதேசக் கமிட்டிகளிலிருந்து மேல்நோக்கி துறை, முன்னணி பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன.

வலயக் கமிட்டி மத்திய குழு உறுப்பினர்களாலும் மாவட்டச் செயலாளர்களாலும் ஆக்கப்பெற்றது. ஊவா/கிழக்கு வலயம், தென்வலயம், மேற்கு/ சப்பிரகமுவ வலயம், மத்திய வலயம், வடமத்திய வலயம் என ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஊவா/ கிழக்கு வலயத்தில் பதுளை,

மொனருகலே, அம்பாறை மாவட்டங்கள் ளும் தெற்கு வலயத்தில் களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களும், மேற்கு/ சப்பிரகமுவ வலயத்தில் கொழும்பு, கம்பஹா, புத்தளம், இரத்தினபுரி மாவட்டங்களும் மத்திய வலயத்தில் கண்டி, மாத்தளை, நுவரெலிய, குருணகலே கேகாலே ஆகிய மாவட்டங்களும், வடமத்திய வலயத்தில் அநுராதபுரம் பொலன்னறுவை திருகோணமலே மாவட்டங்களும் உள்ளடக்கியிருந்தன.

அரசியல் குழு உறுப்பினர்களின் பொறுப்பில் இருந்த சகல வலயக் கமிட்டிகளிலும் அரசியல் செயலாளர் ஒருவரும், யுத்தச் செயலாளர் ஒருவரும் இருந்தனர். சில சந்தர்ப்பங்களில் ஒரு நபரே அரசியல் யுத்தம் ஆகிய இரு துறைகளுக்குமான செயலாளர் பதவிகளை வகித்தார்.

1. ஊவா/கிழக்கு வலயம்: அரசியல் செயலாளர்: சாந்த பண்டார
யுத்தச் செயலாளர்:H.B ஹேரத்
2. தென் வலயம்: அரசியல் செயலாளர்: உபதிஸ்ஸ கமனயக
யுத்தச் செயலாளர்: சமன் பியசிறி பெர்னன்டோ
3. மேற்கு/ சப்பிரகமுவ வலயம்
அரசியல் செயலாளர்: D.M ஆனந்த
யுத்தச் செயலாளர்: சமன் பியசிறி பெர்னன்டோ
4. மத்திய வலயம்: அரசியல் செயலாளர்: பியதாச ரணசிங்க
யுத்தச் செயலாளர் H.B. ஹேரத்
5. வட மத்திய வலயம்: யுத்தச் செயலாளர் லலித் விஜேரத்ன

துறைப்பிரிவு நான்கு பகுதிகளைக் கொண்டதாகும். அவை கல்வி, நிதி, பிரச்சாரம் ஆயுதம் என்பவையாகும். இவற்றுக்கு அரசியல் குழு உறுப்பினர்களே பொறுப்பாயிருந்தனர். கல்வி குணரத்ன வனசிங்க, நிதி சோமவன்ச அமரசிங்க, பிரச்சாரம் உபதிஸ்ஸ கமனயக, ஆயுதம் சமன் பியசிறி பெர்னன்டோ எனப் பொறுப்பேற்றிருந்தனர். இத்துறைகளிலும் தேசிய, வலயம், மாவட்டம், பிரதேசம் என்னும் ரீதியில் கமிட்டிகள் நிலவின.

முன்னணி, தொழிலாளர், மாணவர், இளைஞர், மாதர் பிக்கு என்னும் அமைப்புகளைக் கொண்டதாகும். இதற்கும் அரசியல் குழு உறுப்பினர்களே பொறுப்பாயிருந்தனர். முன்னணி அமைப்புகளும் தேசிய, வலயம் மாவட்டம், பிரதேசம் என்னும் ரீதியில் கமிட்டிகளைக் கொண்டிருந்தது. தொழிலாளர் முன்னணி அமைப்புக்கு P.R.V.விமல ரத்தினவும், இளைஞர் முன்னணி அமைப்புக்கு சார்ந்த பண்டாரவும், மாணவர், மாதர், பிக்கு முன்னணிகளுக்கு D.M.ஆனந்தவும் என பொறுப்பாயிருந்தனர்.

துறை, முன்னணி ஸ்தாபனங்களின் தேசியக் கமிட்டி மத்திய கமிட்டி உறுப்பினர்களால் ஆனது.

நாடு பூராவும் 25 மாவட்டங்கள் இருந்த போதிலும் 19 மாவட்டங்களில் மட்டுமே ஜேவிபி இயங்கியது. வடக்கின் 5 மாவட்டங்களிலும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஜேவிபி வேலை செய்யவில்லை. இதன்படி 19 மாவட்டச் செயலாளர்கள், குறிப்பிட்ட சில யுத்தச் செயலாளர்களைக் கொண்டே மத்திய கமிட்டி உருவாக்கப்பட்டது.

அரசியல் குழுவில் 13 பேர் அங்கம் வகித்தனர். 1988 ல் ஜேவிபியின் அரசியல் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு:

1. ரோகன விஜேவீர 2. உபதிஸ்ஸ கமனயக 3, நந்தசிங்க எனப்படும் சுமித் அத்துகோரால 4.D.M. ஆனந்த 5.சமன் பியசிறி பெர்னன்டோ 6, பியதாச ரணசிங்க, 7, H.B. ஹேரத் 8. குணரத்ன வனசிங்க 9. P.R.B. விமலரத்ன 10. சோமவன்ச அமரசிங்க 11. சாந்த பண்டார 12. நந்ததிலக கலப்பதி 13. அரவிந்த எனப்படும் லலித் விஜேரத்ன

அரசியல் குழுவை உள்ளடக்கி மத்திய கமிட்டியின் ஏனைய அங்கத்தவர்கள் பின்வருமாறு:

14. காமினி விஜேகுணசேகர 15. எல்கிரியே முனசிங்க 16. ருகமசோமே 17.தசநாயக எனப்படும் அருணகந் தேவத்தை 18.P.தங்கராசா 19. மீரிகம சந்திரே எனப்படும் நாணயக்கார 20. உபாலி ஜயவீர 21. காமினி ஜயலத் 22. ஆனந்த இடமேகம 23. ஈஸ்வரகே ஆரியசேன 24. குணபால சந்தரசிங்க 25. பியசேன ராமனயக 26 வெலி சிரு எனப்படும் வெலிகல்லே சிறிவர்த்தன 27. ரஞ்சித் பராகிரம 28. ரஞ்சிதம் குணரத்னம் எனப்படும் ரஞ்சித் குணரத்ன 29, பால எனப்படும் P.K.B.A. இந்திர ரத்ன 30.குலே எனப்படும் வித்தியோதய அமரசிறி 31. அஜந்த எனப்படும தர்மவர்தன முனசிங்க 32. ஜயதிலக எனப்படும் புத்தளம் மெரில் 33. மாத்தளை அபேரத்ன 34. பொலன்னறுவை லெஸ்லி 35. லயனல் பெர்னன்டோ 36. சிறிமல் 37. பாலித திசாநாயக 38. பாரிந்த எனப்படும் யூட் அன்டனி 39. ஆரியசேன 40. ஒக்கம்பிட்டியே 41 K.P. ஜினதாச 42. நோமன் மானவடு 43. அருண விஜேசூரிய மத்திய கமிட்டியைச்சார்ந்தவர்கள் என பின்வரும் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

44. குணசேன திசாநாய 45. ரூபன் 46 சமர நாயக 47. கித்துல கொட 48. கல்ப இவர்கள் அனைவரும் மத்திய கமிட்டியில் அங்கம் வகித்தவர்களா, சிலர் இரண்டு பெயர்களில் அழைக்கப்பட்டாலும் ஒரு நபரா என்பதையும் திட்டவட்டமாக கூறமுடியாது. அதுமட்டுமன்றி மத்திய கமிட்டியின் மொத்த அங்கத்தவர் தொகையைப் பற்றியும் எவ்வித தவறும் அற்ற தகவலைப் பெறுவதும் கஷ்டமாக இருந்தது. ஆதலால் இங்கு குறிப்பிடப்படும் இருவேறுபட்ட பெயர்கள் ஒரு நபருடையதாகவும் இருக்கலாம்.

தீர்மானம் எடுக்கும் அதி உயர்ந்த சபை அரசியல் குழுவாகும் அதற்கு அடுத்ததாக உயர்ந்த சபை மத்திய குழுவாகும் இவற்றுக்கு கீழ் மட்டத்திலேயே வலயம், தேசிய கமிட்டிகள் நிலவின.

(தொடரும்)

### பிழை திருத்தம்

நவம்பர் 12, 1993 தாயகம் இதழில் 'கலாச்சார வரம்பு! பாலியல் சுதந்திரம்! இளைஞர் விரக்தி என்னும் கட்டுரையில் "இன்று பாலியல் சுதந்திரம், கலாச்சார வரம்புகள் பற்றிப் பேசுகின்ற மேல் நாட்டு வர்க்கத்தவர்களுக்கு......" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை தயவு செய்து "இன்று பாலியல் சுதந்திரம், கலாச்சார வரம்புகள் பற்றிப் பேசுகின்ற மேல்தட்டு வர்க்கத்தவர்களுக்கு ....." எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

# அ(று)சுவை

சங்கம் வளர்த்த தமிழர் இப்போது அரசாங்கத்திடம் பணம் கறக்க புதிய வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். இது முன்னரே கேள்விப்பட்ட தகவல் தான். வெறுமனே வகுப்புகள் நடத்தி அதற்காக பணம் வாங்குவதை விட கல்லூரி ஒன்றை தொடங்கினால் அதற்கு என்று அதிகமாகப் பணம் வாங்கலாம். இப்போது தமிழ் கலைதொழில் நுட்பக் கல்லூரி ஒன்றைத் தொடங்கியிருக்கிறார்கள். இதன் நோக்கம் அதிகமாக அரசாங்கத்திடம் பணம் வாங்குவது தான். இதன் மூலம் வேண்டியவர்களுக்கு ஆசிரியப் பதவி.. குடும்பமாகவே அரசாங்க பணத்தில் சம்பளம். சுருட்டியது போக... நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புலிக்கும் ஆங்கே பொசியுமாம்.

பதவிகள் எல்லாம் வேண்டப்பட்டவர்களுக்கு.. இங்கே திறமை என்பது பிரச்சனை அல்ல. சம்பளமும் அந்த இந்த மாதிரி.. வகுப்பு மாணவியர்க்கு பிள்ளை பராமரிப்புக்காக என்று சம்பளத்தில் வேண்டப்பட்டவர்கள் நியமிக்கப்பட, அவர்கள் பிள்ளைகளைப் பராமரிக்காமல் தங்கள் அலுவல்களைக் பார்த்துக் கொண்டிருந்ததால் பல வகுப்புகளை விட்டதும் உண்டாம்.

அங்கே கற்பிக்கின்ற பிறமொழி ஆசிரியர் ஒருவர் தகுதி கூடியவர். ஆனால் தன்னை 'எக்கச்சக்கமான பொஸ்மார் கட்டுப்படுத்துவதாக' முறையிட்டார். தமிழன் அப்படித்தான். தன்னை முதலாளி ஆக்கினால் மற்றவனை நசுக்குவான். பொருத்தமில்லாத தகுதி




## உருட்டு, பிரட்டு, வெருட்டு, சுருட்டு, திருட்டு

### அறுஞர் க(ல்)லாநிதி கியூநியஸ் ஜி

உள்ளவர்களுக்கு பொருத்தமில்லாத பதவிகள்.. ஆத்தில போறதை அண்ணை குடி, தம்பி குடி.. சே.. அண்ணை அடி, தம்பி அடி.. அங்கே தம்பி (ஆமி) அடிப்பார். இவர்கள் இங்கே அண்ணைமார் (காசு) அடிப்பார்கள்.

★ ★ ★

வாரியார் காலமாகிப் போனார். இனிமேல் மிமிக்ரி செய்பவர்கள் கொஞ்சம் மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வாரியார் மாதிரி மிமிக்ரியில் ஒருவர் சொல்வார். . வாரியார் குரலில்..

ஒரு தந்தைக்கு இரண்டு பிள்ளைகள்... தந்தை இறக்கும் போது சுருட்டைத் தூக்கிக் காட்டி விட்டு இறந்து போனார். ஒருவன் சொன்னானும் என்ன அண்ணே, அப்பா சாகும்போது இப்படிக் காட்டியிட்டு போயிட்டாரே என்று.. மற்றவன் சொன்னானும்.. அகப்பட்டதைச் சுருட்டு என்பதைத் தான் அப்படிச் சொன்னார் என்று.

அது மாதிரி தான் இவர்களும் சுருட்டுகிறார்கள். உருட்டு, பிரட்டு, வெருட்டு, சுருட்டு, திருட்டு

★ ★ ★

முனி தனது தீர்க்கதரிசம் மெய்த்தது பற்றி தன்னடக்கமாகச் சொல்லிக் கொண்டார். நானும் ஒரு தீர்க்கதரிசிதான். தீர்க்கதரிசி என்றதும் ஞாபகம் வருகிறது.

எட்டாம்வகுப்பு படிக்கும்போது தமிழ் பரீட்சையில் கேள்வி வந்தது. பின்னே நடக்கப் போவதை முன்கூட்டியே சொல்பவன் யார்? என்ற கேள்விக்கு பூசாரி, சோதிடர், தீர்க்கதரிசி, மந்திரவாதி என்று நான்கு விடைகள். கிறிஸ்தவர்களுக்கு தீர்க்கதரிசி என்ற சொல் ஏற்கனவே பரிச்சயமானது. பரீட்சை முடிந்து பஸ்ஸில் வரும்போது மற்ற பாடசாலை மாணவிகள் எங்களோடு வந்த போது அவர்களுக்கு இடையில் பலத்த வாக்குவாதம்.. சிலர் பூசாரி என்று வாதிட, வேறு சிலர் மந்திரவாதி என்று வாதிட யாருமே தீர்க்கதரிசி பற்றி பேசவேயில்லை. எனக்கும் நண்பனுக்கும் ஒரே சிரிப்பு.

★ ★ ★

இணையம் என்றால் இணையோம் என்பதே கருத்தாகும் என்று எழுதியிருந்தேனே? இப்போது இணையத் தலைவரும் செயலாளரும் இணைய மாட்டாமல் இருக்கிறார்கள். மாடு இரண்டு இணைந்திருப்பது போல இணையாக இருப்போம் என்றார்கள். இப்போது இவர்களை 'இணங்க' செய்வதே பெரும் பிரச்சனையாகியிருக்கிறது. இணை மாடு இரண்டுமே முட்டிக் கொள்கின்றன.

திருமதி அமிர்தலிங்கத்தை அழைப்பதில் இப்படி ஒரு சர்ச்சை. அழைக்கப்பட்டவரே தனது பாதுகாப்பு பற்றி கவலையின்றி சம்மதிக்கும் போது அழைத்தவர்கள் தங்கள் பாதுகாப்பு பற்றி மோதிக் கொள்வது வேடிக்கையாயிருக்கிறது.

★ ★ ★

கொஞ்ச நாளைக்கு முன்னர் செயலாளர் பரிசு பெற்ற விடயம் தலைவர் முயற்சியால் 'தகவலாகி'யது. அதே போல தலைவரின் தமிழ் சேவை பற்றிய விடயம் பிரசுரமாக செயலாளர் செய்த முயற்சி தோல்வியடைந்ததால் செயலாளர் 'மலர்ந்த' உறவுகளை முறித்துக் கொண்டார். இப்போது என்னவென்றால் ஒருவர் மாறி ஒருவர் மற்றவர் பற்றி பத்திரிகைகளில் 'மோசமான' செய்திகள் வருவதில் மும்முரமாக நிற்கிறார்கள். எங்கு போய் முடியுமோ?

இந்த நிலையில் இணையத்துக்கு விருது வேறு கிடைத்து விட்டது.

★ ★ ★

இதை தமக்கு சாதமாக்கிக் கொள்ள சிலர் மும்முரமாகியிருக்கிறார்கள். 'இங்கே

சிலர்' தான். ஒரு பகுதியை தாஜா பண்ணி கைக்குள் மீண்டும் போட்டுக் கொள்ளத் தான். 'மரையில்' ஒரு கட்டுரை.. இராவணன் என்ற பெயரில் ஒருவர்.. இந்த இராவணன் பத்து தலை உள்ளவன். அதாவது பத்து முகம் காட்டுவான்.

ஆடு புலி ஆடி விளையாடு முகம் ஒன்றே.. கிட்டுவுடன் காதல் மொழி பேசும் முகம் ஒன்றே.. மாத்தயாவை தேடி விளையாடு முகம் ஒன்றே.. தம்பியையே தாஜா பண்ணி தாங்குமுகம் ஒன்றே.. இஸ்லாமியரை கிண்டி விளையாடு முகம் ஒன்றே.. தேடலுடன் ஊடல் காட்டி ஓடுமுகம் ஒன்றே.. கூட்டணியை சீண்டி விளையாடு முகம் ஒன்றே.. அண்ணே புகழ் உரைத்து வாழுமுகம் ஒன்றே.. உலகப்பெரு தமிழருடன் மோதும் முகம் ஒன்றே.. ஈழம் நிறை புலிகளின் வால் பிடிக்கு முகம் ஒன்றே.. மாறுமுகமான பொருள் நீயருள வேண்டும்.. கியூறியஸிற்கு இதன் மகிமை சொல்லியருள வேண்டும். நீ 'சுத்தி சுத்தி' வந்தால் நான் சுற்றி சுற்றி வருவேன்.

★ ★ ★

எழுதியவரே உண்மையான பெயரைப் போடாத மர்மம் இப்போது உங்களுக்கு துலங்கியிருக்கலாம். இப்படி போட்ட பின்னர் 'இதற்கு பதிலை எழுதுபவர்கள் உண்மையான பெயருடன் பண்பாக எழுதி அனுப்புங்கள்' என்றால் அர்த்தம் என்ன? சஞ்சயன், நிசாந் முதல கொண்டு இராவணன் வரை உண்மையான பெயர் என்று நம்புவோமாக.

இந்த இராவணன் பெயர் வந்ததற்கு காரணம்... இராவணன் வீணைக்கொடியுடைய வேந்தன். இதனால் வீணைமைந்தன். வீணைமைந்தனைப் பற்றி எழுதுவதற்காக இராவணன். ஆனால் இராவணன் எழுதும் விடயம் 'கண்டேன் அன்னையை' என்று அனுமார் சீதையைச் சந்தித்தது பற்றி. என்ன பொருத்தம்? இருந்தாலும் வீணை மைந்தனை அனுமாருடன் ஒப்பிட்டிருக்கக் கூடாது.

★ ★ ★

சென்ற வாரங்களில் இந்தியப் பத்திரிகைகளைப் பார்த்து விறைத்துப் போனேன். Prince of Love பிரசாந்தின் புழுகுவெடிகள் பற்றி... இங்கு வந்து நிகழ்ச்சி நடத்தி விட்டு அங்கிருப்பவர்களுக்கு காதில் பூ சுற்றுகிறார். அன்னார் ரொறன்ரோ வந்த போது பெண் ரசிகைகள் சங்கிலிகளை வீசினார்களாம்.. ஓகோ அப்படியா? நான் கண்டது ஒரு ஆண் ரசிகர் சங்கிலி வீசியதை.. (ஒரு பெண் நெற்றிப் பதக்கத்துடன் வந்ததைக் கண்டது வாஸ்தவம்தான்) அப்பால் ரேய் தொம்சன் மண்டபத்தில் தங்கள் நிகழ்ச்சி நடந்த போது அருகில் மடோனாவின் நிகழ்ச்சி நடந்ததாம். அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்களும் தங்கள் நிகழ்ச்சியைப் பார்க்க வந்ததில் சனத்தை அடக்க முடியாமல் போய் விட்டதாம். நிகழ்ச்சிக்கு வந்ததே தாமதித்து. அதனாலேயே பெரிய இழுபாடாய்போய் விட்டது.

இவர்கள் எல்லாம் திருந்தவே மாட்டார்களா? பொறுங்கள். இவர்களுக்கு எல்லாம் ஒரு இருபத்தைந்து கேள்வி கேட்டால் தான் சரி. நம்ம வாத்தியார் சொன்னது தான் சரி, சொந்தமாய் நாலு வார்த்தை சொல்ல முடியாதவங்க கிட்ட என்ன பேட்டி?

பானுப்பிரியா என்ன சொல்லியிருப்பார் என்று தமிழகச் சஞ்சிகைகளைச் சல்லடை போடுகிறேன். இன்னமும் கிடைக்கவில்லை. நாதனைக் கண்டேனடி தோழி என்றிருப்பாரோ, கியூறியஸும் நானும் Just friends, எங்களுக்குள் நீங்க நினைக்கிற மாதிரி எந்த விதமான தொடர்பும் இல்லை என்பாரோ?

★ ★ ★

பூனகரி முகாம் தாக்குதல் இங்கே கோட்டையைப் பிடித்த புழுகம் பலருக்கு.. அந்த மகிழ்ச்சி இப்போது கரைந்தோடி விட்டது. தற்போது வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிடும் போது சில 'அரசியல் அவதானிகளின்' கருத்துக்களை சேர்த்து வெளியிடுகின்றன. இந்த அரசியல் அவதானிகளில் முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணதிலகவும் ஒருவர். இவர் கூறிய ஒரு கூற்றை இங்குள்ள பத்திரிகை ஒன்று தனது முன்பக்கத் தலையங்கத்தில் வெளியிட்டிருந்தது.

★ ★ ★

முன்பு ஒரு தடவை அமெரிக்க செனட்டர்கள் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுவதற்காக போட்டியிட்ட போது டைம் சஞ்சிகைகளில் இந்த செனட்டர்களுக்கு சில ஆலோசனைகள் என்று வெளியிட்டிருந்தார்கள். அதில் ஒன்று.. பத்திரிகையாளர்களின் தொலைபேசிகளுக்கு எந்த நேரமும் பதில் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது. இதனால் பாரிய விளம்பரம் கிடைக்கும் என்று. இவ்வாறு குறிப்பிட்ட பின்னர் ஒரு செனட்டரைக் குறிப்பிட்டு இவர் Pizza Hut மாதிரி என்று கூறியிருந்தார்கள். ஏனென்றால் இவரை 24 மணி நேரமும் கூப்பிட்டால் பதிலளிக்கத் தயாராக இருப்பாராம்.

★ ★ ★

இதைப் போலத் தான் ஹரியும். எந்த நேரமும் எந்த விடயம் பற்றியும் இவர் கருத்துச் சொல்வார். எனக்கு ஒரு சந்தேகம். ஜே.ஆரும் ஹரியும் என்று பல மாஜிகள் இப்போது இனப்பிரச்சனை தீர்ப்பது பற்றி பல தீர்வுகளை அடிக்கடி சொல்கிறார்கள். ஜே. ஆர் பிரச்சனைக்கே காரணமானவர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக் கொண்டே பிரச்சனையைத் தீர்க்காமல் மோசமாக்கியவர். இனி ஒரு ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் தான் பயப்படாமல் இனப்பிரச்சனையைத் தீர்ப்பது பற்றி யோசிப்பார்.

இதைப் போலத் தான் ஹரியும் முன்பு விமானப்படைத் தளபதியாக இருந்த போது புலிகளை அடக்குவதற்கு முயற்சி எடுக்கவில்லை. இப்போது தீர்வுகளை ரெடிமேட்டாக இரண்டு பேருமே வைத்திருக்கிறார்கள்.

ஏனப்பா முன்பு இதைச் செய்யவில்லை என்று கேட்டால் ஜே. ஆர் 'எனக்கு விமானப்படை ஒத்துழைக்கவில்லை' என்றும் ஹரி 'எனக்கு இராணுவத் தாக்குதலை நடத்த அரசியல் தலைமை அனுமதி வழங்கவில்லை' என்றும் மாறி மாறி குற்றம் சாட்டுவார்களோ என்னவோ? தீர்வு சொல்வது சுலபம். செய்வது தான் சிக்கலானது.

## சூரசம்ஹாரம்.....

விழுத்துவினம் அப்பிடித்தானே"

"ஏன் தம்பி மற்றக்கதை? சூரன் கூட சிவ பக்தன் தானே. இல்லாட்டி சூரனின் கடும் தவத்தை பார்த்த சிவபெருமான் இப்பிடியொரு வரத்தை குடுத்திருப்பாரோ?"

"அப்பிடியொரு வரத்தைகுடுக்குமளவுக்கு பெரியவரான சிவபெருமான் சூரன் தன்னில வைத்திருக்கிருனெண்டு தெரிந்தவரெண்டும் சொல்லுறியள். அவரே சூரனை கூப்பிட்டு தேவர்களை விடு எண்டு ஒரு சொல்லுக் சொல்லியிருக்கலாமே"

"சொல்லியிருக்கலாம் இல்லையெண்டு சொல்லேல்லை இஞ்சைதான் உங்கட போர் வந்து உதைக்குது"

"எதைச் சொல்ல வாறியள்?"

"வேற எதை? அப்படி சிவபெருமான் சூரனை கூப்பிட்டு கம்மெண்டு கிடவுடா கஸ்மாலம் எண்டு சொல்லப்போக அசமுகி வயித்தில குண்டை கட்டிக் கொண்டு நேர சிதம்பரம் போய் பெருமான் நடனத்தை பாக்கிற மாதிரி அவற்றை காலலை விழ.. பிறகு உமக்குத் தெரியும் தானே! சூரன் இதுக்கும் தனக்கும் சம்பந்தமில்லையெண்டு அறிக்கைவிட பெரிய பேஜாராய் போயிடும் அதாலை தான் அவர் புத்தி சாலித்தனமாய் முருகனை படைச்சவர்"

"நீங்க சொல்ல வாற முருகன்........"

"இது எங்கட கடவுளை சொல்லுறன் தம்பி. . ஆறுமுகப் பெருமானை"

"என்னண்ணை சூரன்ரை தலை விழுந்திட்டுது. போர் முடிஞ்சுதோ?"

"இல்லை தம்பி சூரனுக்கு மூன்டு தரம் தலை விழும். வெட்ட வெட்ட தலை தளைக்கும். பாரும் இரண்டாம் தரம் வாருன்"

"ஏன் இந்தத்தடவை சூரன் முகத்தை ஒரு குடையாலை மறைச்சுப் பிடிச்சுக் கொண்டு வாருன்?"

"அதுதான் மறைஞ்சு மறைஞ்சு வருகிருன் இப்ப சூரன் சிறுபான்மை இனமாய் போட்டான் பாரும் சிறுபான்மை இனத்துக்கென்று வகுக்கப்பட்ட போர்முறை இதுதானே. மறைஞ்சிருந்து தாக்குதல்"

"இதென்ன பிறகு வெள்ளைச்சீலையாலை முகத்தை மூடிக்கொண்டு வாருன்?"

"உங்கட போர் முறையில கரும்புலிமாதிரி இது வெள்ளைப்புலியெண்டு நினைக்காதையும். இதுவும் அவன் மறைஞ்சு நிண்டு போர் செய்யிறதைத்தான் காட்டுது. இன்னும் பாரும்...."

"இடே இதென்ன மாமரத்துக்குள்ளே மறைஞ்சு வாருனே? மாங்கொப்புக்குள்ள வாருன்"

"இப்ப விளங்குதே மாமரங்கள் கூட நிக்குற ஏரியாவில சூரன் நிக்கிருன். மாங்கொப்பு இரண்டாய் கிழியுது பாரும். பாரும் ஒருபக்கம் சேவல் கொடியும் மற்றப்பக்கம் மயில்கொடியுமாய் சூரன் முருகனிட்டை போகிருன். இனி முருகனை மயில்வாகனத்தில வைத்துத்தான் முன் வீதிக்கு கொண்டு வருவினம். உபவாசமிருந்த சனமும் இனித்தான் முழுகிப் போட்டு உபவாசத்தை முடிப்பினம்"

"நீங்கள் புராணக்கதையெண்டு கொஞ்சம் கொஞ்சமாய் எங்கட இயக்கத்தையும் குத்திக்காட்டுறியளோ எண்டு நினைக்கிறன் பாருங்கோ"

"நல்லவேளை உயரத்தில பிடிச்ச தீவட்டியிலயிருந்து எண்ணை எரிஞ்சபடி விழுறதைபார்த்து முருகன் ஷெல் அடிக்கிருன் எண்டு சொல்லாமல் விட்டீர்"

"அப்பிடியல்ல எனக்கு படிப்புக்காணுது சில சனம் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாது பாருங்கோ ஆனுல் இந்த புராணக் கதையை இவ்வளவு சுருக்கமாய் நீங்கள் சொல்லேக்கை இத முழுவதுமாய் படிக்கவேணும் எண்டு நினைக்கிறன்"

"நீர் படிக்காவிட்டாலும் பரவாயில்லை தம்பி ஒரு வட்டத்திற்குள்ளையிருந்து உம்மை குறைஞ்ச பட்சம் அடுத்த வட்டத்துக்குள்ளையாவது கொண்டுவர முடிஞ்சதுக்கு எனக்கு எவ்வளவு சந்தோசமாயிருக்குத் தம்பி, உலகம் பெரிசு தம்பி நீங்கள் கொஞ்சம் காலத்தை வீணடிக்காமல் வெளியில வரவேணும் அப்பதான் விளங்கும். இப்ப புராணம் படிச்சவன் எண்ட முறையில என்னையும் நீர் தட்டியிருந்தால் இப்ப தெரிஞ்சிருக்காது தம்பி"

"நாங்களும் இவ்வளவு காலமாய் ஒரு மரச்சூரனைத்தான் ஆட்டிக் கொண்டிருக்கிறம் ஆனுல் முருகனும் சூரனும் ஆயுள் காலமாய் ஒரே கோயில்ல சந்தோசமாய் அமைதியாய் இருக்கினம்"

" ஒரு மரச்சூரனில்லைத்தம்பி சூரனுகள் எண்டு சொல்லும்" ■

This newspaper is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650,3216 Compuserve

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினுல்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிருேம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

### தாயகம்
### சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60

வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

## 1472 Queen St West
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்


✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets
✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




*சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,*
*பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்*
*அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள*

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

SIVA'S TRADING CO LTD

21-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

# சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

**தோசை, இடியப்பம், அப்பம்**
**சுடச்சுடக் கிடைக்கும்**

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

P.S.S.T

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| Video Transfer (Any system) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**Tel:609-0141**

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**